




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:282 | 27-04-2026 | திங்கட்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

திங்கள்கிழமை
(27–04–2026)
பராபவ ஆண்டு,
சித்திரை–14

சூரிய உதயம் 5.50

திதி:
ஏகாதசி இரவு 8.53 வரை
பிறகு துவாதசி

நட்சத்திரம்:
பூரம் இரவு 11.33 வரை
பிறகு உத்திரம்.

யோகம் :
சித்தயோகம்

நல்ல நேரம்
காலை 6–7 மணி
மாலை 3– 4 மணி.

இராகு காலம்
காலை 7.30–9.00 மணி

எமகண்டம்
காலை 10.30 – 12.00 மணி.

சூலம்
கிழக்கு

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# “ரவுடிகளை; பாலியல் குற்றவாளிகளை வேட்டையாடி பிடிக்கும்” : பிரதமர் மோடி உறுதி

**பங்கான், ஏப்.27**

மேற்கு வங்கத்தில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு ரவுடிகளையும், பாலியல் குற்றவாளிகளையும் வேட்டையாடிப் பிடிப்போம் என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.



மேற்கு வங்கத்தின் பங்கான் நகரில் நடைபெற்ற பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, "திரிணமூல் காங்கிரஸின் காட்டு தர்பார் ஆட்சியால் முதன்மையாகப் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே. அவர்கள் மிகப்பெரிய துரோகத்திற்கு ஆளாகியுள்ளனர். சந்தேஷ்காலியில் நமது சகோதரிகளுக்கு எதிராகக் கொடூரமான அட்டூழியங்கள் இழைக்கப்பட்டுள்ளன.

திரிணமூல் காங்கிரஸின் காட்டு தர்பார் ஆட்சியின் கீழ், இளம் பெண்கள் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. மே 4–ஆம் தேதிக்குப் பிறகு, பாஜக அரசு ஒவ்வொரு ரவுடியையும், பாலியல் குற்றவாளியையும் வேட்டையாடிப் பிடித்து, அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்று கொடுக்கும். பாஜக பெண்களுக்குப் பாதுகாப்பையும், வாய்ப்புகளையும் ஒருங்கே வழங்குகிறது.

மேற்கு வங்கத்தில் பாஜக அரசாங்கம், ஒவ்வொரு ஆண்டும் பெண்களின் வங்கிக் கணக்குகளில் ரூ. 36,000 தொகையை நேரடியாகச் செலுத்தும். ஆஷா (ASHA) பணியாளர்கள் மற்றும் பிற பெண் சுகாதாரப் பணியாளர்களின் ஊதியம் குறித்தும் மேற்கு வங்க பாஜக ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. எங்கள் அரசாங்கம் தாய்மார்கள், சகோதரிகள் மற்றும் மகள்களுக்கு ரூ. 5 லட்சம் மதிப்பிலான இலவச மருத்துவ சிகிச்சையை வழங்கும்.

பொது சுகாதார மையங்களில் மருத்துவச் சிகிச்சைகளுக்கு 80% கட்டணச் சலுகை வழங்கப்படும். மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பை வாய்ப் புற்றுநோயைக் கண்டறிவதற்கான பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசிகள் இலவசமாக வழங்கப்படும். கர்ப்பக் காலத்தில் ரூ.21,000 நிதியுதவியும், மகள்கள் பட்டப்படிப்பை நிறைவு செய்யும்போது ரூ.50,000 நிதியுதவியும் பாஜக அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்படும்.

பெண்கள் சொந்தத் தொழிலைத் தொடங்குவதற்காக வங்கிகளிடமிருந்து ரூ.20 லட்சம் வரை கடன் பெறலாம். வங்கிகளுக்குக் கடன் வழங்கும்போது ஒரு உத்தரவாதம் தேவைப்படும். ஆனால், சகோதரிகளே, அந்த உத்தரவாதத்தை நீங்கள் வழங்கத் தேவையில்லை. அந்த உத்தரவாதத்தை உங்கள் சகோதரனான மோடியே உங்களுக்கு வழங்குவார்.

மேற்குவங்கத்தின் விளையாட்டு கலாச்சாரத்திற்கு பாஜக ஒரு புதிய உத்வேகத்தை அளிக்கும். திரிணமூல் காங்கிரஸின் 'சிண்டிகேட்' இங்குள்ள விளையாட்டுச் சூழல் அமைப்பையே சீரழித்துவிட்டது. சில மாதங்களுக்கு முன்பு கொல்கத்தாவில் நடந்த நிகழ்வுகளும், உலகம் முழுவதும் உள்ள கால்பந்து ரசிகர்களைச் சென்றடைந்த அந்தப் படங்களும், இங்கு நிலவும் 'மகா காட்டு தர்பார்' கலாச்சாரத்தின் நேரடி விளைவுகளே ஆகும். மேற்கு வங்கத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு நான் உறுதியளிக்கிறேன். 'கேலோ இந்தியா' திட்டத்தின் கீழ், மேற்கு வங்கத்தில் ஒரு புதிய, சிறப்பான விளையாட்டுச் சூழல் அமைப்பு உருவாக்கப்படும்" என்று அவர் கூறினார்.

## ஜனநாயகத்தில் வன்முறைக்கு இடமில்லை

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் மற்றும் அவரது மனைவி மெலானியா டிரம்ப் ஆகியோர் கலந்துகொண்ட இரவு உணவு விழாவில் திடீரென துப்பாக்கிசூடு நடத்தப்பட்டது. இதனால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அந்த நேரத்தில் மேடையில் இருந்த ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் மற்றும் மெலானியா டிரம்ப் ஆகியோரை பாதுகாப்பு அதிகாரிகள் உடனடியாக பாதுகாப்பாக வெளியேற்றினர்.

இந்த சம்பவத்தில் டிரம்ப் மற்றும் மெலானியாவிற்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றும், அவர்கள் நலமாக இருப்பதாகவும் தகவல்கள் உறுதி செய்யப்பட்டுள்ளது. முன்னதாக அங்குள்ள ஓட்டல் வளாகத்திற்குள் 5 முதல் 8 முறை பலத்த வெடிச்சத்தம் கேட்டதாக அங்கிருந்த ஒரு புகைப்படக்கலைஞர் ஒருவர் தெரிவித்தார். இந்த சத்தம் விருந்து நடைபெற்ற பிரதான அரங்கிற்குள் கேட்கவில்லை என்றாலும், துப்பாக்கி ஏந்திய நபர் ஒருவர் ஊடுருவி இருப்பதாக வெளியான ஆரம்பகட்ட தகவல்களால் அங்கிருந்த விருந்தினர்கள் அதிர்ச்சிக்கு உள்ளாகி இருந்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் பங்கேற்ற நிகழ்ச்சியில் துப்பாக்கிசூடு நடத்தப்பட்ட சம்பவத்திற்கு பிரதமர் மோடி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் பதிவிட்டுள்ளதாவது:- அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் பங்கேற்ற நிகழ்ச்சியில் துப்பாக்கிசூடு நடத்தப்பட்டது கண்டிக்கத்தக்கது. டிரம்ப், அவரது மனைவி, துணை ஜனாதிபதி ஆகியோர் காயமின்றி உயிர் தப்பியதை அறிந்து நிம்மதி அடைந்தேன். டிரம்ப் உள்ளிட்டோர் தொடர்ந்து பாதுகாப்பாகவும் நலமாகவும் இருக்க எனது வாழ்த்துகளை கூறுகிறேன். ஜனநாயகத்தில் வன்முறைக்கு இடமில்லை, அது சந்தேகத்திற்கு இடமின்றி கண்டிக்கப்பட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியா - நியூசிலாந்து இடையே இன்று தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்து - பியூஷ் கோயல்

**ஆக்ரா, ஏப்.27:**

இந்தியா மற்றும் நியூசிலாந்து நாடுகளுக்கு இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இன்று அதிகாரப்பூர்வமாக கையெழுத்தாக உள்ளது. இதற்காக இந்தியா வந்துள்ள நியூசிலாந்து வர்த்தக மந்திரி டாட் மெக்கிளேவுடன், மத்திய வர்த்தகத்துறை மந்திரி பியூஷ் கோயல் ஆக்ராவிலுள்ள உலகப் புகழ்பெற்ற தாஜ்மகாலைப் பார்வையிட்டார்.



அப்போது நிருபர்களிடம் பியூஷ் கோயல் கூறியதாவது:-

"மந்திரி மெக்கிளேவுக்கும் எனக்கும் இடையே நீண்ட கலந்துரையாடல்களுக்குப் பிறகு, பிரதமர் மோடி மற்றும் நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸன் ஆகியோரால் இருதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது. இருநாடுகளுக்கு இடையே ஒப்பந்தம் இன்று கையெழுத்திடப்பட உள்ளது. இன்னும் சில மாதங்களில், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை விரிவுபடுத்தும். நியூசிலாந்துக்கான இந்தியாவின் ஏற்றுமதிகளில் கிட்டத்தட்ட 100 சதவீதம் அங்கு வரியின்றி சென்றடைய முடியும்.

ஆக்ராவில் உள்ள தோல் தொழில், கைத்தறி மற்றும் கைவினைப்பொருட்களுக்கு மகத்தான புதிய வாய்ப்புகள் கிடைக்கும். நியூசிலாந்து மந்திரியும் அவரது மனைவியும் தாஜ்மஹாலைப் பார்க்க விரும்பினர்.

அவர்கள் இன்று அதைப் பார்வையிட்டதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்" இவ்வாறு கூறினார்.

## புதிய ரெயில் பெட்டி தயாரிப்பு தொழிற்சாலை; பிரதமர் மோடி திறந்து வைக்கிறார்

**புதுடெல்லி, ஏப்.27:**

பிரதமர் நரேந்திர மோடி மே மாதம் 9–ந் தேதி விமான மூலம் ஐதராபாத் வருகிறார். அங்கிருந்து சாலை மார்க்கமாக செகந்திராபாத்தில் உள்ள ஆயுதப்படை மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்கிறார். பிறகு காசி பேட்டை ரெயில் பெட்டி தயாரிப்பு தொழிற்சாலை, வாரங்கல்லில் உள்ள ஜவுளி பூங்கா, பி.பி.நகர் எய்ம்ஸ் மருத்துவமனையில் புதிதாக கட்டப்பட்ட விடுதி கட்டிடங்கள், முலுகுவில் உள்ள சம்மக்கா–சரளம்மா பல்கலைக்கழகம் மற்றும் கம்பம் தேவரப்பள்ளி தேசிய நெடுஞ்சாலைகளை காணொளி வாயிலாக திறந்து வைக்கிறார்.



ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS

| | |
|---|---|
| ➤ Public Notice | ➤ Loss of Share |
| ➤ Legal Notice | ➤ Merger |
| ➤ Tender Notice | ➤ Acquisition |
| ➤ Society Notice | ➤ AFR, UFR, etc. |

for just Rs. 249/- only in Daily Print Paper

ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com


## மே 1 முதல் சென்னையில் வெயில் சுட்டெரிக்குமாம்!



**சென்னை, ஏப்.27:**

மே 1ஆம் தேதி சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் கடும் வெயில் நிலவக் கூடும் என தமிழ்நாடு வெதர்மேன் பிரதீப் ஜான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், மே 1/2 முதல் உள்நாட்டு, தென் மற்றும் மேற்கு தமிழ்நாட்டில் மழை மீண்டும் தொடங்கினாலும், ஆந்திர எல்லைக்கு அருகிலுள்ள பகுதிகள் (KTCC சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்கள்) கடும் வெயிலில் சுட்டெரியும்.

சென்னை புறநகர் பகுதிகளில் வெப்பநிலை எளிதாக 40°C-ஐ கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வேலூரில் ஏப்ரல் 7, 2026 அன்று பதிவான 42°C மீண்டும் எட்டப்படும் வாய்ப்பு உள்ளது.

எளிய வார்த்தைகளில் சொன்னால், ஆந்திராவுக்கு அருகிலுள்ள பகுதிகள் அதிக வெப்பத்தால் பாதிக்கப்படும். கடலோரத்தின் மிகவும் அருகிலுள்ள பகுதிகள் மட்டும் சற்றே தப்பிக்கலாம்.

KTCC மற்றும் வட தமிழ்நாடு மக்கள் கவனிக்கவும்: மே 1/2 முதல் காலை 11.00 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை நேரடி வெயிலில் செல்லாமல் இருக்கவும். எப்போதும் குடை மற்றும் தண்ணீர் பாட்டிலை எடுத்துச் செல்லவும். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# விஜய் பேச்சால் உளவியல் சிக்கல்களைச் சந்திக்கும் குழந்தைகள்: காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார்!

**கோவை, ஏப்.27:**

தவெக தலைவர் விஜய் பேச்சால் குழந்தைகள் உளவியல் சிக்கல்களைச் சந்திப்பதாகவும், இது தொடர்பாக விஜய் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.





இது தொடர்பாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கோவை மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பாலகிருஷ்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் சனிக்கிழமை புகார் மனு ஒன்றை அளித்தனர்.

இதைத் தொடர்ந்து, பாலகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: சென்னையில் கடந்த 21-ஆம் தேதி நடைபெற்ற இறுதிக் கட்ட தேர்தல் பிரசாரத்தில் பேசிய தவெக தலைவர் விஜய், குழந்தைகள் சாக்லேட்டுக்கு அடம்பிடிப்பதுபோல, பெற்றோரிடம் அடம்பிடித்து தனக்கு வாக்களிக்க சொல்ல வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். அரசியல் முதிர்ச்சியற்ற இத்தகைய தூண்டுதல், பிஞ்சு குழந்தைகளின் மனநிலையை தேர்தல் ஆதாயத்துக்காக தவறாகப் பயன்படுத்துவதாகும்.

இதனால் எனது 5 வயது மகன், என்னிடம் விஜய்க்கு வாக்களிக்குமாறு அடம்பிடித்தான். அதற்கு நான் மறுப்பு தெரிவித்தபோது, மன உளைச்சலுக்கு ஆளாகி அழுதும், உணவைத் தவிர்த்தும் தவெகவுக்கு வாக்களிக்குமாறும் பிடிவாதம் பிடித்தான். இதனால், எனக்கு மிகுந்த மன வேதனை ஏற்பட்டது. இதேபோல, பல குழந்தைகள் உளவியல் சிக்கல்களை சந்திக்கின்றனர். இது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், பாரதிய நியாய சன்ஹிதா சட்டங்களின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

இது தொடர்பாக தவெக தலைவர் விஜய் மீது நடவடிக்கை எடுப்பதோடு, அவர் பேசிய விடியோ காட்சிகளை சமூக வலைதளங்களில் இருந்து நீக்க வேண்டும். இது தொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கும் புகார் அனுப்பியுள்ளேன். நடவடிக்கை எடுக்கவில்லையெனில் நீதிமன்றத்தை நாடுவேன் என்றார்.

## நீட் தேர்வு நுழைவுச் சீட்டு இணையதளத்தில் இன்று வெளியீடு




**புதுடெல்லி, ஏப்.27:**

2026-ஆம் ஆண்டு மருத்துவ மாணவர் சேர்க்கைக்காக நடத்தப்படும் நீட் தேர்வுக்கு விண்ணப்பித்திருப்பவர்களுக்கான ஹால் டிக்கெட் இன்று (ஏப். 27) அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

நிகழ் கல்வியாண்டுக்கான நீட் தேர்வு நாடு முழுவதும் வரும் மே 3-ஆம் தேதி பிற்பகல் 2 முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது. தேர்வுக்கான நுழைவுச் சீட்டு, நேற்று வெளியிடப்படவிருந்த நிலையில், தேதி ஒத்திவைக்கப்பட்டு, இன்று வெளியிடப்படவிருப்பதாக தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

இதன்படி, NEET.NTA.NIC.IN என்ற இணையதளத்தில் காலை 10 மணியளவில் நீட் ஹால் டிக்கெட் வெளியிடப்படுகிறது.


Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

## திருக்குறள் குறள்-602

மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்



தம் குடியைச் சிறப்புடைய குடியாக விளங்குமாறு செய்ய விரும்புகின்றவர் சோம்பலைச் சோம்பலாகக் கொண்டு முயற்சியுடையவராய் நடக்க வேண்டும்.

## சிந்திக்க ஒரு நொடி




நம்மைச் சுற்றி எதுவுமே சரியாக நடக்காத போது அதனை அமைதியாக வேடிக்கை பார்ப்பது தான் மன நிம்மதிக்கு வழிவகுக்கும்...

**உஷா முத்துராமன்**

## அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் வசந்த உற்சவம் 5-ஆம் நாள் பொம்மை பூ கொட்டும் விழா, மற்றும் இரவு ஒளிவு உற்சவம்







**திருவண்ணாமலை, ஏப்.27:** அருள்மிகு அண்ணா மலையார் திருக்கோயிலில் சித்திரை மாதம் 5-ஆம் நாள் வசந்த உற்சவத்தை முன்னிட்டு உற்சவருக்கு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களுடன், அலங்காரத்துடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.


5-ஆம் ஒளிவு உற்சவம் இரவு 9:00 மணிக்கு மேல் மின்விளக்குகள் அணைக்கப்பட்டு ஒளிவு உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றது. சுவாமி ஆலயம் 10 முறை சுற்றி வரும் 10 வது முறை சுற்றி வரும்பொழுது சுவாமியை கண்ணாடியில் காண்பித்து பின்னர் தீபாராதனையும் நடைபெற்றது. பொம்மைக்கு அலங்காரம் செய்யப்பட்டு பன்னீர் மண்டபத்தில் ஒவ்வொரு முறையும் பொம்மை சுவாமி மேல் பூ கொட்டும் தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பொம்மை பூ கொட்டும் விழாவில் கலந்து கொண்டு அண்ணாமலையாரை வேண்டி அருள் பெற்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சித்திரை பிரம்மோற்சவம் 6-ஆம் நாள் உற்சவம்







**திருவண்ணாமலை, ஏப்.27:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் சித்திரை பிரம்மோற்சவத்தை முன்னிட்டு பஞ்ச மூர்த்திகள் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. மாலை ஸ்ரீசுந்தரேசு வரப்பெருமான் பிச்சாடநாதர் திருக்கோலத்தில் இரவு மாட வீதி உலாவுடன், மங்கள வாத்தியங்களுடன், செஞ்சி விசாலாட்சி கோலாட்டம் குழுவின் கோலாட்டம் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பிரம்மோற்சவத்தில் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்து வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## மஞ்சள் நீராட்டு விழா முன்னாள் அமைச்சர் சிவி.சண்முகம் வாழ்த்து






விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் அதிமுக ஆனத்தூர் கிளைக்கழக செயலாளர் விஜயன் பரமேஸ்வரி இல்ல மஞ்சள் நீராட்டு விழா செஞ்சி வள்ளிஅண்ணாமலை மண்டபத்தில் நடைபெற்றது இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் சிவி. சண்முகம், வல்லம் ஒன்றிய செயலாளர் விநாயகமூர்த்தி ஒன்றிய மாவட்ட கிளைக்கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு வாழ்த்தினர். **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## பொற்கிழி விருதாளர் 2026

**திருச்சி, ஏப்.27:** மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பொற்கிழி விருது, " திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கம்" சார்பில் இந்த ஆண்டு முனைவர் சொ.சேதுபதி அவர்களுக்கு நேற்று முன்தினம் (25.04.26) வழங்கப்பட்டது.



இவ்விருதினை திருவண்ணா மலை குன்றக்குடி ஆதீனத்தின் 46வது குருமகா சந்நிதானம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவருக்கு வழங்கினார்.

நிகழ்ச்சியில் வாழ்த்திப் பேசிய ஆதீனம் , திருமுருக கிருபானந்த வாரியார் , வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன் முதல் மணமேடு குருநாதன் ஈறாகப் பெற்ற இவ்விருதினை ஆதீனத்தின் கீழ் இயங்கும் பிரான்மலை "வள்ளல்பாரி மேல்நிலைப்பள்ளியில்" பயின்ற கிருங்கை சேதுபதி பெறுவதில் தமக்கு பெருமை என்றார்.

முனைவர் சொ.சேதுபதி தமது ஏற்புரையில் திருப்புத்தூர் தமிழ்ச்சங்கத்தில் இருமுறை மயிரிழையில் தவறவிட்ட, இந்தப் பொற்கிழி விருதை திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கத்தில் குருமகா சந்நிதானத்தின் திருக்கரத்தால் பெறுவது தமது பாக்கியம் என்றார். தாம் பயின்ற பள்ளிகளின் ஆசிரியர்கள், ஆதீனத்துடனான தொடர்பு, தினமணி பத்திரிகைப் பணி ஆகியவற்றை அவர் நினைவுகூர்ந்தார்.

முன்னதாக சங்கத்தமிழ் பாடலுடன் துவங்கிய நிகழ்ச்சியில், அமைச்சர் பெ.உதயகுமார் வரவேற்புரை நல்க, துணைத் தலைவர் மருத்துவர் செந்தில்வேல் பொற்கிழி விருது பற்றியும், துணை அமைச்சர் முனைவர் செயலாபதி விருதாளரையும் அறிமுகம் செய்தனர்.

மூளை நரம்பியல் மருத்துவர் எம்.ஏ. அலீம் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## ஸ்வாமி உய்யக் கொண்டாரின் 1200 ஆவது திருநட்சத்திர வைபவம்..!





**வந்தவாசி, ஏப் 27:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ கோதண்டராமர் திருக்கோயிலில் ஸ்ரீரங்கம் புத்தூர் ஸ்ரீகரந்த பரிபாலன டிரஸ்ட் மற்றும் ஸ்ரீ ராம பஜனை மந்திர கைங்கர்ய டிரஸ்ட் சார்பில் உய்யக்கொண்டாரின் 1200 ஆவது திருநட்சத்திர வைபவ நிகழ்வு நடைபெற்றது.

காலை திருநாம சங்கீர்த்தன பஜனை நடைபெற்றது. 'நாதமுனிகளும் உய்யக்கொண்டாரும்' என்ற தலைப்பில் ஸ்ரீநிவாச பெருமாள் இராமானுஜ நாசரின் உபன்யாசம் நடைபெற்றது. மேலும் தேசூர் லக்ஷ்மி நாராயண ராமானுஜர் தாசர் அவர்களால் 'ஸ்ரீ ஆளவந்தார் வைபவம்' உபன்யாசம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பாகவத கோஷ்டியினர் கலந்து கொண்டனர்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## தேவீர அள்ளி ஆசிரியருக்கு பணி நிறைவு பாராட்டு விழா



**காவேரிப்பட்டினம், ஏப்.27:** காவேரிப்பட்டினம் ஒன்றியம் தேவீரஅள்ளி அரசு உயர்நிலைப்பள்ளியின் பட்டதாரி ஆசிரியருக்கு பள்ளியை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் முத்து லட்சுமணன் தலைமை வகித்தார். பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் அண்ணாமலை மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் முனியன், ஆறுமுகம், முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் மனோகரன் என்பவர் 29 ஆண்டுகள் பணிபுரிந்து 25.04.2026 அன்று பணி நிறைவு அடைந்ததையொட்டி பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது. பாராட்டு விழாவில் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கி நினைவுப் பரிசுகள் வழங்கினர். இவ்விழாவில் ஆசிரியர்கள் வெங்கடேஷ் பிரபு, திருமலை, லாவண்யா, கவிதா, தீபா, தனலட்சுமி, அம்சவேணி மற்றும் அலுவலகப் பணியாளர்கள் மணிவண்ணன், அரசு ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் ஊர் முக்கிய பிரமுகர்கள் பாவேந்திரன், முருகேசன், முருகையன், பாரி, காசி, சம்பத், கந்தன் ஆகியோர் கலந்து கொண்டு நினைவு பரிசுகள் வழங்கினர்.

## கீழ்பென்னாத்தூரில் ஸ்ரீ வாசவி ஜெயந்தி திருவிழா

**திருவண்ணாமலை, ஏப்.27:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் காந்தி தெருவில் அமைந்திருக்கும் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் ஸ்ரீவாசவி ஜெயந்தியை முன்னிட்டு நிகழ்ச்சிகள் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு குழந்தைகள், பெண்கள் கலந்து கொண்டு கலந்துரையாடல் விளையாட்டு பாடல் ஆடல் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. இரவு 8 மணிக்கு இரவு உணவு வழங்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து மங்கள வாத்தியங்கள் இசைக்க கலசம் எடுத்து வந்தனர். காலை 8 மணிக்கு பால் குடம் மங்கள வாத்தியங்கள் இசைக்க ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவரும் மங்கள வாத்தியத்துடன் ஆலயம் வந்து அடைந்தனர்.

காலை 10 மணி அளவில் பெண்கள் அனைவரும் மாவிளக்கு மாவுடன், பழங்கள், தேங்காயுடன், தட்டுவரிசை ஆலயத்திற்கு எடுத்துச் சென்றனர்.


மதியம் 1. 00 மணிக்கு மூலவருக்கும், உற்சவருக்கும் மணி ஐயர் அவர்களால் சிறப்பு அபிஷேகங்கள் அலங்காரங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், மற்றும் ஆலயத்தின் வழக்கப்படி வேண்டுதல் வைத்து வேண்டி திருமணம், படிப்பு வேலை கிடைக்க வரசக்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து கலசம் தீர்த்தம் எடுத்து வந்தனர்.


குழந்தை இல்லாத தம்பதியினர் மஞ்சள் அரைத்து அம்மன் முகம் செய்து வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து தம்பதியினர் இருவரும் மனையில் உட்கார வைத்து வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, ஹோமங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் , மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஆர்யவைஸ்ய பெண்கள் அனைவரும் குங்குமம் அர்ச்சனைகள் செய்தனர். ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்துகொண்டு நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர்.

அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது அன்னதானமும் வழங்கப்பட்டது. பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.









## தில்லை ஸ்ரீ சிவகாமி மாதங்கி நாட்டியாலயா மாணவிகளின் சலங்கை பூஜை விழா



திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம் ரெண்டேரிப்பட்டு தில்லை ஸ்ரீ சிவகாமி மாதங்கி நாட்டியாலயா மாணவிகளின் சலங்கை பூஜை விழா நேற்று மாலை சுசீமஹால் திருமண மண்டபத்தில் குரு Dr.K.சங்கீதா தலைமையில் நடைபெற்றது.நாட்டியம் அனைத்து மாணவிகளின்உடைஅலங்காரம் நாட்டியம் மிக சிறப்பாக இருந்தது.உறவினர்கள் , பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.அனைவருக்கும் சிற்றுண்டி தேனீர் வழங்கினார்கள்.

## பணி ஓய்வு பாராட்டு விழா



**திருவண்ணாமலை, ஏப்.27:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் வட்டம் கீழ்பென்னாத்தூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி தையல் ஆசிரியை திருமதி ஜெயலட்சுமி அவர்களின் பணி (30.4.26) நிறைவு பாராட்டு விழாவில் தமிழ் நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் சார்பில் சி.சுப்பிரமணியன் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினார்.. விழாவில் அலுவலக ஊழியர்கள் உறவினர்கள், நண்பர்கள்,சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## காவேரி விரைவு ரயில் உட்பட 23 ரயில்களின் சேவையில் மாற்றம்

**சென்னை, ஏப்.27:**

ரயில் பாதை மேம்பாட்டு பணிகள் காரணமாக, காவேரி விரைவு ரயில் உட்பட 23 ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

கர்நாடக மாநிலம் பெங்களூரு கன்டோன்மென்ட்டில் ரயில் பாதை மேம்பாட்டு பணிகள் நடைபெறுகின்றன. இதனால், இத்தடத்தில் 23 ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதன்படி, சென்னை சென்ட்ரல் - அசோகாபுரம் காவேரி விரைவு ரயில் (16021), வரும் ஜூன் 3, 4, 5, 6, 9, 10, 11, 21, 26 ஜூலை 2, 5, 6-ம் தேதிகளில் ரத்து செய்யப்படும்.

அசோகாபுரம்- சென்னை சென்ட்ரல் விரைவு ரயில் (16022) வரும் ஜூன் 4, 5, 6, 7, 10, 11, 12, 22, 27 ஜூலை 3, 6, 7ம் தேதிகளிலும் ரத்து செய்யப்படும் கே.எஸ்.ஆர். பெங்களூரு- சென்னை சென்ட்ரல் அதிவிரைவு ரயில் (12658), வரும் ஜூன் 4, 5, 6, 7, 10, 11,12, 22, 27 ஜூலை 3, 6, 7 ஆகிய தேதிகளி லும், சென்னை சென்ட்ரல் பெங்களூரு அதி விரைவு ரயில் (12657) வரும் ஜூன் 5, 6, 7, 8, 11, 12, 13, 23, 28 ஜூலை 4, 7, 8ம் தேதிகளிலும் ரத்து செய்யப்படும். கர்நாடக மாநிலம் யஷ்வந்த் பூர்- சென்னை சென்ட்ரல் ரயில் (12291), வரும் ஜூன் 5, 12, ஜூலை 3ம் தேதிகளிலும், சென்னை சென்ட்ரல் யஸ் வந்த்பூர் அதி விரைவு ரயில் (12292) வரும் ஜூன் 6, 13, ஜூலை 4 தேதிகளிலும் ரத்து செய்யப்படும்.

மைசூர்- சென்னை சென்ட் ரல் அதி விரைவு ரயில் (22681) வரும் ஜூன் 10ம் தேதியும். சென்னை சென்ட்ரல்- மைசூர் அதி விரைவு ரயில் (22682) வரும் ஜூன் 11-ம் தேதியும் ரத்து செய்யப்படும்.

கே.எஸ்.ஆர். பெங்களூரு- ஜோலார்பேட்டை, ஜோலார்பேட்டை- கே.எஸ்.ஆர்.பெங்களூரு பயணிகள் ரயில்கள் (66550-66549) வரும் ஜூலை 7ம் தேதியன்று ரத்து செய்யப்படுகிறது. ஜோலார்பேட்டை - கேஎஸ்ஆர் பெங்களூரு நகர் மெமு ரயில் (16519) பகுதி ரத்து செய்யப்படும். இதுதவிர, 12 ரயில்களின் நேரம் மாற்றி அமைக்கப்பட உள்ளன.

இத்தகவல் தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "குளு குளு ஊட்டி ஒரு கேடா என்றவர்கள் இவர்கள்" - தமிழிசை காட்டம்



**சென்னை, ஏப்.27:**

'பணியில் இருக்க வேண்டிய முதல்வர் வாரிசுகளை கூட்டிக்கொண்டு கொடைக்கானலில். வாக்களிக்க துணை நின்ற மக்கள் தங்கள் அன்றாட பணியில், ஆனால் துணை முதல்வர் அயல் நாட்டு பயணத்தில். ஆய்வு செய்ய வேண்டியவர்கள் ஓய்விற்கு செல்கிறார்கள்' என முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதியின் ஓய்வு பயணம் குறித்து பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், 'ஓட்டளிக்க வரிசையில் நின்ற மக்கள் எல்லோரும் கோடையில் வீட்டில் தன் பணியில்.. ஆனால் பணியில் இருக்க வேண்டிய முதல்வர் வாரிசுகளை கூட்டிக்கொண்டு கொடைக்கானலில். வாக்களிக்க துணை நின்ற மக்கள் தங்கள் அன்றாட பணியில், ஆனால் துணை முதல்வர் அயல் நாட்டு பயணத்தில். அரசியல் என்பது அனைவருக்கும் சமமே. திமுகவின் இந்த ஏற்றத்தாழ்வு மனப்பான்மை, அவர்களின் ஏற்றத்திற்காக அல்ல இறக்கத்திற்காகவே. ஆய்வு செய்ய வேண்டியவர்கள் ஓய்விற்கு செல்கிறார்கள். ஆனால் இதே கூட்டம் தான் அன்று அரசு வேலையாக ஊட்டி சென்ற காமராஜரை கும்பி எரியுது குடல் வேகுது குளு குளு ஊட்டி ஒரு கேடா என்று கேலி பேசியவர்கள். புரிந்து கொள்ளுங்கள் இவர்களை. பொதுநலம் என்று பேசிக்கொண்டு தெரியும் இந்த சுயநலவாதிகளை' எனத் தெரிவித்துள்ளார்.

## மேகமலை காப்பகத்தில் செயற்கை நீர்நிலைகள்: வனத்துறை முயற்சிக்கு பொதுமக்கள் பாராட்டு

**விருதுநகர், ஏப்.27:**



விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைக்காடுகளில் கோடை வெயில் சுட்டெரித்து வரும் நிலையில், வனவிலங்குகளின் தாகத்தைத் தீர்க்க வனத்துறை மேற்கொண்டுள்ள சூரியசக்தி நீர்நிலைத் திட்டம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் நிலவும் கடும் வறட்சி காரணமாக, இயற்கையான நீர்நிலைகள் வற்றி வருகின்றன. இதைக் கருத்தில் கொண்டு, மேகமலை புலிகள் காப்பகத்தில் வனத்துறை சார்பில் சூரிய சக்தியால் இயங்கும் செயற்கை நீர்நிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நீர்நிலைகளில் தண்ணீர் நிரம்பி காணப்படுவதால், வனப்பகுதியில் இருந்து யானைகள் கூட்டமாக வந்து தாகம் தணித்துச் செல்கின்றன. இப்பகுதியில் பல்வேறு வனவிலங்குகள் வாழ்ந்தாலும், தற்போது இந்த நீர்நிலைகளை அதிகளவில் பயன்படுத்துவது யானைகளே ஆகும்.

வனத்துறையின் இந்தச் சிறப்பான முயற்சியை வனவிலங்கு ஆர்வலர்கள் பாராட்டியுள்ளனர். இது குறித்து அவர்கள் கூறுகையில், "கோடை காலத்தில் வனவிலங்குகள் தண்ணீருக்காக அலைவதைத் தடுக்க இந்தத் திட்டம் ஒரு சிறந்த தீர்வாகும். இதே போன்ற சூரியசக்தி நீர்நிலைத் திட்டத்தை மற்ற காப்பகங்கள் மற்றும் சரணாலயங்களிலும் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளனர்.

## தமிழ்நாட்டில் 40 சதவீதம் டிரைவர்கள் பற்றாக்குறை: வடமாநில ஆட்களை தேர்வு செய்ய முடிவு

**சென்னை, ஏப்.27:**



தமிழ்நாட்டில் 3 கோடியே 80 லட்சம் எண்ணிக்கையில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் இயங்குகின்றன. அதில், இருக்கர வாகனங்களின் எண்ணிக்கை மட்டும் 3 கோடியே 20 லட்சம் அடக்கம்.

வாடகை கார்கள், வேன்கள் மட்டுமே 10 லட்சத்திற்கும் அதிகமாக உள்ளன.

4 சக்கர வாகனங்கள் இவ்வளவு இருந்தும் தமிழக போக்குவரத்து துறையில் டிரைவர்களாக பதிவு செய்துள்ளர்களின் எண்ணிக்கை 19 லட்சத்து 12 ஆயிரம் என்ற அளவிலேயே உள்ளது. இவ்வாறு பதிவு செய்தவர்களில் அரசு பஸ் டிரைவர்களும் அடங்குவார்கள்.

இதைவைத்துபார்க்கும்போது, தமிழகத்தில் டிரைவர்கள் பற்றாக்குறை 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை உள்ளது. குறிப்பாக, வார இறுதி நாட்கள், பண்டிகை காலங்களில் கார்கள், வேன்கள் இயக்க டிரைவர்கள் கிடைப்பதில் பெரும் சிக்கல் நீடிக்கிறது.


இந்த நிலையில், 12 பேர் வரை பயணிக்கும் வாகனங்களை இயக்க, தனியாக பேட்ஜ் எனும் சிறப்பு உரிமம் பெறும் நடைமுறை தமிழகத்தில் உள்ளது.

ஆனால், இது அவசியமில்லை என்று மத்திய அரசு உத்தரவிட்டு பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் இங்கே நடைமுறைப்படுத்தவில்லை. இதை அமல்படுத்தினாலே டிரைவர்கள் பற்றாக்குறையை ஓரளவு சமாளிக்க முடியும் என்று சுற்றுலா வாகன சங்கத்தினர் கூறுகின்றனர்.

தற்போதைய சூழ்நிலையில், தமிழகத்தில் நிலவும் டிரைவர்கள் பற்றாக்குறையை சமாளிக்க வடமாநிலங்களில் இருந்து ஆட்களை தேர்வு செய்ய தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர். அசாம், அருணாச்சலபிரதேச மாநிலங்களில் இருந்து போதிய பயிற்சி பெற்ற டிரைவர்களை தேர்வு செய்து அழைத்து வந்து பஸ்களை இயக்கவும் திட்டமிட்டுள்ளனர்.

## வெயிலின் தாக்கத்தில் இருந்து விலங்குகளை காக்க வண்டலூர் பூங்காவில் சிறப்பு ஏற்பாடுகள்

**சென்னை, ஏப்.27:**



தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், சென்னை வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், வெயிலின் தாக்கத்தில் இருந்து விலங்குகள் மற்றும் பறவைகளை காக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வண்டலூர் பகுதியில் அமைந்துள்ள இந்த பூங்காவில், 2,000-க்கும் மேற்பட்ட விலங்குகள், பறவைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், பறவைகளின் கூண்டுகளில் குளிர்ச்சியான சூழலை உருவாக்க 2 மணி நேரத்திற்கு ஒருமுறை தண்ணீர் பீச்சி அடிக்கப்படுகிறது.

குரங்குகளுக்கு ஷவர் முறையில் தண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், பாம்புகளுக்கு சொட்டுநீர் பாசன முறையில் ஈரப்பதம் பராமரிக்கப்படுகிறது.

மேலும், பார்வையாளர்கள் நடந்து செல்லும் பாதைகளில் ஸ்ப்ரே மூலம் தண்ணீர் தெளித்து குளிர்ச்சியான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## சபரிமலை கோவில் அருகே ஹெலிகாப்டர் பறந்த விவகாரம்; விமானி மீது போலீசார் வழக்கு

**சபரிமலை, ஏப்.27:**



சபரிமலை அய்யப்பன் கோவிலுக்கு நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்து தரிசனம் பெற்றுச் செல்கின்றனர். இந்தக் கோவிலின் அருகே டிரோன்கள், ஹெலிகாப்டர்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதி அதி பாதுகாப்பு மிகுந்த இடமாகும்.

இந்த சூழலில் நேற்று முன்தினம் மதியம் சபரிமலை கோவிலின் அருகே ஹெலிகாப்டர் தாழ்வாக பறந்து பரபரப்பை ஏற்படுத்தியது. 4 முறை கோவிலை வட்டமிட்டு பறந்த இந்த ஹெலிகாப்டர் கடலோர காவல்படைக்கு சொந்தமானது என தெரியவந்தது.

இது தொடர்பாக உரிய விசாரணை நடத்த வேண்டும் என்று சபரிமலை சிறப்பு ஆணையர் கேரள ஐகோர்ட்டில் அறிக்கை தாக்கல் செய்தார். அதன் அடிப்படையில் உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய சபரிமலை பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளரான கூடுதல் போலீஸ் டி.ஜி.பி. ஸ்ரீஜித்துக்கு ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

இதற்கிடையில் காலநிலை மோசமாக இருந்ததால் ஹெலிகாப்டர் திசைமாறி சபரிமலை கோவில் அருகே சென்றதாக கடலோர காவல்படை தெரிவித்தது. இது தொடர்பாக பம்பை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இந்த சூழலில் ஐகோர்ட்டு உத்தரவுப்படி விசாரணை நடத்திய கூடுதல் டி.ஜி.பி. ஸ்ரீஜித், சபரிமலை சன்னிதானம் கோவிலின் மீது அனுமதியின்றி கடலோர காவல்படை ஹெலிகாப்டர் பறந்தது பெரும் தவறு என அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வானிலை காரணமாக ஹெலிகாப்டர் தாழ்வாக பறந்தது என்ற கடலோர காவல்படையின் விளக்கம் திருப்திகரமாக இல்லை என்றும், இது ஒரு ஆபத்தான செயல் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது அறிக்கை சபரிமலை சிறப்பு ஆணையரிடம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த சூழலில் பொதுப் பாதுகாப்பை பாதிக்கும் வகையில் ஹெலிகாப்டரை இயக்கியதாக விமானி மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கை ஐகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டவுடன், வான்வழிப் போக்குவரத்து கட்டுப்பாட்டாளரிடம் விளக்கம் கேட்கப்படும் என்றும், வழக்கின் விசாரணை அதிகாரியாக பத்தனம் திட்டா போலீஸ் சூப்பிரண்டு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

## நீலகிரி: காட்டு யானை தாக்கி உயிரிழந்தவரின் உடலை மீட்கச் சென்ற வனத்துறையினர் மீது தாக்குதல்

**நீலகிரி, ஏப்.27:**

நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே காட்டு யானை தாக்கியதில் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். அவரது உடலை மீட்கச் சென்ற வனத்துறையினர் மீது பொதுமக்கள் நடத்திய தாக்குதலில் 7 ஊழியர்கள் காயமடைந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கூடலூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், ஊருக்குள் புகுந்த காட்டு யானை ஒன்று அந்த பகுதியில் இருந்த ஒருவரைத் தாக்கியது. இதில் அவர் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தகவலறிந்து வந்த வனத்துறையினர், உயிரிழந்தவரின் உடலை மீட்க முயன்றனர். அப்போது, யானை ஊடுருவலைத் தடுக்க வனத்துறை முறையான நடவடிக்கை எடுக்கவில்லை எனக்கூறி ஆத்திரமடைந்த பொதுமக்கள், வனத்துறையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

வாக்குவாதம் முற்றிய நிலையில், பொதுமக்கள் திடீரென வனத்துறையினர் மற்றும் அவர்களின் வாகனங்கள் மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர். காயமடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு, சிகிச்சைக்காக கூடலூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வன்முறை தொடர்பாக வனத்துறையினர் அளித்த புகாரின் அடிப்படையில், வனத்துறை ஊழியர்களைப் பணி செய்ய விடாமல் தடுத்தது மற்றும் அரசு வாகனத்தைச் சேதப்படுத்தியதற்காக 2 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## கோடை வெயிலை சமாளிக்க அருவிகளில் குவிந்த சுற்றுலா பயணிகள்

**நெல்லை, ஏப்.27:**

தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், வெயிலை சமாளிக்க பொதுமக்கள் அருவிகளுக்கு படையெடுத்து வருகின்றனர். இன்று வார விடுமுறை என்பதால், அருவிகளுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

அதன்படி இன்று நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் அடுத்த அகத்தியர் அருவியில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. அருவிக்கு செல்லும் வழியில் சுமார் 1 கி.மீ. நீளத்திற்கு சுற்றுலா பயணிகளின் வாகனங்கள் அணிவகுத்து நின்றதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பாபநாசம் சோதனைச் சாவடி பகுதியில் வனத்துறையினர் தீவிர சோதனை மேற்கொண்டு வருகின்றனர். தடை செய்யப்பட்ட பொருட்கள் கொண்டு செல்லப்படுவதை தடுக்கும் வகையில், சுற்றுலா பயணிகளின் வாகனங்களை தீவிரமாக சோதனை செய்த பிறகே அனுமதித்து வருகின்றனர்.

இதே போல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள திற்பரப்பு அருவிக்கு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகை தருகின்றனர். 'குமரியின் குற்றாலம்' என்று அழைக்கப்படும் திற்பரப்பு அருவி, கன்னியாகுமரி மாவட்டத்தின் சிறப்புவாய்ந்த சுற்றுலா தலங்களில் ஒன்றாக விளங்குகிறது.

அருவிக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகள், வரிசையில் காத்திருந்து அருவியில் ஆர்ப்பரித்துக் கொட்டும் தண்ணீரில் உற்சாகமாக குளித்தனர். அங்குள்ள நீச்சல் குளத்தில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் குளித்தும், விளையாடியும் மகிழ்ந்தனர்.

## பட்டாசு ஆலைகளுக்கு மத்திய அரசு கட்டுப்பாடு

**சென்னை, ஏப்.27:**

தமிழகத்தில் கோடை வெயில் கொளுத்தி வருகிறது. கத்திரி தொடங்க உள்ள நிலையில் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதன்படி தமிழகத்தில் பல்வேறு இடங்களில் வெப்பநிலை இப்போதே சதம் அடித்து வருகிறது. போகப்போக, வெயில் தாக்கம் இன்னும் உக்கிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், கோடை வெயில் அதிகரித்துள்ளதால் விருதுநகர், சாத்தூர், சிவகாசி பகுதிகளில் பட்டாசு தயாரிப்பு பணிகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பட்டாசுக்கான ரசாயன மருந்து கலவை பணியினை காலை நேரங்களில் முடிக்கவும், மிகவும் அபாயகரமான ரசாயன கலவை பணிகளை காலை 6 மணிக்கு தொடங்கி காலை 10 மணிக்குள் முடித்திடவும் மத்திய வெடிபொருள் கட்டுப்பாட்டுத்துறை அதிகாரிகள் பட்டாசு ஆலை நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தி உள்ளனர்.

பட்டாசு செய்யும் இடங்களில் பாதுகாப்பு விதிமுறைகளை முறையாக பின்பற்ற வேண்டும். காலை 11 மணி முதல் மதியம் 3 மணி வரை பட்டாசு தயாரிக்கும் பணியில் தொழிலாளர்களை ஈடுபடுத்த கூடாது. பட்டாசுகளை மொத்தமாக வாங்கும் நபர்களின் விவரங்கள், அடையாள அட்டைகளை பெற்று சேகரித்து வைக்க வேண்டும். இதனை மீறினால் பட்டாசு தயாரிப்பு கூடத்திற்கான உரிமத்தை ரத்து செய்ய பரிந்துரை செய்யப்படும். மேலும் பட்டாசு ஆலைகளில் ஏற்படும் வெடி விபத்துகளை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## சீர்காழி சட்டைநாதர் கோவிலில் சகோபுர உற்சவம்

**சீர்காழி, ஏப்.27:**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான தேவார பாடல் பெற்ற திருநிலைநாயகி உடைனாகிய பிரம்மபுரீஸ்வரர் கோவில் (சட்டைநாதர் கோவில்) அமைந்துள்ளது. இக்கோவிலில் சுவாமி, அம்பாள் 3 நிலைகளில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றனர். திருக்கோவிலில் அஷ்ட பைரவர்கள் தனி சன்னதியில் காட்சியளித்து வருகின்றனர். இக்கோயிலின் சித்திரை மாத பிரமோற்சவம் கடந்த 21ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. 15 நாட்கள் நடைபெறும் உற்சவத்தின் 5-ம் நாளான நேற்று இரவு முக்குலத்தோர் மண்டகப்படி திருவிழாவான தெருவடைச்சான் எனப்படும் சகோபுர உற்சவம் நடைபெற்றது.

இதனை முன்னிட்டு சுவாமி, அம்பாள், திருஞானசம்பந்தர் சிறப்பு அலங்காரத்துடன் ரிஷப வாகனத்தில் அமர்ந்தபடி, பஞ்ச மூர்த்திகளுடன் சகோபுரத்தில் எழுந்தருளினர். தொடர்ந்து சகோபுர உற்சவத்தை மூவேந்தர் முன்னேற்றக் கழக மாநில இளைஞரணி செயலாளர் வைபவ்வாண்டையார், ஸ்ரீமத் அண்ணாமலைதம்பிரான் முன்னிலையில் வடம் பிடித்து தொடங்கி வைத்தார். இதனையடுத்து பக்தர்கள் சகோபுரத்தை வடம்பிடித்துஇழுத்தனர். சகோபுரம் நான்கு மாட வீதிகளையும் வலம் வந்து நிலையை அடைந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். நாளை (28 ம் தேதி) செவ்வாய்க்கிழமை திருத்தேர் நிகழ்ச்சியும், 30ம் தேதி வியாழக்கிழமை நடராஜர் உற்சவமும், 1ம் தேதி மௌன உற்சவமும், மூன்றாம் தேதி தெப்போற்சவமும், நான்காம் தேதி சண்டிகேஸ்வர உற்சவமும், 8ம் தேதி முத்துசட்டைநாதர் உற்சவமும் நடைபெற உள்ளது.

## திருத்துறைப்பூண்டி பிறவி மருந்தீஸ்வரர் ஆலய சித்திரை பெருந்திருவிழா

**திருத்துறைப்பூண்டி, ஏப்.27:**

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் புகழ்பெற்ற பெரியநாயகி அம்மன் உடனுறை பிறவி மருந்தீஸ்வரர் ஆலய சித்திரை பெருந்திருவிழா காப்பு கட்டுதலுடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. தினசரி சுவாமி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக, விஸ்வகர்மா சமூகத்தாரின் மண்டகப்படியை முன்னிட்டு சுவாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனையும் தீபாராதனையும் நடைபெற்றது. பின்பு ஏராளமான பொருட்செலவில் உருவாக்கப்பட்ட இந்திர விமானத்தில் சுவாமி வீதி உலா காட்சி நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

பிறவிமருந்தீஸ்வரர் ஆலயம் ஆன்மிக சிறப்புகளை கொண்டது. திரு என்று ஆரம்பிக்கக்கூடிய ஊர்களில் எல்லாம் புகழோடு இருக்கக்கூடிய மரகதலிங்கம் திருத்துறைப்பூண்டியில் உள்ளது. விலைமதிப்பற்ற மரகத லிங்கத்திற்கும் மார்கழி மாதம் அதிகாலை ஐந்துமணிக்கு பூஜை நடைபெறுகிறது.

# திருச்செந்தூர் கோவிலில் அலைமோதும் கூட்டம்: 4 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம்




**திருச்செந்தூர், ஏப்.27:**

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சிறந்த பரிகார தலமாகவும், கடற்கரையில் அமைந்துள்ள முக்கிய ஆன்மீக சுற்றுலா தலமாகவும் விளங்கி வருகிறது. இங்கு நாள்தோறும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து மட்டுமல்லாமல் ஆந்திரா, கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து செல்கின்றனர்.

தற்போது கோவிலில் 10 நாட்கள் நடைபெறும் சித்திரை வசந்த திருவிழா கடந்த 22-ந்தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இன்று 5-ம் நாள் திருவிழா நடைபெறுகிறது. விழாவின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு நாளும் மாலையில் சுவாமி ஜெயந்திநாதர், வள்ளி, தெய்வானையுடன் தங்க சப்பரத்தில் வசந்த மண்டபத்தில் எழுந்தருளுகிறார். அங்கு சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெறுகிறது. தொடர்ந்து தீபாராதனைக்குப் பின்னர் சுவாமி தங்கதேரில் எழுந்தருளி கிரி வீதியுலா வந்து கோவிலில் சேரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பள்ளிகளுக்கு கோடை விடுமுறை மற்றும் இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் காலையிலிருந்தே கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தங்களில் நீராடி, நீண்ட வரிசையில் சுமார் 4 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். கோவில் நடை வழக்கம்போல் காலை 4 மணிக்கு திறக்கப்பட்டது. காலை 5.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் உள்ளிட்ட காலப்பூஜைகள் தொடர்ந்து நடைபெற்றன.

# சோளிங்கர் லட்சுமி நரசிம்மர் கோவில் சித்திரை பெருவிழா- பக்தோசித பெருமாள் வீதிஉலா




**சோளிங்கர், ஏப்.27:**


ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோவிலில் சித்திரை பெருவிழா நடைபெற்று வருகிறது. விழாவின் 5வது நாளில் நாச்சியார் திருக்கோலம் உற்சவம் விமரிசையாக நடைபெற்றது.

இதையொட்டி பக்தோசிதப் பெருமாள் சுவாமிக்கு பல்வேறு வகையான நறுமண பொருட்கள் கொண்டு சிறப்பு பூஜை, அபிஷேகம் செய்து, பட்டு வஸ்திரம் தங்க ஆபரணங்கள் மலர்மாலை பல வண்ண மலர்கள் கொண்டு நாச்சியார் திருக்கோலம் அலங்காரம் செய்யப்பட்டு மகாதீபாராதனை நடைபெற்றது.

பின்னர் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் பக்தோசிதப் பெருமாள் நாச்சியார் திருக்கோலத்தில் எழுந்தருளி மங்கள வாத்தியங்கள், வேத மந்திரங்கள் முழங்க சன்னதி தெரு, சுப்பாராவ் தெரு, பைராகி மடத்தெரு, போஸ்ட் ஆபீஸ் தெரு உள்ளிட்ட 8 மாட வீதிகளில் உலா வந்து பொதுமக்களுக்கு காட்சி தந்து அருள்பாலித்தார். சுவாமிக்கு வீடுதோறும் பக்தர்கள் கற்பூர ஆரத்தி காண்பித்து வழிபட்டனர். இந்நிகழ்வுகளில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

# விடுமுறை தினம்... திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் ஏராளமான பக்தர்கள் தரிசனம்





**திருவண்ணாமலை, ஏப்.27:**

திருவண்ணாமலையில் உள்ள உலக பிரசித்தி பெற்ற அருணாசலேஸ்வரர் கோவிலுக்கு தினமும் உள்ளூர் மட்டுமின்றி வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்கின்றனர். இதில் ஞாயிற்றுக்கிழமை போன்ற விடுமுறை நாட்கள் மற்றும் விசேஷ நாட்களில் பக்தர்கள் கூட்டம் அதிகளவில் காணப்படும்.

இந்த நிலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் அருணாசலேஸ்வரர் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. கோவிலில் பக்தர்கள் ராஜகோபுரம் வழியாகவும், அம்மணி அம்மன் கோபுரம் அருகில் அமைக்கப்பட்டு உள்ள காத்திருப்பு கூடத்தின் வழியாகவும் தரிசனத்திற்கு உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பொது தரிசன வழியில் சென்ற பக்தர்கள் கோவிலில் சாமி தரிசனம் செய்ய சுமார் 3 மணி நேரம் ஆனதாக தெரிவித்தனர். பகலில் திருவ ண்ணாமலையில் வெயில் சுட்டெரித்தது. எனவே வரிசையில் சென்ற பக்தர்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் வெயிலின் தாக்கம் தணிக்க தயிர், மோர் வழங்கப்பட்டது. மேலும் அதிகாலை முதல் ஏராளமான பக்தர்கள் கிரிவலம் சென்ற வண்ணம் காணப்பட்டனர்.





வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

## உங்கள் கண்களை குளிர்ச்சியாக்கும் வழிகள்!



1/11. கோடைகாலத்தில் உங்கள் கண்களை குளிர்ச்சியாகவும், புத்துணர்ச்சியுடனும் வைத்திருக்க 10 எளிய டிப்ஸ்.

2/11. குளிர்ந்த வெள்ளரிக்காய் துண்டுகளை கண்களின் மேல் 10-15 நிமிடங்கள் வைத்திருப்பது உடனடி குளிர்ச்சியைத் தரும்.

3/11. சுத்தமான பஞ்சை ரோஸ் வாட்டரில் நனைத்து கண்களின் மேல் வைத்து வர, கண்களின் எரிச்சல் குறையும்.

4/11. ஒரு நாளைக்கு 4 முதல் 5 முறை சுத்தமான குளிர்ந்த நீரால் கண்களைக் கழுவுங்கள்.

5/11. புதிய கற்றாழை ஜெல்லியை கண்களைச் சுற்றியுள்ள பகுதியில் தடவினால் சூடு தணியும். கண்களுக்குள் படாமல் கவனமாக இருக்கவும்.

6/11. வெளியே செல்லும்போது UV கதிர்களிடமிருந்து பாதுகாக்க தரமான சூரியக் கண்ணாடி அணிவது அவசியம்.

7/11. உருளைக்கிழங்கைத் துருவி அதன் சாற்றில் பஞ்சை நனைத்து கண்களில் வைத்தால் கருவளையம் குறைவதோடு கண்களும் குளிரும்.

8/11. இரவு 7-8 மணிநேர ஆழ்ந்த தூக்கம் கண்களுக்குத் தேவையான ஓய்வைத் தந்து சூட்டைத் தணிக்கும்.

9/11. மொபைல் மற்றும் லேப்டாப் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ளவும். 20-20-20 விதியைப் பின்பற்றுங்கள். ஒவ்வொரு 20 நிமிடத்திற்கும் 20 அடி தூரத்தில் உள்ள பொருளை 20 விநாடிகள் பார்க்கவும்.

10/11. வைட்டமின் A நிறைந்த உணவுகளை உட்கொள்வது கண்களின் ஆரோக்கியத்திற்குப் பலம் சேர்க்கும்.

11/11. காய்ச்சாத குளிர்ந்த பாலில் பஞ்சை நனைத்து கண்களின் மேல் வைப்பது சிறந்த பலனைத் தரும்.

# மழையின் போது வரும் மண் வாசனையின் பின்னணியில் இருக்கும் உண்மை...

கடும் வெயிலுக்குப் பிறகு லேசாக தூறல் விழும்போது எழும் அந்த அற்புதமான மண் வாசனைக்கு மயங்காத ஆட்களே உலகத்தில் இருக்க முடியாது. சூடான தேநீரைப் பருகிக்கொண்டே அந்த வாசனையை ரசிப்பது நம்மில் பலருக்கு மிகவும் பிடித்தமான ஒரு விஷயம்.

இது ஏதோ இயற்கையாக நடக்கும் ஒரு சாதாரண நிகழ்வு என்றுதான் நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த மனதை மயக்கும் நறுமணத்திற்கு பின்னால் செம சுவாரஸ்யமான சில வேதியியல் உண்மைகள் மறைந்து கிடக்கின்றன.

ரகசியம்!

1964-ம் ஆண்டில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சில விஞ்ஞானிகள் தான் இந்த வாசனைக்கான காரணத்தை முதன்முதலில் உலகிற்கு வெளிப்படுத்தினர். அவர்கள் இந்த வாசனைக்கு பெட்ரிகோர் (PETRICHOR) என அழகாக பெயர் சூட்டினார்கள். இந்த வார்த்தை பழங்கால கிரேக்க மொழியிலிருந்து எடுக்கப்பட்டது.

அவர்களின் மொழியில் பெட்ரா என்றால் பாறை என்றும் இக்கோர் என்றால் கடவுள்களின் நரம்புகளில் ஓடும் புனிதமான ரத்தம் என்றும் அர்த்தம். கோடை காலத்தில் சில செடி கொடிகள் வெளியிடும் ஒரு வகையான இயற்கை எண்ணெய் வறண்ட பாறைகளிலும் மண்ணிலும் போய் படிந்து விடுகிறது. இதுதான் மழையின் போது வாசனையாக மாறுகிறது.

மண்ணுக்குள் இருக்கும் பாக்டீரியா!

இந்த இதமான வாசனைக்கு



இன்னொரு மிக முக்கிய காரணம் மண்ணுக்குள் வசிக்கும் ஆக்டினோமைசெட்ஸ் எனப்படும் கண்ணுக்குத் தெரியாத ஒரு பாக்டீரியா தான். கடும் வறட்சி நிலவும் போது இந்த நுண்ணுயிரிகள் மண்ணுக்குள்ளேயே வித்துக்களை உருவாக்கி அமைதியாக காத்திருக்கும்.

மழை பெய்யத் தொடங்கியவுடன் இந்த பாக்டீரியாக்கள் விழித்துக்கொண்டு ஜியோஸ்மின் என்ற ஒரு பிரத்யேகமான வேதிப்பொருளை வெளியேற்றுகின்றன. உண்மையில் நாம் ரசிக்கும் அந்த தூய்மையான மண் வாசனை என்பது இந்த ஜியோஸ்மின் வேதிப்பொருளின் வாசனைதான்.

மூக்கின் சக்தி!

இதைவிட வியப்பான விஷயம் என்னவென்றால் நமது மூக்கு இந்த ஜியோஸ்மின் வாசனையை நுகர்வதில் ஒரு பெரிய கில்லாடி என்று சொல்லலாம். பல ஆயிரம் லிட்டர் தண்ணீரில் ஒரு சிறு துளி ஜியோஸ்மின் கலந்திருந்தால் கூட மனித மூக்கால் அதை மிக துல்லியமாக கண்டுபிடித்துவிட முடியும். பழங்காலத்தில் வாழ்ந்த நமது முன்னோர்களுக்கு குடிநீரை தேடி கண்டுபிடிப்பதற்கும் மழை வருவதை முன்கூட்டியே கணிப்பதற்கும் இந்த திறன் பெரிய அளவில் உதவி இருக்கிறது.

மேலும் மழைத்துளி தரையில் பட்டவுடன் சோடா பாட்டிலை திறக்கும்போது வரும் குமிழ்கள் போல நுட்பமான காற்று குமிழ்கள் உருவாகும். இந்தக் குமிழ்கள் வெடித்து சிதறும்போது தான் அந்த வாசனை காற்றில் வெகுதூரம் பயணிக்கிறது. இதனை அறிவியல் உலகில் ஏரோசல் விளைவு என்று கூறுகிறார்கள்.

இயற்கையின் ஒவ்வொரு சிறிய விஷயத்திற்கு பின்னாலும் இப்படி ஒரு பிரம்மாண்டமான இயற்பியல் மற்றும் உயிரியல் அறிவியல் ஒளிந்திருப்பது உண்மையிலேயே பிரம்மிப்பான ஒன்றுதான். செடிகள் வெளியிடும் எண்ணெய் மற்றும் மண்ணுக்குள் வாழும் கண்ணுக்கு தெரியாத பாக்டீரியாக்கள் என எல்லாம் ஒன்று சேர்ந்துதான் நமக்கு இந்த மகிழ்ச்சியான உணர்வை பரிசளிக்கின்றன.

# மந்திர காசு



அரவிந்த் அன்று அதிக கோபத்தில் இருந்தான். என்னப்பா..எனக்காக எந்த சொத்தும் சேர்த்து வைக்கல.. இவ்வளவு காலம் என்ன பண்ணுனிங்க என்று கேட்க.. படுத்த படுக்கையாக இருந்த அரவிந்தின் தந்தை மெல்ல கண் திறந்துப் பார்த்தார். மகனே.. கவலைப் படாதே.. எந்த சொத்தும் சேர்த்து வைக்கலன்னு கவலைப் படுற.. அந்த பழைய பெட்டியை திற . அதில் பழங்கால நாணயம் ஒன்று இருக்கிறது. அது விலை மதிக்க முடியாதது. அது ஒரு மந்திர காசு.அதில் என்ன எழுதியிருக்கிறது என்று படித்தால் உனக்கு புதையலே கிடைக்கும் என்றார். சிறு அரவிந்த் ஓடிப் போய் அந்த பழைய பெட்டியைத் திறந்து அதிலிருந்த பழங்கால நாணயத்தை எடுத்துக்கொண்டு தந்தையை நோக்கி ஓடி வந்துப் பார்த்தான்.அவர் இறைவனடி சேர்ந்திருந்தார்.

அப்போது அரவிந்தின் மனைவி அருணா என்னாச்சு என்றுவர அரவிந்த் அந்த நாணயத்தைக் காட்டி விளக்கினான்.அதற்கு அவள் புதையல் கிடைக்குமா.. இவ்வளவு நாள் உங்க அப்பா சொல்லாமல் காலம் தாழ்த்திட்டார். இல்லன்னா எப்போதோ நமக்கு புதையல் கிடைச்சிருக்கும்.காசிலே என்ன எழுதியிருக்குன்னு தெரியலையே. மந்திர காசுங்கிறதால மந்திரவாதிக் கிட்ட காசை காட்டுவோம்.. வாங்க என்று அரவிந்தை அழைத்தாள். அவனும் ..சரி..முதலில் அவரைப் பார்ப்போம் என்று சொல்ல இருவரும் மந்திரவாதியை தேடிச் சென்றனர்.

காசைப் பார்த்த மந்திரவாதி.. ஓ.இது என்ன மந்திர காசா.. இது என்ன எழுத்து என்று திரும்ப திரும்ப படித்துப் பார்த்தார். புரியவில்லை. இதை படித்தால் புதையல் கிடைக்குமா.. உங்க அப்பாவிடம் என்ன எழுத்து என்றுகேட்கவேண்டியது தானே என்க அரவிந்த்.. ஐயோ.. அதுக்குள்ளே அவர் போயிட்டாரே என்றான் மந்திரவாதி.. ஓ.. என்ன செய்யலாம்..எனக்கு தெரிந்த ஒருவர் இருக்கிறார். பழங்கால காசில் உள்ள எழுத்தை யெல்லாம் படிப்பார்.ஆனா ஒண்ணு புதையல் கிடைச்சா எனக்கு பாதி..உனக்கு பாதி சரியா என்று சொல்ல அரவிந்தன் யோசித்தான். ... அவன் மனைவி ம்..சரி என்று சொல்லுங்கள் என்று அவசரப்படுத்த அரவிந்தனும் தலையை ஆட்டினான். உடனே மந்திரவாதி புன்னகையுடன் வாங்க என்றபடி அவர்களை அருகில் உள்ள ஒரு தொல்லியியல் ஆய் வாளர் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

மந்திர நாணயத்தை அவரிடம் மந்திரவாதி கொடுத்து.. அய்யா இதில் என்ன எழுதியிருக்கு சொல்லுங்கள் அய்யா! அவர் நாணயத்தை வாங்கிப் பார்த்தார். தண் ணீரால் கழுவிவிட்டு உற்று நோக்கினார். இது மன்னர்கள் கால நாணயம் போல் தெரிகிறது. எழுத்து என்ன எழுதியிருக்கிறது..என்று ... இழுக்க.. மந்திரவாதியோ சீக்கிரம் படிங்க.. புதையல்.. புதையல் என்று அவசரப் படுத்த.. தொல் பொருள் ஆய்வாளர்.. கொஞ்சம் அமைதியாக இருங்க.. படிக்கிறேன் .. பழங்கால வட்டெழுத்திலே எழுயிருக்கு.. என்ன.. ஆ.. நல்லாபடிச்சி சொல்லுறேன் என்றார். சீக்கிரம் படிங்க என்று அரவிந்தன் மனைவி சொல்ல.. தொல்பொருள் ஆய்வாளர்.. - அவசரப்படாதம்மா.. இது வட்டெழுத்து.பார்த்து - படிக்கணுமா என்றவர் கையில் பெரிய லென்சை எடுத்து காசில் உள்ள எழுத்தைப் படித்தார். முதல் எழுத்து உ என்று போட்டிருக்கு என்று அவர் சொல்ல.. அது சின்ன உவா பெரிய உவா என்று மந்திரவாதி கேட்க சின்ன உ தான் என்று அவர் த சொன்னார். அப்படியா தொடர்ந்து படிங்க என்று மந்திரவாதி சொல்ல தொல்பொருள் ஆய்வாளர் சரி என்றவாறு படித்தார். ழை ..ப் ..பே ..உ...ய..ர்..வு..என்று அவர் சொல்ல.. அரவிந்த் புரியலையே என்றான். மந்திரவாதி. ம்..எழுத்துக்களை சேர்த்துச்சொல்லுங்க என்ற உடன் தொல்பொருள் ஆய்வாளர் எழுத்துக்களை சேர்த்துப்படித்தார். உழைப்பே உயர்வு என்று அவர் சொல்ல மந்திரவாதியும் அரவிந்த் நல்லாபடித்து சொல்லுங்க என்க..அவர் ..உழைப்பே உயர்வு என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். அட..இதுதான் மந்திரச் சொல்லா..புதையல் கிடைக்காதா என்று அரவிந்தன் கேட்க.. தொல்பொருள் ஆய்வாளர்.. அதுவா.. உழைத்தால் எல்லா புதையலும் கிடைக்கும் என்றார். உழைக்காமல் சுற்றித்திரிந்த அரவிந்துக்கு யாரோ சாட்டையால் அடிப்பது போலிருந்தது. இருக்கிற பணத்தை வைத்து தந்தையின் உடலை அடக்கம் செய்ய புறப்பட்டான்.

**கோ.சுரேஷ்குமார், கோவில்பட்டி**

# அடிக்கும் மனங்கள்...



சாய்ந்த புல் தரையில் மல்லாந்து படுத்திருந்தார் பொன்னுச்சாமி.. நினைவுகள் குப்புற கவிழ்ந்து கிடந்தன அவர் மேலெல்லாம். நேற்று சாயங்காலம் எம்.டி. அந்த வார்த்தை பேசிட்டாரே.. ரொம்ப நியாயமா இவர் எதிர்பார்த்த பிரமோஷன்! ரிட்டயர் ஆகுமுன்னால் கிடைச்சா அதனுடைய மதிப்பு தனி தான். எல்லாருமாக சேர்ந்து பாராட்டி அனுப்புவாங்க. ஒரு தலைமை அதிகாரியா தன்னோட திறமையையும் கனிவையும் அவங்ககிட்ட காட்டலாம்னு ஆசைப்பட்டது தப்பா? வரவேண்டிய நேரம் வரவில்லை என்கிறதனால்தானே போய் எம்.டி. கிட்ட கேட்டேன்?

"உங்க ரிட்டயர்மென்ட்க்கும் கம்பெனி நார்ம்ஸ் படி வர்ற பிரமோஷனுக்கும் என்னய்யா சம்பந்தம் இருக்கு? யாருக்கு எப்ப பிரமோஷன் கொடுக்கணும்னு எனக்குத் தெரியும்.." சாடிவிட்டார்.

"ரிக்வெஸ்ட்தானே சார்? நீங்க தானே கன்சிடர் பண்ணனும்?"

"அப்படின்னா மெயில்ல பண்ணுங்க. நேரில் வந்து இடைஞ்சல் பண்ணாதீங்க."

"இடைஞ்சலா?"

"ஆமா, இடைஞ்சல்தான். மைண்ட்ல முக்கியமான தாட்ஸ் ஓடிட்டிருக்கு. இந்த நேரத்தில் இது இடைஞ்சல் தான்.. ப்ளீஸ்!" கதவைக் கை காட்டிற்று.

எத்தனையோ எம்.டி. பார்த்திருக்கிறார். யாரும் கெட் அவுட் சொன்னதில்லை. மனம் புழுங்கி வெளியே வந்தார். கண்ணாடிக் கதவு. எத்தனை பேர் பார்த்தார்களோ, என்ன நினைத்தார்களோ..? இப்பவும் எரிந்தது மனது.. இப்ப எதிரில் வந்தார் என்றால் கடித்துக் குதறி விடலாம் போல மனம் கொதித்தது.

மருமகள் காலையில் எடுத்தெறிந்து பேசியது அந்த நினைப்புக்கு மேலே வந்து விழுந்தது.. சூடாக காபி குடிப்பவர் எப்போதும். அதிலும் அந்த காலை காபி அவருக்கு ரொம்ப முக்கியம்.. "என்னம்மா சூடு இல்லையே...?" இதமாகத்தான் கேட்டார்.

"சூடாய்த்தானே இருந்தது நான் கொண்டு வந்து வைக்கும்போது?" வெடுக்கென கேட்டாள். ரெண்டு செகண்ட் தாமதமாயிருக்குமா பூஜையில் இருந்து வருவதற்கு? அதிலா ஆறிவிட்டிருக்க போகிறது? வந்து அதை எடுத்துக் கொண்டு போன விதமும் சூடாக்கி திரும்பக் கொண்டு நச் என்று வைத்த விதமும்... அவரை ரொம்ப அவமானப்படுத்தி விட்டது. "பரவாயில்ல, நாளையிலிருந்து பிளாஸ்கில விட்டு வெச்சிடும்மா."

"அதை யார் க்ளீன் பண்றது? எத்தனை தடவை வேணாலும் சொல்லுங்க, சூடு பண்ணித் தந்திடறேன்!"

அவர் எந்த பதிலும் சொல்ல முடியாத பதிலை சொல்லிவிட்டாள்.. மனதில் இருந்து அதை பிடுங்க முடியவில்லை.. ஓங்கி ஒரு அறை விடலாம் போல இப்பவும் தோன்றுகிறது.

"என்னப்பா சின்ன சின்ன விஷயங்களுக்கெல்லாம் பிரச்சனை பண்ணிட்டு.. எதுனாலும் என்னை கேட்கச் சொல்லி இருக்கிறேன்ல? அவ ஆயிரம் பிரச்சினையில் இருப்பா.. சரி, அந்த லோன் பத்தி யோசிச்சீங்களா? எத்தனை நாளா கேட்கிறேன்?"

"இன்னும் யோசிக்க என்னப்பா இருக்கு? அதான் வேணாம்னு சொன்னேனே? இந்த வயசில நீ கையில இருக்கிற வேலையை பத்திக் கவலைப்படாம சினிமா தயாரிக்க இறங்கறது சரியா படலே.. இருக்கிற ஒரே வீட்டில் ரிஸ்க் எடுக்க வேண்டாம்."

"இத பாருங்கப்பா, உங்க அபிப்பிராயத்தைக் கேட்கலே. மேலும் பூர்வீக வீடு தான். நீங்க வாங்கினது இல்லை.. கையெழுத்து போடத்தான் கூப்பிடறேன். சட்டுபுட்டுன்னு ஒரு நாள் சொன்னீங்கன்னா போய் லோன் எடுத்துட்டு வந்துடலாம், அவ்வளவுதான்.."

"இல்லேப்பா, இது நீதான் ரொம்ப யோசிக்கணும். உனக்கு நாளைக்கு இருக்கிற ஒரே சொத்து அதுதான்."

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்.. தட்டிக் கொடுக்கிறதை விட்டுட்டு தடை பண்ணிட்டே இருக்கீங்க.. உங்களால நான் படாத பாடுபடுறேன்.. கொஞ்சம்கூட விவரமில்லாம..."

தூக்கி வளர்த்த பையன். தூக்கி எறிஞ்சு பேசறான். இப்ப எதிரில் நின்றால் கையில் கிடைப்பதை தூக்கி வீசணும்போல இருந்தது.

எல்லா நிகழ்வுகளுக்கும் ஒரு காமன் ஃபேக்டர் இருக்கு என்று தோன்றியது. எதிர்த்து செயல்பட இயலாமை. மனசே, நீதான் தாங்கிக்கணும்! தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டார். படிச்ச கொட்டேஷன் நினைவுக்கு வந்தது. பழமொழிகளும்! எதுவும் அமைதி படுத்த முடியவில்லை அவரை.

எத்தனை நேரம் அப்படி கிடந்தாரோ தெரியவில்லை. எழுந்து பார்க்கில் இருந்து வீட்டுக்கு நடந்தார் ஞாயிற்றுக்கிழமை என்பதால் தெரு வெறிச்சோடிப்போய் இருந்தது. .

எதிரே சைக்கிளில் ஒருவன் வந்து கொண்டிருந்தான். எலும்பும் தோலுமாக இருந்தான். பேலன்ஸ் தடுமாறியதிலா அல்லது இவர் லேசாக வலது பக்கம் சாய்ந்ததனாலேயா, மோதி விட்டான். சைக்கிள் கீழே சாய அவன் தடுமாறி விழுந்தவன் எழுந்து கொண்டான்

"என்ன பெருசு, கொஞ்சம் பார்த்து வரக்கூடாதா? கண்ணு தெரியலையா?"என்று அவன் கேட்டது தான் தாமதம்..

"யாருக்குடா கண்ணு தெரியல? நீ பேலன்ஸ் தவறி விழுந்துட்டு என் மேல சாடறியா.."

எப்போ ஆரம்பித்தார் என்று தெரியாது. படபடவென்று அவனை அடித்து விட்டார்.. அவன் விடுங்க விடுங்க என்று கேட்டது அவர் காதில் விழுந்தால்தானே? ஆட்கள் வந்து விலக்கியதும்தான் சுய நினைவுக்கு வந்தார். அவன் விருட்டென்று ஓடி விட்டான்..

"என்ன பண்ணினான் சார்? ஏதாச்சும் திருடிட்டானா?" யாரோ கேட்டார்கள். "இப்படி அடிச்சிட்டீங்களே?"

அவர் உடலில் படபடப்பு இன்னும் அடங்கவில்லை.. "நான் அடிக்கலே! அவங்க தான்! நான் அடிக்கலே! அவங்க தான்!" என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார்.



**-கே.பி. ஜனார்த்தனன்**

# திருவிளையாடல் புராணம் 32



**சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி.

## வளையல் விற்ற படலம்

இப்படலத்தில் சிவபெருமான், தாருகாவனத்து முனிவர்களின் மனைவியரின் கர்வத்தை அடக்கும் பொருட்டு, வளையல் விற்கும் வணிகனாக வந்து, அவர்களின் மனதை மாற்றுவதாக கதை அமைந்துள்ளது. "வளையல் விற்ற படலம்", திருவிளையாடல் புராணத்தின் 32-வது படலமாகும். இது கூடற்காண்டத்தில் வருகிறது.

முற்காலத்தில் மதுரையிலேயே தாருகாவனம் என்ற பகுதி இருந்ததாகக் கருதப்படுகிறது. அங்கு பல ரிஷிகள் தங்கள் பத்தினியருடன் வசித்து வந்தனர். அந்தப் பெண்களுக்கு தாங்களே உலகில் பேரழகு கொண்டவர்கள் என்றும், தங்களது கற்பே உயர்ந்ததென்றும் கர்வம் இருந்து வந்தது. இவ்வாறு நினைப்பதன் மூலம், உலகிலுள்ள மற்ற பெண்கள் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் அவர்களது மனதில் வேர்விட்டது. இவர்களையும் விட உயர்ந்த பெண்கள் உலகில் உண்டு என்பதை அவர்களுக்கு அறிவுறுத்த திருவுள்ளம் கொண்டார் சோமசுந்தரர். இதற்காக அவர் பட்டுக்கோவணம் உடுத்தி, புலித்தோலை மார்பில் சுற்றி, திருநீறு அணிந்து, செக்கச்சிவந்த மேனியுடன், திருவோட்டுடன் தாருகாவனத்துக்குள் புகுந்தார். இதுபோன்ற துறவிகள் வந்தால் பக்தியல்லவா பெருக் கெடுக்க வேண்டும்! தாருகாவனத்து ரிஷி பத்தினிகளின் உள்ளத்தில், ஆஹா... இவன் பேரழகனாக இருக்கிறானே என்ற எண்ணம் எழுந்தது. அவர்கள் கற்பிலும், அழகிலும் உயர்ந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. அதற்காக மற்றவர்களை உதாசீனப்படுத்தும் புத்தி இருக்கிறதே! இதை அகற்றத் தானே இறைவன் வந்திருக்கிறார். வந்தவர், அவர்களது மனங்களை மயங்கச் செய்தார். தன்னை பேரழகன் என வர்ணிக்கும்படி செய்தார். திருமணமான பெண்கள் மாற்றானை பேரழகன் எனக் கருதினாலே அவர்களது கற்புக்கு பங்கம் வந்துவிடும். அந்தப் பெண்களும் தங்கள் கற்புத்திறனை இழந்தனர். தங்களையே மறந்து பிச்சை கேட்டு தங்கள் வீட்டுவாசலுக்கு வந்த சோமசுந்தரரைக் கண்டு மயங்கினர். நீயே பேரழகன் என்று மயங்கிய அவர்கள் உடல் மெலிந்தனர். அவர்களது வளையல்கள் கழன்று திருவோட்டில் விழுந்தன. சில பெண்கள் இடையில் அணியும் மேகலைகளும் கழன்றன. அவற்றையும் தங்களையும் அறியாமல் அந்த திருவோட்டில் இட்டனர். பின்னர், ஓரளவுக்கு சுதாரித்து, தாங்கள் செய்த தவறை உணர்ந்தனர். ஒரு பிச்சைக்கார பேரழகனிடம் சற்றுநேரமேனும் தங்கள் மனதைப் பறி கொடுத்தது



நினைத்து வருந்தினர். தங்களுக்கு ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. தங்களையறியாமல் நடந்த இந்த தவறு கணவன்மாருக்கு தெரிந்தால் நிலைமை என்னாகும்? மேலும், வளையலும், மேகலையும் எங்கே என அவர்கள் கேட்டால் என்ன பதில் சொல்வது? அவர்களது உடல் நடுங்கியது. அவர்கள் தங்களையும் மறந்து அந்த பிச்சைக்காரனின் பின்னால் சென்றனர். வளையல்களையும், மேகலையையும் தந்துவிடும் படி கெஞ்சினர். சிவனோ, அதைக் கண்டு கொள்ளவே இல்லை. நடந்து கொண்டே இருந்தார். அவரிடம், தங்கள் பொருட்களைப் பெற முடியாததால் இல்லம் திரும்பிய அவர்கள், தங்கள் கணவன்மாருக்கு இது தெரிந்தால் என்னாவது என்ற கவலையுடன் இருந்தனர். முனிவர்களும் வந்துவிட்டனர். ரிஷிபத்தினிகள் மனம் பதைக்க நின்று கொண்டிருந்தனர். தங்கள் மனைவியரின் மனநிலை மாறிப்போனதை ஞானத்தால் உணர்ந்து கோபமடைந்த ரிஷிகள், கமண்டல நீரை அவர்கள் மீது தெளித்து, பெண்களே! சோமசுந்தரரிடம் மன சஞ்சலப்பட்ட நீங்கள் அவர் வசிக்கும் மதுரையில் வசிக்கும் வணிகர் குலத்தில் பிறவி விடுங்கள், என்று கூறி விட்டனர். அந்தப் பெண்கள் தங்கள் கணவன்மாரிடம், தாங்கள் மீண்டும் முனிபத்தினிகளாக வரம் கேட்டனர். பெண்களே! மதுரையில் நீங்கள் வசிக்க இருக்கும் வீடுகளுக்கு பிச்சை கேட்டு சோமசுந்தரர் வருவார். அவருக்கு பிச்சையிடும் போது, அவரது கைகள் பட்டு உங்களுக்கு சாபவிமோசனம் கிடைக்கும், என்றனர்.


அதன்படி அந்தப் பெண்கள் மதுரையில் வணிகர் குலத்தில் பிறந்தனர். அவர்கள் சோமசுந்தரரின் கோயிலுக்கு தினமும் சென்று பெருமானை வணங்கி வந்தனர். சோமசுந்தரர் அவர்கள் மீது கருணை கொண்டார். மீண்டும் அவர்கள் ரிஷிபத்தினிகளாக தன் திருவிளையாடலைத் தொடங்கினார். ஒரு வளையல் வியாபாரி போல் வேடமணிந்தார். அந்தப் பெண்கள் முனிபத்தினிகளாக இருந்த போது தன்னைக் கண்டு கழன்று விழுந்த வளையல்களை எல்லாம் கோர்த்து தன் முதுகில் போட்டுக் கொண்டார்.

வளையல் வாங்கலையோ வளையல், என்று கூவியபடியே வணிகர்கள் வசிக்கும் தெருவுக்கு வந்தார். வணிகர் குலப்பெண்களாக பிறந்த ரிஷிபத்தினிகள் அந்தக் குரல் கேட்டு வெளியே வந்தனர். கம்பீரமான அழகான இளைஞனாக வந்த சோமசுந்தரரைக் கண்டு வெட்கப்பட்ட அவர்கள், அவர் கைப்பிடித்து வளையல் இட்டால் வெட்கமாக இருக்குமே என அஞ்சினர். இருந்தாலும் வளையல் மீதான ஆசை விடவில்லை. அவர்கள் அந்த இளம் வியாபாரியை அழைத்து தங்களுக்கு வளையல் அணிவிக்கும்படி வேண்டினர். ஈசனும், அவர்களின் கைப்பிடித்து வளையல்களை அணிவித்தார். அப்போது அவர்களின் உள்ளம் எங்கோ பறந்தது. அவர்கள் தன்னிலை மறந்தனர். மீண்டும் மீண்டும் அவரிடம் கைய நீட்டி வளையல் அணிவிக்க வேண்டும் போன்றதொரு உணர்வு தோன்றியது.வணிகரே! இந்த வளையல்கள் மிக அழகாக உள்ளன. இவற்றை எங்கே கொள்முதல் செய்தீர்? நாளைக்கும் இதே போல வளையல் கொண்டு வாருங்கள், என்றனர். பின்னர், வாங்கிய வளையல்களுக் குரிய பணத்தை நீட்டினர். அதை வாங்க மறுத்த சோமசுந்தரர், நாளையும் என்னை வரச்சொல்லி இருக்கிறீர்கள் அல்லவா? அப்போது, மொத்தமாக பணம் பெற்றுக் கொள்கிறேன், என்று சொல்லிவிட்டு, அவர்களின் பதிலுக்கு காத்திராமல் கிளம்பிவிட்டார். அந்தப் பெண்களுக்கு அவரை விட மனமே வரவில்லை. ஏதோ ஒரு சக்தி உந்த, அந்தப் பெண்கள் எல்லாம் அவர் பின்னாலேயே சென்றனர். கோயிலுக்குள் சென்ற அவர் சுந்தரேசரின் கருவறைக்குள் சென்றார். பெண்களும் பின் தொடர்ந்தனர். அவர் சிவலிங்கம் இருக்கும் இடம் வரை சென்று விட்டார். அந்தப் பெண்கள் அதிர்ச்சியுடன் அவரை நோக்கினர். லிங்கத்தின் அருகில் சென்ற அவர், லிங்கத்துடன் ஐக்கியமாகி விட்டார். அதன்பின் தான் வந்தவர் சோமசுந்தரர் என்பதையும், வணிகர் குலத்தில் பிறந்த தங்களை ஆட்கொள்ள வந்தவர் என்பதும் புரிந்தது. சிவதரிசனம் பெற்ற அவர்கள் மதுரையில் பல்லாண்டு வாழ்ந்தபின், மீண்டும் ரிஷிபத்தினிகளாகும் பாக்கியம் பெற்றனர்.

ஆணவம் தண்டனையைப் பெற்றுத் தரும் என்பதே வளையல் விற்ற படலம் கூறும் கருத்தாகும்.

(தொடரும்)

# இப்படி ஒரு ஊரா வரராசைபுரம்



இந்த ஊர் தமிழகத்தின் தென்பகுதியில் இருக்கிறது.

இப்படி ஒரு ஊரா... கேள்விப்பட்ட மாதிரியே இல்லை என்பவர்கள், இந்தப் பட்டியலைப் படித்தால், உடனே இந்த ஊருக்குப் புறப்பட்டு விடுவீர்கள்.

இங்கு ஒருநாள் தங்கினால் முற்பிறவியில் செய்த பாவமும், இரண்டு நாள் தங்கினால் இப்பிறப்பில் செய்த பாவமும், மூன்று நாள் தங்கினால் மறுபிறவியில் பாவமே செய்ய இயலாத மனநிலையும் ஏற்படும்.

ஞாயிறன்று இங்கு சூரியனை மனதில் நினைத்து விரதமிருப்பவர் கண் வியாதியின்றி இருப்பர்.

திங்களன்று சந்திரனை நினைத்து விரதமிருப்பவர் வாழ்வுக்குப் பின் சிவலோகம் அடைவர்.

செவ்வாயன்று விரமிருப்பவர் நோய் மற்றும் சனிதோஷத்தில் இருந்து நிவர்த்தி பெறுவர்.

புதனன்று விரதமிருப்பவர்கள் கல்வியில் சிறப்பாகத் திகழ்வர்.

வியாழன்று விரதமிருந்தால், ஆசிரியர் பதவி பெறலாம். (டி.இ.டி. தேர்வு எழுதுவோர் சென்று வரலாம்)

வெள்ளியன்று விரதமிருப்போர் இந்திரனைப் போல் செல்வவளத்துடன் வாழ்வர்.

சனிக்கிழமை விரதமிருப்பவர் பொறாமை முதலிய துர்க்குணங்கள் நீங்கப்பெறுவர்.

ஒரு வருடம் பழமும், ஒரு வருடம் சருகும், ஒரு வருடம் தண்ணீரும், ஒரு வருடம் அதுவும் கூட இல்லாமல் விரதமிருந்தார்கள் அந்தகால ரிஷிகள்.

இது எதுவுமே இங்கு தேவையில்லை.. ஒரே ஒரு வேளை பட்டினி இருந்து இத்தலத்து இறைவனை வணங்கினாலே போதும்...

பல நூறு யாகங்கள் செய்த பலன் கிடைத்து விடும்.

அப்பாவை கோபத்தில் அடித்திருந்தால்... ஆசிரியரை நிந்தனை செய்திருந்தால்... நம்மை நம்பி பிறர் கொடுத்த பொருளை திருப்பிக்கொடுக்காமல் ஏமாற்றியிருந்தால்... பிறரை ஏமாற்றி இருந்தால்.. ஏழைகளுக்கு தானம் செய்யாமல் பாவம் செய்திருந்தால்...இந்த வரராசைக்கு{கோயில்} வந்தால் போதும்.

கொடிய பாவங்கள் நீங்கிவிடும்.

இக்கோயிலில் புற்றுமண்ணே பிரசாதம்.

இத்தலத்து இறைவனே தருகிறார்.

அதனால், இதை விட உயர்ந்தலம் வேறில்லை.

சிவகணங்களில் நந்தீஸ்வரர், நவரத்தினங்களில் வைரமும், ராசிகளில் சிம்மமும், தேவர்களில் இந்திரனும், மிருகங்களில் கஸ்தூரி பூனையும், இலைகளில் வில்வமும், பாணங்களில் பாசுபதாஸ்திரமும், சக்திகளில் உமாதேவியும், பூக்களில் தாமரையும், குருக்களில் வியாழ பகவானும், முனிவர்களில் அகத்தியரும், பிள்ளைகளில் பக்ஷீரதனும் எப்படி உயர்ந்ததோ... அதுபோல், தலங்களிலேயே வராரசை தான் உயர்ந்தது.

இதற்கு புன்னைவனம், சீரரசை என்றும் பெயருண்டு.

இங்கே ஒரு சிவனடியாருக்கு தானம் செய்தால் மற்ற தலங்களில் லட்சம் சிவனடியார்களுக்கு சேவை செய்தபலன் கிடைக்கும்.

இங்கு ஒரு பசுவை பிராமணருக்கு தானம் செய்தால், தேவலோகத்து காமதேனுவே அவர்களுக்கு பணிவிடை செய்ய வரும்.

இங்குள்ள குளத்தில் நீராடினால் குழந்தை பாக்கியம் உண்டு.

இங்கே தன் ஒரு மகளுக்கு திருமணம் முடித்தால் கூட, ஆயிரம் கன்னிகாதானம் செய்த பாக்கியம் கிடைக்கும்.

இவற்றை வேதவாக்கியமென நம்புவோர் மோட்சம் அடைவர் என்கிறார் புராணக்கதைகளை உலகுக்கு அளித்த சூதமுனிவர்.

இந்தத்தலம் எதுவென இன்னும் புரியவில்லையா?

சங்கரனாகிய சிவனும், நாராயணனாகிய திருமாலும் இணைந்திருக்கும் சங்கரநாராயணர் , கோமதி அம்பாள் சமேத சங்கரலிங்க சுவாமி கோயில்...

ஊர் பெயர் சங்கரன்கோவில்.

இந்த பதிவில் கூறப்பட்டுள்ள இந்த ஊரின் சிறப்புகளை படித்த நீங்கள் வாழ்வில் ஒருமுறையாவது இங்கே சென்று வந்து விடுவீர்கள் தானே!

தகவல்:
முனைவர்
இராம.வேதநாயகம்.

# தினம் ஒரு தலைவர்கள் தோண்டியா வாக் வரலாறு

தொண்டியா வாக் (செப்டம்பர் 10, 1800 இல் இறந்தார்) 18 ஆம் நூற்றாண்டு இந்தியாவில் ஒரு சிப்பாய் மற்றும் சாகசக்காரர். மைசூரின் ஆட்சியாளரான ஹைதர் அலியின் சேவையில் தனது வாழ்க்கையைத் தொடங்கினார் . மூன்றாம் ஆங்கிலோ-மைசூர் போரின் போது , அவர் அலியின் வாரிசான திப்பு சுல்தானை விட்டு வெளியேறி , பின்னர் மராட்டிய -மைசூர் எல்லையில் உள்ள பகுதிகளைத் தாக்கினார். மராட்டியர்கள் அவரை பின்வாங்க கட்டாயப்படுத்திய பிறகு, அவர் திப்புவிடம் அடைக்கலம் தேடி இஸ்லாத்திற்கு மாறி, தனது பெயரை மாலிக் ஜஹான் கான் என்று மாற்றிக்கொண்டார் . நான்காவது ஆங்கிலோ-மைசூர் போரில் திப்பு இறந்த பிறகு , முன்னாள் மைசூர் இராணுவத்தைச் சேர்ந்த வீரர்களைக் கொண்ட ஒரு படையை அவர் உருவாக்கி, மைசூர் இராச்சியத்தின் வடக்குப் பகுதியைக் கைப்பற்றினார். அவர் தன்னை உபய-லோகாதீஷ்வரர் ("இரண்டு உலகங்களின் ராஜா") என்று கூறிக் கொண்டார். பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியும் மராட்டிய பேஷ்வாவும் அவரது எழுச்சியைத் தடுக்க படைகளை அனுப்பினர். இறுதியில் ஆர்தர் வெல்லஸ்லி தலைமையிலான பிரிட்டிஷ் படையால் அவர் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார் .

ஆரம்ப கால வாழ்க்கை தோண்டியா வாக் மைசூர் இராச்சியத்தில் ( இன்றைய கர்நாடகா) சன்னகிரியில் பிறந்தார் . அவர் பவார் குலத்தைச் சேர்ந்த ஒரு மராட்டிய குடும்பத்தைச் சேர்ந்தவர் . ஹைதர் அலியின் ஆட்சிக் காலத்தில் , பிஷ்ணு பண்டிட்டின் தலைமையில் மைசூரின் படையில் ஒரு துருப்பு வீரராகச் சேர்ந்தார். படிப்படியாக, திப்பு சுல்தானின் ஆட்சிக் காலத்தில் அவர் ஒரு ஷிலேதர் (குதிரைப்படை அதிகாரி) பதவிக்கு உயர்ந்தார் .

மூன்றாம் ஆங்கிலோ-மைசூர் போருக்குப் பிறகு மூன்றாம் ஆங்கிலேய-மைசூர் போரின் போது , வாக் திப்புவின் சேவையை விட்டு வெளியேறினார், பல வீரர்களையும் கணிசமான செல்வத்தையும் தன்னுடன் அழைத்துச் சென்றார். அவர் லட்சுமேஸ்வராவின் தேசாய் (மராட்டிய வருவாய் சேகரிப்பாளர்) கீழ் தஞ்சம் புகுந்தார். 1792 இல் போர் முடிவடைந்த பிறகு, மராட்டிய-மைசூர் எல்லையில் உள்ள பகுதிகளின் ஆட்சியாளராக தன்னை அறிவித்துக் கொண்டார். அவர் கிராமங்களை சூறையாடத் தொடங்கினார் மற்றும் தார்வாடைச் சுற்றியுள்ள பகுதிகளில் வரிகளை வசூலித்தார் . ஜனவரி 1793 இல், அவர் ஹாவேரியைக் கைப்பற்றினார் , மேலும் சவனூரை ஆக்கிரமித்தார் . ஸ்ரீரங்கப்பட்டினம் ஒப்பந்தத்தின்படி மைசூர் மராட்டியர்களுக்கு வழங்கிய பிற பிரதேசங்களையும் அவர் தாக்கத் தொடங்கினார் .

1794 ஆம் ஆண்டில், மராட்டிய தளபதி பரசுராம் பாவ், வாக்கின் எழுச்சியைத் தடுக்க தோண்டோபந்த் கோகலே (தோண்டு பந்த் என்றும் அழைக்கப்படுகிறார்) தலைமையில் ஒரு படையை அனுப்பினார். கோகலே அவரை தப்பி ஓடி திப்பு சுல்தானிடம் தஞ்சம் புகும்படி ஜூன் 1794 இல் கட்டாயப்படுத்தினார். ஒரு போர்வீரனாக அவரது திறனை உணர்ந்த திப்பு, அவரது கடந்த கால துரோகத்தை மன்னித்து, இஸ்லாத்திற்கு மாறுமாறு கேட்டுக் கொண்டார் . வாக் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார், மேலும் அவருக்கு "ஷேக் அகமது" என்ற புதிய பெயர் வழங்கப்பட்டது, இருப்பினும் அவர் தன்னை "மாலிக் ஜஹான் கான்" என்று அழைக்க விரும்பினார். மைசூர் இராணுவத்தில் அவருக்கு இராணுவத் தளபதி பதவி வழங்கப்பட்டது. இருப்பினும், சிறிது நேரம் கழித்து, அவர் திப்புவின் ஆதரவை இழந்து சிறையில் அடைக்கப்பட்டார். ஒரு கட்டத்தில், திப்பு வாக்கை விடுவிக்கக் கருதினார், ஆனால் அவரது அமைச்சர் மிர் சாதிக் அவரை அவ்வாறு செய்வதைத் தடுத்தார்.



நான்காவது ஆங்கிலோ-மைசூர் போருக்குப் பிறகு 1799 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி திப்பு சுல்தானை தோற்கடித்த பிறகு , தோண்டியா வாக் மற்றும் பிற கைதிகள் பிரிட்டிஷ் துருப்புக்களால் விடுவிக்கப்பட்டனர். வாக் ஷிகாரிபூரை அடைந்தார் , அங்கு அவர் திப்புவின் முன்னாள் படையிலிருந்து ஒரு படைவீரர்களை திரட்டினார். பாலத்தின் கிருஷ்ணப்ப நாயக்கரின் ஆதரவைப் பெற்றார், மேலும் தன்னை உபய-லோகதீஷ்வர (இரு உலகங்களின் ராஜா) என்று அறிவித்தார். அவர் பிட்னூரின் நாயக்கர் என்ற பட்டத்தையும் ( கெலாடியின் நாயக்கர்களின் பாணியில் ) ஏற்றுக்கொண்டார். மைசூர் மீது ஆங்கிலேயர்கள் தங்கள் பிடியை வலுப்படுத்துவதில் மும்முரமாக இருந்தபோது, வாக் ஷிமோகா மற்றும் அதைச் சுற்றியுள்ள வணிகர்கள் மற்றும் விவசாயிகளிடமிருந்து வரி வசூலிக்கத் தொடங்கினார் . ஹங்கல் , ஹர்பனஹள்ளி , ராணேபென்னூர் , சவனூர் , சோதே மற்றும் விட்டல் ஆகிய இடங்களின் பாளையக்காரர் நிலப்பிரபுக்கள் அவரது மேலாதிக்கத்தை ஒப்புக்கொண்டனர். அவரது அதிகாரத்தின் உச்சத்தில், அவர் 90,000 குதிரைப்படை மற்றும் 80,000 காலாட்படை கொண்ட படையை சேகரித்ததாக நம்பப்படுகிறது. ஜூலை 1799 வாக்கில், அவர் ஆங்கிலேயர்களுக்கு ஒரு தொந்தரவாக மாறிவிட்டார், அவருக்கு எதிராக ஒரு படையை அனுப்பினார்.

ஜூலை 4, 1800 அன்று, ஜெனரல் வெல்லஸ்லி, பட்வர்தனுக்கு ஒரு கடிதம் அனுப்பி, போரில் அவரது துணிச்சலைப் பாராட்டினார், மேலும் வாக்கிற்கு எதிரான பிரிட்டிஷ் நடவடிக்கைகளில் சேர அவரை அழைத்தார். பிரிட்டிஷ் படைகள் வாக்கைத் தொடர்ந்து பின்தொடர்ந்தன, ஜூலை 12 அன்று சவனூரை கைப்பற்றின . மோசமான வானிலையால் வெல்லஸ்லியின் முன்னேற்றம் மெதுவாக இருந்தது. இதற்கிடையில், வாக் கித்தூரை நோக்கி முன்னேறினார் , பின்னர் வெல்லஸ்லியின் இராணுவத்தைப் பற்றி கேள்விப்பட்டு குந்தோலுக்கு பின்வாங்கினார் . அவர் 600 வீரர்களை குந்தோலில் விட்டுவிட்டு, ஜூலை 17 அன்று கனவி வழியாக அன்னிகேரியை அடைந்தார். ஜூலை 25 அன்று, வெல்லஸ்லி பட்வர்தனைச் சந்தித்து, வாக்கை எதிர்த்துப் போராடத் திட்டமிட்டார். அடுத்த நாள், பிரிட்டிஷ்-மராட்டிய கூட்டுப் படை டம்பல் கோட்டையைக் கைப்பற்றியது, இது வாக்கின் ஆயிரம் வீரர்களால் பாதுகாக்கப்பட்டது. வாக் தொடர்ந்து எதிரிப் படைகளைத் தவிர்த்து, சவுண்டட்டி , அன்னிகேரி, முனவல்லி, கிட்டூர், கானாபூர் மற்றும் பாதாமி ஆகியவற்றைக் கடந்து சென்றார் . ஜூலை மாத இறுதிக்குள், வெல்லஸ்லியின் படைகள் வாக்கின் முன்னாள் பிரதேசங்கள் அனைத்தையும் கைப்பற்றின. வாக்கின் பல ஆட்கள் அவரை விட்டு வெளியேறிய பிறகு, அவர் நிஜாமின் பிரதேசத்தை நோக்கி தப்பி ஓடினார். ஜூலை 30 அன்று, மனோவில் மலபிரபா நதியைக் கடக்கும்போது, வாக்கின் படைகள் மீது ஆங்கிலேயர்கள் திடீர் தாக்குதலைத் தொடங்க முடிந்தது . வாக் தப்பிக்க முடிந்தது, ஆனால் வெல்லஸ்லியின் படை மராட்டியர்கள் மற்றும் நிஜாம் ஆதரவுடன் மூன்று தனித்தனி நெடுவரிசைகளில் அவரைப் பின்தொடர்ந்தது. ஆகஸ்ட் 1800 இல் இரு தரப்பினருக்கும் இடையே பல மோதல்கள் நடந்தன.

ஆகஸ்ட் 25 ஆம் தேதி, வாக் மலபிரபா நதியைக் கடக்க முடிந்தது. செப்டம்பர் 9 ஆம் தேதி, கர்னல் ஸ்டீவன்சன் தலைமையிலான ஒரு படை வாகைத் தடுத்து நிறுத்துவதில் வெற்றி பெற்றது. மறுநாள் காலை, கொனகல் அல்லது கோனகல்லி (இன்றைய ராய்ச்சூர் மாவட்டத்தில் ) அருகே ஜெனரல் வெல்லஸ்லியின் 19வது லைட் டிராகன்களுடன் நடந்த போரில் வாக் கொல்லப்பட்டார். மராட்டிய நாளேடுகளின்படி, வெல்லஸ்லி தனது இரத்தக்கறை படிந்த மீசையை இங்கிலாந்துக்கு ஒரு கோப்பையாக எடுத்துச் சென்றார். வெல்லஸ்லி வாக்கின் 4 வயது மகன் சலபத் கானுக்குப் பாதுகாப்பு அளித்தார், மேலும் அவர் ஐரோப்பாவுக்குச் செல்வதற்கு முன்பு அவரது பராமரிப்புக்காக பணம் செலுத்தினார். அவர் வளர்ந்ததும், சலபத் கான் மைசூர் மன்னரால் பணியமர்த்தப்பட்டார். 1822 இல் காலராவால் இறந்தார்.

# வெள்ளிச்சூடரே.. விஷ்ணு விஷாலின் 'இரண்டு வானம்' முதல் பாடல்!



கடந்த 2018-ம் ஆண்டு விஷ்ணு விஷால், அமலா பால், காளி வெங்கட், அம்மு அபிராமி முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்து ராம் குமார் இயக்கத்தில் வெளியானது 'ராட்சசன்' திரைப்படம். இப்படம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்று மாபெரும் வெற்றி திரைப்படமாக அமைந்தது.

இதனை தொடர்ந்து இயக்குனர் ராம் குமார் உடன் 'இரண்டு வானம்' படம் மூலம் நடிகர் விஷ்ணு விஷால் மீண்டும் இணைந்துள்ளார். கதாநாயகியாக மமிதா பைஜூ நடித்துள்ளார்.


இப்படத்தை சத்யஜோதி நிறுவனம் தயாரித்துள்ளது. இப்படம் ஒரு ஃபேண்டசி ரொமான்டிக் திரைப்படமாக இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. திபு நினன் தாமஸ் இசையமைத்துள்ளார். 150 நாட்களுக்கு மேல் படப்பிடிப்பு பணிகள் நடைபெற்றது.

இந்த நிலையில், 'இரண்டு வானம்' படத்தின் முதல் பாடலான 'வெள்ளிச்சூடரே' வெளியாகியுள்ளது. பாடலாசிரியர் மதராஜே வரிகளில் கபில் கபிலன் இப்பாடலை பாடியுள்ளார்.



சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர்களில் ஒருவர் பூஜா வெங்கட். இவர் பாடிய பாடல்கள் மக்கள் மத்தியில் கவனத்தை பெற்றதோடு, DJ பிளாக் இவருக்காக போடும் பாடல்களும், கவுண்டர்களும் மிகவும் பிரபலமானவை என்பது குறிப்பிடத்தக்கது. சூப்பர் சிங்கர் நிகழ்ச்சிக்கு பின் இசையமைப்பாளர்களின் கச்சேரிகளில் பூஜா தொடர்ந்து பாடல்கள் பாடி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறார். இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆக்டிவாக இருக்கும் பாடகி பூஜா, அவ்வப்போது தனது போட்டோஷூட் புகைப்படங்களை அதில் பதிவு செய்வார். அந்த வகையில் தற்போது கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் பதிவிட்டுள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது வைரலாகி வருகின்றன.

# மதுரையில் இன்று பிரம்மாண்டமாக நடக்கிறது சூர்யாவின் 'கருப்பு' பட இசை வெளியீட்டு விழா!




ஆர்.ஜே.பாலாஜி இயக்கத்தில் சூர்யா நடிப்பில் உருவாகி வரும் படம் கருப்பு. இப்படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக த்ரிஷா நடித்துள்ளார். மேலும் ஸ்வாசிகா, ஷிவதா, இந்திரன்ஸ், யோகிபாபு எனப் பலர் நடித்துள்ளனர். படத்திற்கு சாய் அப்யங்கர் இசையமைத்துள்ளார்.

இந்தப் படத்தின் டீசர் சூர்யா பிறந்தநாளான கடந்த ஆண்டு ஜூலை 23ஆம் தேதி வெளியானது. அதனைத்தொடர்ந்து படத்தின் முதல் பாடல் அக்டோபரில் வெளியானது. இதனையடுத்து கடந்த மாதம் நாங்க நாலு பேரு என்ற இரண்டாவது சிங்கிள் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

ஏற்கனவே இரண்டு பாடல்கள் வெளியான நிலையில், இப்படத்தின் மூன்றாவது பாடலான 'ராத்து ராசன்'-ஐ புத்தாண்டை முன்னிட்டு படக்குழு வெளியிட்டது. இப்படம் மே.14-ம் தேதி வெளியாக உள்ளது.

இந்நிலையில்,'கருப்பு' படத்தின் இசை வெளியீட்டு விழா மதுரையில் இன்று நடைபெறுகிறது. இதை முன்னிட்டு புதிய போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது.

# கமாண்டோவின் லவ் ஸ்டோரி- திரை விமர்சனம்



கமாண்டோவின் லவ் ஸ்டோரி- விமர்சனம்(2.5 / 5)

கல்லூரியில் படிக்கும் ஆகாஷ் முத்து, குறும்படம் எடுப்பதற்காக ராணுவ அதிகாரியான பப்லு பிருத்விராஜை சந்திக்கிறார். அப்போது ராணுவ வீரர் வீர அன்பரசு என்பவர் நாட்டுக்காக உயிரை தியாகம் செய்தார் என்று சொல்லுகிறார். வீர மரணம் அடைந்த வீர அன்பரசு, தன்னுடைய தந்தை என்று ஆகாஷ் முத்துக்கு தெரிய வருகிறது. உடனே தாத்தா, பாட்டியை சந்தித்து, தன் தந்தை வீர அன்பரசு பற்றிய வாழ்க்கை வரலாறை தெரிந்து கொள்கிறார். மேலும் அவர்கள் ஆகாஷ் முத்து பிறப்பு மற்றும் தாய் பற்றி சொல்லுகிறார்கள்.

இறுதியில் ஆகாஷ் முத்து தன் தந்தை வீர அன்பரசு வாழ்க்கை பற்றி தெரிந்து கொண்டாரா? வீர அன்பரசு எப்படி மரணம் அடைந்தார்? ஆகாஷ் முத்து குறும்படம் எடுத்தாரா? என்பதே படத்தின் மீதிக்கதை.

நடிகர்கள்

படத்தில் கதையின் நாயகனாக நடித்து இருக்கும் வீர அன்பரசு, ராணுவ வீரருக்கான கம்பீர தோற்றத்துடன் வலம் வருகிறார். கொஞ்சம் நடிப்பில் கவனம் செலுத்தி இருந்தால் நன்றாக இருந்திருக்கும். நாயகியாக நடித்திருக்கும் ஏஞ்சல் அழகாக வந்து அளவான நடிப்பை கொடுத்து இருக்கிறார். மகனாக வரும் ஆகாஷ் முத்து எதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். பப்லு பிருத்விராஜ், ரோபோ சங்கர், சூப்பர்குட் சுப்ரமணி உள்ளிட்ட பலர் கொடுத்த வேலையை செய்து இருக்கிறார்கள்.



முன்னாள் கிரிக்கெட் வீரரும், வர்ணனையாளருமான அனிருதா ஸ்ரீகாந்துக்கும், பிரபல நடிகை சம்யுக்தாவுக்கும் கடந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின் இவர்கள் இருவரும் இணைந்து குக் வித் கோமாளி சீசன் 7ல் போட்டியாளர்களாக கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்ச்சியின் மூலம் அனிருதா – சம்யுக்தா ஜோடிக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இந்நிலையில், அனிருதா மற்றும் சம்யுக்தா இருவரும் எடுத்துக்கொண்ட கலக்கல் போட்டோஸ் தற்போது வைரலாகி வருகிறது.

# "29" படத்தை தமிழகமெங்கும் வெளியிடுகிறது White Carpet Films நிறுவனம்

ரத்னகுமார் இயக்கத்தில் உருவாகி உள்ள படம் '29'. படத்தில் கதாநாயகனாக 'ரெட்ரோ' படத்தில் வில்லனாக நடித்த விது நடித்துள்ளார். கதாநாயகியாக பிரீத்தி அஸ்ராணி மற்றும் மாஸ்டர் மகேந்திரன், அவினாஷ் பிரேம்குமார் உள்பட பலர் நடித்து உள்ளனர்.

கார்த்திக் சுப்புராஜ் மற்றும் லோகேஷ் கனகராஜ் தயாரித்துள்ள இந்த படத்தை ஒயிட் கார்பெட் பிலிம்ஸ் கே.விஜயபாண்டி வருகிற மே 8-ந்தேதி வெளியிடுகிறார். ஒயிட் கார்பெட் பிலிம்ஸ் நிறுவனம் இதற்கு முன்பு தேஜாவு மற்றும் வித்தைக்காரன் போன்ற படங்களை தயாரித்து உள்ளது. அஜித் நடித்த துணிவு படத்தை கர்நாடகாவிலும், 'ஆர்யு ஓகே பேபி' படத்தை தமிழகத்திலும் விநியோகம் செய்துள்ளது.




இதற்கிடையே '29' படத்தின் டிஜிட்டல் உரிமத்தை பிரபல நிறுவனம் கைப்பற்றியுள்ளதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது. அதன்படி, '29' படத்தின் டிஜிட்டல் உரிமத்தை நெட்பிளிக்ஸ் நிறுவனம் பெற்றுள்ளது.

இந்நிலையில், குறுகிய காலத்திலேயே தனித்துவமான படைப்புகளால் கவனம் ஈர்த்துள்ள இந்த நிறுவனம், தற்போது தனது அடுத்த முக்கிய வெளியீடாக "29" திரைப்படத்தை ரசிகர்களுக்கு கொண்டு வரத் தயாராகியுள்ளது.

இத்திரைப்படம் வரும் மே 8 2026 ஆம் தேதி தமிழகமெங்கும் வெளியிடப்படவுள்ளது. இந்த வெளியீட்டை இந்நிறுவனம் சார்பில் K விஜய பாண்டி முன்னின்று மேற்கொள்கிறார்.

=WANTED=
ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US 7550093245 / 7358696451

WANTED
OFFICE BOY
GUINDY
CALL US 7550093245 / 7358696451

WANTED
• LAB HELPER
• OFFICE BOY
• GARDENER
CHEMBARAMBAKKAM
CALL US 7550093245 / 7358696451

ADVERTISE WITH US
CONTACT US 9438610756

WANTED: FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home (Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp: 7789941009, 9337501889

Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

டீலர்கள் தேவை
மைலேஜ் பூஸ்டர்
20% ~ 30%
மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை
சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041

Annai Violet Arts & Science College
Seek Strive Succeed
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
Key Features: Modern Infrastructure | Extensive Library; Expert Faculty | Result-Oriented Curriculum; Well-Equipped Labs | Competitive Exam Preparation; Sports & Skill Development | English Training; Prime Location | Strong Security; Seminar Hall | Personalized Student Support; Inter-College Competitions | Scholarships; Counseling & Mentoring | Industrial Visits; Interactive Learning | Strong Placement Support; Community Radio Station
Free Transportation for Girl Students from Pattaravakkam Railway Station & Kallikuppam to College
Regional centre for ICMAI (Institute of Cost Accountants of India) Foundation / Intermediate
Media & Broadcasting Courses Available. RJ / VJ Training given to Students
BANK LOAN AVAILABLE
UG & PG COURSES
SHIFT I: B.C.A, B.B.A, B.Sc COMPUTER SCIENCE, B.Sc BIOCHEMISTRY, B.Sc MICROBIOLOGY, B.A TAMIL, B.A ENGLISH, B.A ECONOMICS, B.COM (GENERAL), B.COM (ACCOUNTING & FINANCE), B.COM (CORP. SECRETARYSHIP), M.A ENGLISH, M.COM, M.Sc BIOCHEMISTRY
SHIFT II: B.Com (GENERAL), B.Com (ISM), B.Sc PHYSICS, B.Sc CHEMISTRY, B.Sc COMPUTER SCIENCE, B.Sc VISUAL COMMUNICATION, M.Sc COMPUTER SCIENCE, M.Sc MICROBIOLOGY
CERTIFICATE COURSE: DIP. IN MEDICAL LAB TECHNOLOGY (DMLT), CERTIFICATE COURSE IN MEDICAL CODING, PHOTOSHOP, COREL DRAW, TALLY PRIME
UNIVERSITY OF MADRAS - INSTITUTE OF DISTANCE EDUCATION LEARNING SUPPORT CENTRE
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388
No.53, Violet College Road, Menambedu, Ambattur, Chennai - 53.
info@violetcollege.in www.violetcollege.in

keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship: Clinical Training; Counseling Practice; Case Work
Jobs: Social Worker; Jr Psychologist; Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு
1 to 2 ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773

துபாயை தலைமையிடமாகக் கொண்டு தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட் (Would Be Global Pvt Ltd) ஆன்-லைன் வர்த்தக E-Commerce
நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555

WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY - 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp 94386 10756

WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW

SEVEN STARS LOGISTICS PVT.LTD.
We Build Perfection
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash; Teflon Coating; Ceramic Wax Treatment; Under Chassis Painting; Interior Foam Wash / Stain Remover; Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com

அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872



## பூந்தோட்டம்..

டிசம்பர் பூ கிடைத்ததோ
சனவரியில்.. சூடிக்கொண்டு
என் தலையில் பார் டிசம்பர் பூ
என்றேன் பேத்தியிடம்
கேட்டாலே ஒரு கேள்வி தப்பு
சனவரி பூ என்று தானே
சொல்ல வேண்டும் என்றாள்..
முதன் முதலில் பதில் கூறத்
தெரியாமல் திருதிருவென
முழித்தேன்..

**திருமதி மல்லிகா கோபால்**
புதுச்சேரி



வெகு நாளாய் உன்னிடம்
பேசாத சொற்கள் யாவும்...
உறைந்து கிடக்கின்றன...
மௌனங்களாய்...

அலைபேசியின் எதிர்
முனையில் நீயெனில்...
பொங்கிப் பிரவாகமாக
உயிர்த்தெழக்கூடும்...
அவை...



உனது
பார்வையில்
தான்...
உயிர்த்தெழு
கின்றன...
எனது
கவிதைகள்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## இசை வாத்தியங்கள் !

இரண்டு பக்கமும் அடிகளை
வாங்கிக் கொண்டு
சுப தாளம் தரும் தவில் !
விரல்கள் ஒட்டைகளில்
நர்த்தனமாட வாயால்
ஊதும்பொழுது
மங்கல ஒலி தரும்
நாதஸ்வரம்!

கை விரல்கள் தந்திக்
கம்பிகளில் ஸ்ருதியுடன்
மீட்ட வெளிப்படும்
காதிற்கு இனிய இசை !
இன்னும் புல்லாங்குழல்,
மோர்ஸிங், ஷெனாய்,
மவுத் ஆர்கன், தபேலா,
எல்லாம் ஒரு சேர இருக்கும்
கீ போர்டு ! இசைக்கு
மெருகூட்டும் எத்தனை வித
வாத்தியங்கள் !

---

நீ தொலைதூர
நெடு வானைப்போல்
தூரமிருக்கிறாய்..
எத்தனையோ இடைவெளி
நமக்குள்.. ஆனாலும்
இத்தனை அருகாமையில்
உன் நினைவுகள் மட்டும்
இந்தப் பூமி பந்தைப் போல
என்னிடமே சுற்றி சுற்றி
வருவது ஓர் அதிசயமே..

நீ என்னை நினைத்துக்
கொண்டிரு
என்றெல்லாம் உன்னிடம்
சொல்லப் போவதில்லை...
ஏதேனும் பாடல்களோ..
என்னைப் போல் அதே
சாயலில் யாரேனும்
உன்னைக் கடந்து செல்லும்
போதோ.. என்றாவது என்
நினைவுகள் வந்து
உன்னிடம் பேசியதா என்று
தான் கேட்கிறேன்....

உன் சிறு மௌன ஊடல்
ஒரு நெடு கால நீளும்
தண்டனையைப் போல..
சிறைவாசம் கொள்கிறது
நம் நேசப் பொழுதுகள்...

நீ என்னுடன் இரு.
அது மட்டும் போதும்...
உன் இருத்தலில் மட்டுமே
என் வாழ்வின்
பொருத்திக் கொள்கிறேன்..

நான் தூரமாகப் போனாலும்.
எங்கோ தொலைந்தே
போனாலும். என்னைத்
தேடாமல் அப்படியே விட்டு
விடாதே... உன் பிரிவின்
துயரில் தொலைந்த உன்னை
அங்கு தான்
தேடிக் கொண்டிருப்பேன்..

ஆயிரம் வார்த்தைகளைக்
கொட்டி உன்னிடம்
அர்த்தமில்லாமல்
சண்டையிடுகிறேன்...
நீ ம் மென்ற ஒற்றை
வார்த்தையில் என்னை
உன் கட்டுக்குள் கொண்டு
வருகிறாய்..

நமக்குள் ஆயிரம்
சண்டைகள்
வந்து விட்டு போகட்டும்..
இங்கு யார் சரி தவறுயென
ஆராய விருப்பமில்லை..
சண்டையிடுவது நீயெனில்
உன்னிடம் தோற்பது
நானாகவே இருக்க
விரும்புகிறேன்..

**NISHAA**
malaysia

---



## தன்முனைக் கவிதைகள்

எரித்தாவது புதையுங்கள்
(சாம்பலை) புதைத்தாவது
எரியுங்கள் (சடலத்தை)
நான்தான் காற்றில்
கலந்து விட்டேனே?

இறந்த என்னுடன்
எரித்திடுங்கள் இறவாத
எனது கவிதைகளை
அவையாவது அடையட்டும்
மோட்சத்தை அப்புறம்
பேசுவோம் மிச்சத்தை.

வெறும் கால்கள்
வரைகின்றன வண்ணமற்ற
வானவில்களை. "பையனை
பிடித்துள்ளதா?" என
பெண்களை வினவுகையில்.

பிறக்கையில்
காமிரா வெளிச்சம்
புதைக்கையில் அதே
வெளிச்சம் மனிதா!
உள்ளதென்ன மிச்சம்?
அது கடவுளுக்கே
வெளிச்சம்.

மனைவியின் பிரசவ வலியை
காண்பவன் தொழுவான்
தாயை. முதியோர் இல்லம்
சென்றே திரும்புவான்
அவளுடன் இன்றே.
சமாதியின் மேல் சிலுவை
தனியே ரசிக்கிறது நிலவை
புதைத்துக் சென்றனர் உறவை
கல்லறைத்–திருநாள் வரை
தனிமை

என்னைத் தொலைத்துப்
போதெல்லாம் ஏன்
கண்டுபிடித்தீர்கள்?
அருகாமையில் அடுத்த
தொலைப்பு தொலைவதால்
எனக்கில்லை களைப்பு

களைகட்டிய திருமண
மண்டபம் வாசலில்
வரவேற்போ கோலாகலம்
அழையா விருந்தாளிகளாய்–
வாழைமரமும், நாதஸ்வரமும்.

கொண்டு வந்தது ஏதுமில்லை
கொண்டு போவதும்
ஏதுமில்லை வெகுண்டு
வீம்பாய் வாழ்வதேனோ
பேராசைக் கொண்ட
மானிடனே?



விரைவாக ரத்தாகின்றன
விஐபிகளின்
விவாகங்கள்
மத்தியவர்க்க வாழ்வின்
மகத்துவம் 'ஒருவனுக்கு
ஒருத்தி' தத்துவம்.

**முனைவர்**
**வே. புகழேந்தி**

## தமிழே நீ விளையாட வா ...

என்னை வளர்த்து இதயம்
இணைத்து

சொல்லில் புலர்ந்தது
சுவையை கொடுத்தது

சங்கம் வளர்த்து எங்கும்
நிறைந்தது

அகம் மகிழ்ந்தது
புறம் விளைந்தது

வள்ளுவர் விதைத்தது
இளங்கோ எடுத்தது

கம்பன் புனைந்தது
பாரதி பதித்தது

பக்தி மணத்தது
முக்தி கிடைத்தது

சமணம் புகுந்தது

பௌத்தம் வளர்த்தது
காப்பியம் கடந்தது
காவியம் தொடர்ந்தது

முத்தமிழ் சங்கமித்தது
முழுமையுடன் இனித்தது

செந்தமிழ் சூட்டியது
பைந்தமிழ் மாற்றியது

தொன்மையில் சிறந்தது சீர்
இளமையானது

அமிழ்தம் கிடைத்தது
தமிழாய் மகிழ்ந்து

தமிழே எங்களோடு
விளையாட வா...

தரணி சிறக்கும் நின்
புகழோடு...
தமிழோடு

**முனைவர்**
**அ.சகாதேவன்**
புதுக்கோட்டை

---




## நாளும் நாம் வாழ்வோம்.!

தோழா எழுவாய்...
தோழா எழுவாய்..
தாய் மொழி காக்க
தமிழ் மொழி போற்ற
ஓர் வழி செல்வோம்..
தோழா எழுவாய்..
தோழி எழுவாய்..

ஆதிபகவன் முதலென்று
சொல்லும் வள்ளுவர் வழி
சென்றே.. அவ்வை தந்த
ஓர் வரி ஆத்தி சூடி நாம்
கொண்டே.. நாலடிக்குள்
நல்வழி சொன்ன.. நற்றமிழே
எம் உயிரோட்டம் எனறு..
பாடுவோம்! ஆடுவோம்!
தமிழர்களாய் ஒன்று
கூடுவோம்.! இன்றே..
தோழா எழுவாய்..
தோழா எழுவாய்..

வாச மலர்கள் பூத்துக்
குளுங்கும்.. உலகம் ஒரு
தோட்டம்..! வாழப் பிறந்த
உயிர்கள் யாவும் பூக்கும்
மலர் கூட்டம்! நேசம் என்னும்
தேனின் சுவையை.. தேடும்
வண்டாட்டம்.. நீயும் நானும்
வாழ்ந்து பார்ப்போம்..
நாளும் பூவாட்டம்.!
தோழா எழுவாய்..
தோழா எழுவாய்..

**வே.கல்யாண்குமார்.**



## சுடும் உண்மை.!

இரு எதிர் துருவங்களில்..
காய்ந்து கொண்டே
இருக்கின்றன... சவுரிமுடியின்
சலசலப்பில் காக்கைகளுக்கும்
வாய்க்காத.. எஞ்சிய சோற்று
வடகமும்... பருக்கைகளையே
காணாத பரிதவிப்பில்
பஞ்சடைந்த கண்களோடு..
பசி மயக்கத்தில்..
முடங்கிக்கிடக்கும் ஏழையின்
காந்தல் வயிறும்.!*

**க. குமாரகுரு,**மயிலாடுதுறை



## அதிகாரப் பகிர்வு தேவை

அம்மிக்கல்லு மாறி
மிக்ஸியானது
ஏற்றுக்கொண்டோம்,

ஆட்டுக்கல்லு மாறி
கிரைண்டரானது
ஏற்றுக்கொண்டோம்,

துவைக்கும் கல்லு மாறி
வாசிங் மெசினானது
ஏற்றுக்கொண்டோம்,

தொலைபேசி மாறி
அலைபேசியானது
ஏற்றுக்கொண்டோம்,

கோலி சோடாக்கூட
பெப்ஸி, கோலாவானது
ஏற்றுக்கொண்டோம்,

பாவாடை தாவணியும் கூட
சுடிதாரும், மிடியுமானது
அணிந்துக்கொண்டோம்,

வாகனங்களில் கூட
மாட்டு வண்டியிலிருந்து
சைக்கிள், பைக்கு,
காருயென மாறிவிட்டோம்,

தினசரி செய்திகளுக்குக்கூட
காகிதத்திலிருந்து
ஈ.பேப்பருக்கு மாறிவிட்டோம்,

வாக்குச்
செலுத்துவதைக்கூட
பேப்பர் முறையிலிருந்து
பட்டனை அழுத்தப்
பழகிக்கொண்டோம்,

அதிகாரத்தை மட்டும்
ஒருவருக்கே ஏன்
கொடுக்க வேண்டும்

அதிகாரத்தை




பகிர்ந்தளிப்போம்
மக்களாட்சி
மாண்பைக்
காப்போம்.


**நாகை ஆசைத்தம்பி**
கோவை

---

# நூல் விமர்சனம்

நூல் மதிப்புரை. நூல்: "இளமை தொலைந்த போது."
ஆசிரியர்: "சோழா புகழேந்தி."
தொடர்பு எண்: 7094914328.
வகைமை :புதுக்கவிதை.
வெளியீடு : விழிகள் பதிப்பகம்.
விலை: 260 பக்கம்: 160.


நூல் விவரக் குறிப்புகள்
நூல்: இளமை தொலைந்தபோது...
நூலாசிரியர்: சோழா புகழேந்தி பேசி: 7094914328
வகைமை: புதுக் கவிதைகள்
பக்கங்கள்: 160
பதிப்பாண்டு: முதற்பதிப்பு 2025
மெய்ப்புத் திருத்தம்: விழிகள் தி. நடராசன் பேசி: 6381600499
மின்னச்சும் வடிவமைப்பும்: கோ. தனசேகர், செய்யாறு
முகப்பு அட்டை ஓவியமும் உள் ஓவியங்களும்: ஓவியர் மாரி ஆனந்த்
அச்சும் வெளியீடும்: விழிகள் பதிப்பகம் சென்னை-600041
பேசி: 9444265152 / 7397283447 / 044-24570594
விலை: ரூ.260
சோழா புகழேந்தி
விழிகள் பதிப்பக வெள்ளி விழாவை நோக்கி...
வெள்ளி விழா ஆண்டு 2025 14




ஒரு கால் நூற்றாண்டு களுக்கும் மேலாகக், கவிதை உலகில் இயங்கிக் கொண்டிருக் கும் திரு "சோழா புகழேந்தி" அவர்களுக்கு, "இளமை தொலைந்த போது " தான்,அவரால் ஒரு மைல் கல்லை எட்டிப் பிடிக்க முடிந்திருக் கிறது. இன்னும் அவர் கடந்து செல்லவேண்டிய,பலமைல் கற்கள் எதிரே காத்துக் கிடக்கின்றன.

"இளமை தொலைந்த போது" என்னும் இவரது இந்த முதல் கவிதை நூலில்,74 தலைப்பு களில், அவர் எழுதிய கவிதைகள், கோர்க்கப்பட்ட ஒரு கதம்ப மாலையாக இன்று நம் கைகளில் தவழ்ந்து கொண்டிருக் கின்றது.

இலக்கிய உலகிலும் சரி பொதுநிலை யிலும் சரி, முன்னணியில் நிற்கும்,கவிஞர் திரு கோ.வசந்த குமாரன், திரு ஜெ.மோகன், கவிஞர் திரு காதல் மதி, திரு.கா.சண்முகம், மற்றும், சிட்னியிலி ருந்து திரு.ஜி ஆனந்த் ஆகியோர் வாழ்த்துரை களை வழங்கியிருக்கிறார்கள். தி.நடராஜன் அவர்களும், தி . வே ணு கோ பா ல் அவர்களும் வழங்கியுள்ள பதிப்புரையில் "பல்வேறுபாடு பொருள்களில்களில் எழுதிய கவிதைகள், ஏன் இவ்வளவு காலம் கிட்டங்கியில் கிடந்தன என்பதே எம் கேள்வி என்று வினா எழுப்பியிருக்கின்றார்கள். தொலையாத இளமைக் கவிதைகள் இன்னும் பலதொகுதிகள் வரவேண்டும் என்பதே எங்கள் ஆவல் என்று எழுதியிருக்கிறார்கள். எமது ஆவலும் அஃதே! நம் எதிர் பார்ப்பைப் பொறுத்த மட்டில், "என் உரை"யை மிகச் சிக்கனமாக,சுருக்கி இருப்பது, ஏமாற்றமளிப் பதாகவே இருக்கிறது.

கவிதை உலகில் தனக்கென ஒரு தனிவழியை உருவாக்கிக் கொண்ட கவிஞர், திரு,சோழா புகழேந்தி,அவர்கள், அன்றாட வாழ்வில் நாம் காணத் தவறிய நிகழ்வுகளைக்கூட , தன்னுடைய உற்று நோக்கும் பார்வையால், கவிதையாக கொடுத்திருப் பது பாராட்டிற்குரியதே. "இப்படியும் சில ஆட்டோக்கள்", "பேருந்து பேசுகிறது" "பேருந்து நடத்துநர்" போன்ற கவிதைகளை இதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். "போரில்லா உலகம் போவோம் " என்ற முதற் கவிதையே, இந்த நூலில் தலைவாசலில் நின்ற வாறே, சமகாலப் போர் பதற்றத்தைப் பற்றிக் கூறி, நம்மை நிமிர்ந்து எழுச் செய்கிறது. "என்ன நடக்குது அங்கே நெஞ்சு துடிக்குது இங்கே மண்ணில் பிறந்தது பாவமா மழலைகளுக்கேஇதுசாபமா?" என்னும் ஆரம்ப வரிகளில் நம் இதயமே ஆடிப்போய்த் தான் நிற்கிறது...!

"தமிழினம் இன்று" என்னும் தலைப்பிலான கவிதையில், தமிழினம் தறிகெட்டுப் போய், "சொந்த நாட்டிலேயே அகதியாகி சோகமாகிப்போன" கொதிப்பை அறச்சீற்றத் துடன்,எடுத்துக் கூறிச் எச்சரிக்கிறது. கிராமியம் அழிந்து போய், தமிழர்தம் பாரம்பரியத்தை இழந்து, பட்டமரமாய் திற்கும் அவலத்தை, "எல்லாம் இப்போ என்ன ஆச்சு எங்கே கிராமம் | ஓடிப்போச்சு" என்று கேட்கும்போது, பதில் கூற முடியாதவாறு நாமும்கலங்கிப் போய்தான் நிற்கிறோம். காதலை எழுதாதக் கவிஞனுமல்ல. அதே போலக் காதலைப் பாடாதவனும் கவிஞனுமல்ல என்பதற் கிணங்க ஆங்காங்கே ஒருசில காதல் கவிதைகளும் மலர்ந்து மணம்பரப்பிக்கொண்டு தான் இருக்கின்றன.

காதல்என்னும் நதி கல்யாணக் கடலில் தான் சங்கமம் ஆகவேண்டும் என்ற பண்பு சார் ஒழுக் கத்தை வலியுறுத்தும், "கல்யாணக் கனவு"(பக்: 46) என்னும் படைப்பு கவித்துவமான அருமையான தொரு படைப்பு. தென்றலின் கைகளைப் பிடித்துக் கொண்டு முன்றலில் தடைபயிலும் சுகமான அனுபவத்தை நாம் இந்தக் கவிதையில் உணர முடிகிறது. ஒரு முறை படித்துப் பாருங்கள். மறுபடியும் அந்த கவிதை உங்களைப் படிக்கத் தூண்டும் .

வெறும் வாய்ச் சொல் அலங்கார மாயையில் காதலியை வர்ணிப்பதோடு மட்டும் நின்று விடாமல், திருமணத்திற்காக காதலன் ஏங்குவதாக முடித்திருப்பது, தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளை தூக்கிப் பிடிக்கிறது. "கண்ணாளனே" எனும் கவிதையும் கிராமிய மணத்தோடு, திருமணத்திற்காக ஏங்கும் காதலியின் மனத் தாபத்தை வலியுறுத்து கிறது.

"உண்மைக் காதல்" பற்றிப் போற்றும் கவிதைகளும், கலிகாலக் காதலைப் பற்றி தூற்றும் கவிதைகளும் பாராட்டும் படி இருக்கின்றன.

சமூக சீர்கேடுகள், சனநாயகப் படு கொலைகள், தேர்தல் தில்லுமுல்லு கள், போதைப் பொருள்களின் தாராளமயங்கள், என்று எண்ணற்ற தலைப்புகளில், கவிதைக் கணை கள் ஊடுருவிப் பாய்கின்றன. உணர் வுகளோடு பயணிக்கின்றன.

வள்ளுவன் முதற்கொண்டு, சிலுவை சுமந்த இயேசு கிறிஸ்து வள்ளலார் வழியாக, நாடகத் தந்தை சங்கரதாச சுவாமிகள், சிந்தனை சிற்பி சிங்காரவேலர், கர்ம வீரர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, கலைஞர், கவிஞர் வாலி, ஈறாகத், தனது கவிமாலைகளை காலத்தால் அழியாத காவிய மேதைகளுக் குச் சூடிஅழகு பார்த்திருக்கிறார்,சோழா புகழத்தி அவர்கள், இந்தக் கவிதைத் தொகுப்பின் மூலம்,ஒருநாற்பதாண்டுகாலத்தின் 'கைவண்ணப் படைப்புகளை எல்லாம் ஒன்று சேர்த்து, நமக்கொரு இலக்கிய விருந்தாகப் படைத்திருக்கிறார் சோழா புகழேந்தி அவர்கள்.

விழிகள் பதிப்பகத் தாரின் தேர்ந்த கைவண்ணத் தில் இந்தக் கவிதை தொகுப்பு 'ஆட்டோகிராப்' அமைப்பில், வடிவமைக்கப் பட்டுள்ளது மிகச்சிறப்பாக உள்ளது. கவிதை உலகில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்ட சோழா புகழேந்தி அவர்கள், இலக்கிய உலகில் அழுத்தமாகக்காலூன்றி நிற்கிறார் என்று துணிந்து கூறலாம்.

**ஆய்வுரை :**
**குடந்தை பரிபூரணன்.**
**(6384538289)**

---

## "பிறவிப் பயனடைந்த கற்பனைக் கதாபாத்திரம்."

தொடருந்தின் பயணத்தில்
படமாக்கப்பட்ட குறும்படம்.
திருச்சிராப்பள்ளியிலிருந்து
இராமேஸ்வரம் செல்லும்
வழித்தடத்தில் பயணிக்கும்
"பாசஞ்சர் வண்டி" அது..!

ஆச்சாரிய ஒழுக்கம் நிறைந்த
அய்யங்கார் கதாபாத்திரம்
அவனுக்கு. மூன்றாம்
பாலினமாகிய திருநங்கைக்குப்
பிச்சை போடும் காட்சியில்
அவன் கை மேலிருக்கும்;
அவனிடம் பிச்சை கேட்டு
வாங்கும் திருநங்கை
கதாபாத்திரத்தின் கை
கீழிருக்கும்.

இக்காட்சியைக்
குறும்படத்திற்காகக்
கவனமாக எடுத்துக்
கொண்டிருந்த அந்நேரத்தில்
பயணியொருவர் கையிலிருந்த
ஆன்லைன் பண்பலை
வானொலியில் நேயர் விருப்பப்
பாடலாக் "கர்ணன்" படத்தில்
இடம்பெற்ற "கண்ணுக்குக்
குளமேது" எனும் பாடலில்
வரும் "கொடுப்பவன்
எல்லாம் மேலாவான்;
கையில் கொள்பவரெல்லாம்
கீழாவார்; தருபவன் அல்லவோ
கர்ணா நீ; தர்மத்தின்
தாயே கலங்காதே."
எனும் கவியரசரின்
காவிய வரிகளைத்
தன் காதில் கேட்டதும்
தன் பிறவிப் பயனை
அடைந்துவிட்டதாக
எண்ணி தன் சட்டைக்


காலரைத் தூக்கி விட்டுக்
கொண்டான் அவன்..!



## "கைநழுவிப் போன கரன்சி நோட்டுக்கள்."


செவ்வாழைப் பந்தலிட்டு
மாவிலைத் தோரணம்
கட்டி 'நல்வரவு' எனும்
மின் விளக்குகளால்
அலங்கரித்து முப்பத்து
முக்கோடி தேவர்களின்
அருளாசிகளைப் பெற தவமாய்
தவமிருந்த தணிகாசலம்
எனும் கோடீசுவரர் ஒருவர்
தேர்தல் திருவிழா நேரத்தில்
"பட்டுப்புடவை நகைநட்டு
பீரோ வெட்கிரைண்டர் குக்கர்
மிக்ஷி" ஆகியவற்றினைப்
பல கடைகளில் உரிய
விலை கொடுத்து வாங்கக்
'கட்டுக் கட்டானக் கரன்சி
நோட்டுக்களுடன்" மகிழுந்தில்
தன் நெருங்கிய சகாக்களுடன்
அவர் பயணித்தார்..!

பிரதான நெடுஞ்சாலையின்
'சோதனைச்சாவடி"யில்
தணிகாசலத்தின் மகிழுந்தை
வழி மறித்த "பறக்கும்
படைப்பிரிவினர்" எவ்விதத்
தயவு தாட்சணியமும் இன்றி
அவர் பணப்பையில்
இருந்த பத்துலட்சம்
ரூபாய் தொகையைத்
திடீரெனப் பறிமுதல்
செய்தது..!



**கவிச்சாரல் கொள்ளிடம்**
**காமராஜ், திருச்சி**



### கைப்பேசி பார்க்கின்ற பெண்ணே.!

குனிஞ்ச தலை நிமிராமல்.. நடந்திடும் பெண்ணே.!
உன் கையிலே.. எப்போதும் இருப்பது என்னே?

புத்தகம் தானென்று நினைத்தேனே பெண்ணே..!
போகின்றாயே நீ.. கைப்பேசிப் பின்னே!

தலைவாரி.. பூச்சூடி.. பூ வைக்க வில்லை..உன் தளிர் விரல்கள்
தீண்டுவது ஏன் அந்த செல்லை.?

வாசலைக் கூட்டியே.. கோலமிடுப் பெண்ணே.!
பேசியை கொஞ்சம் நீ கீழே வை பெண்ணே.!

ஆசையுடன் பெற்றவர்கள் அங்கே பார் பெண்ணே.!
காசை கரியாக்காமல் படிக்க வா.. பெண்ணே.!

குழுமத்தில் வாழ்த்துக்கள் போடுகிற பெண்ணே.!
உன் குடும்பத்தை கொஞ்சம் நீ நினைத்தாயா பெண்ணே!

அடுப்பிலே.. பால் தீய. பார்க்காமல் பெண்ணே.!
படிக்கிற வயதிலே கைப்பேசி என்னே.?

தினம் ஒரு திருக்குறள் படித்தாயா பெண்ணே.!
தெருவிலே நடக்கையிலும் கைப் பேசி என்னே.?

அகம் புறம் எங்கும் உன் திறன் கண்டோம் பெண்ணே..
இன்று முகநூலில் முகவரியை தேடுகிறோம் கண்ணே.!

வீணையுடன் புத்தகம் ஜெபமாலை பெண்ணே..
ஏந்தி நீ வரவேணும்.. கலைமகளாய் பெண்ணே.!

கணினியும் கைப்பேசி யாவுமே பெண்ணே.. நீ கற்றுணர வழி
காட்ட மாறனுமே பெண்ணே.!

ஆணுக்கும் பெண்ணுக்கும் இது பொருந்தும் பெண்ணே..
ஆகையினால் கவனமாக கையாளு பெண்ணே.!

**வே.கல்யாண்குமார்.**

### உன் கையெழுத்து

அலமாரியில்
அடுக்கிவைத்துள்ள
புத்தகங்களைக்கூட
நான் பத்திரமாகதான்
பாதுக்காக்கிறேன்



அதில் உன் அழகிய
கையெழுத்து
அடங்கியிருக்கிறதே,,,!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை



### விட்டாச்சு லீவு

வாயிலில் நுழைகையில்
வகுப்பறைச் சத்தம் இல்லை

வண்ணத்துப் பூச்சியாய்ச்
சுற்றும் மாணவர்கள் இல்லை

மலர்ந்த பூக்கள்
மழலைகளைத் தேட

காணாத விழிகள்
கவலையில் தோய்ந்தன

காலடித் தடங்களுக்கு
காதுகள் ஏங்க
கேட்காத ஒலிகள்
காற்றில் கலந்தன

குற்றச்சாட்டுகள் இல்லா
நீதிமன்றமாய்
குழந்தைகளின்குரலுக்கு
ஏங்கி நிற்கின்றன
கட்டிடங்கள்

சின்னச் சின்ன சண்டைகளும்
சிங்கார ஊடல்களும்
ரீங்காரமாகிச் சுழல
மலர் தேடும் வண்டாய்
மௌன மொழி பேசும்

சண்டையிடும் சொல்லும்
சமாதானம் பேச
சங்கடமின்றி நட்பு தேடும்


கைகுலுக்க ஆளன்றி
கல்லும் மண்ணும் ஏங்கும்

நிலவும் அமைதியில்
நிம்மதி இல்லை
நித்தியக் குரலுக்கு
எல்லையும் இல்லை



மாணவரில்லா
வகுப்பறை
மகிழ்ச்சியில்லா மன
நிலை.

**தமிழ் நிலா**



### மண் குதிரை

வாழ்வாதாரம் வளம்பெற
வேண்டுமானால் நீராதாரம்
நிலைப்பெற வேண்டும்
இங்கே காவேரியாறு
காய்ந்துக்கிடக்கு
பாலாறு பாழாப்போனது
தென்பண்ணை
தேய்ந்துப்போனது
மண்குதிரையை நம்பி
பயணம் செய்யலாம்
வாழ்க்கையாறுதான்
வற்றிக்கிடக்கிறதே

**நாகைஆசைத்தம்பி**

### எதிர்பார்ப்பு !

அவரவர் நாட்டில் நடக்கும்
தேர்தலை விட உலக
நாடுகளே எதிர்பார்த்துக்
கொண்டிருப்பது...
அடுத்து... அமெரிக்காவில்
எப்போது தேர்தல்
வருமென்று...'
டிரம்பு
மவராசனால
எல்லாருக்கும்
தலைவலியா
இருக்கு... !"



**எம்.பி.தினேஷ்**
கோவை



### காதலிசம்

வள்ளுவர் அழைத்ததும்
நீர் இறைத்துக்
கொண்டிருப்பதை
அப்படியே விட்டு விட்டு வந்த
*வாசுகியின் சிஷ்யையா நீ!
எந்த நேரத்தில் எப்படி
எப்பொழுது அழைத்தாலும்
அந்த நொடியே
எதிரே வந்து நின்று
பவ்யமான பக்தியை
வழங்குகிறாய்!
நீ கிடைத்த பிறகல்லவா
தெரிகிறது இப்பிறவி எனக்கு
என்னமான ஓர் அரிய வரம்
என்று!
உன் விழிகள் சொல்லும்
கவிதைகளை மொழி
பெயர்த்தால் எந்த மொழியுமே
அழகாகி விடுகிறது!
உன்னைக்கா த லி க் கிறேன்
என்று சொன்னால் என்
வாசுகி உனக்கு அது வெறும்
வார்த்தைகள்!
உன்னை என் உயிரில்
வைத்திருக்கிறேன்!
என்று சொன்னால்
அதுவல்லவா கா த ல்!
அச்சம் மடம் நாணம் பயர்ப்பு
அத்தனை(யை)யும்*
வைத்திருந்தாலும்
எப்பொழுதெல்லாம்
அவற்றிற்கு விடுமுறை
அளிக்க வேண்டும்
என்ற பவ்யத்தை நீ
அழகாகக் கற்று
வைத்திருப்பது
எப்பொழுதுமே
எனக்குப்
பிடித்த
காதலிசம்!




**முத்து ஆனந்த்**
வேலூர்

### சைகை மொழியன்றோ சால்பு!

நேரிசை வெண்பா!

உடல்மொழி மூலமாக
உன்னதச் செய்தி
திடமாக ஆகவே
தேர்ந்த..தொடர்மொழி
சைகையாம் என்றேதான்
சாற்றிடுவோம்
எஞ்ஞான்றும்
சைகை மொழியன்றோ
சால்பு!

காதுகேட்கா தோருமே
கண்ணியமாய்ச்
சைகையால்
ஓதுவார் செய்தியை
ஒண்மையாய்..
நாதமுடன்
சைகையாம்
என்றேதான்
சாற்றிடுவோம்
எஞ்ஞான்றும்
சைகை
மொழியன்றோ சால்பு!



**முனைவர் இராம.வேதநாயகம்.**

### துளிப்பாக்கள்

போர்க்களத்தில்
மத ஒற்றுமை
பிணக் குவியல்!

இறந்தும் காதலனின்
மாறாத புன்னகை
காதலியின் வருகை!

அவன் நெற்றி வியர்வை
இனித்தது காதலி
இதழ் பதித்ததால்!

திரைப்படத்தில் அரை
நிர்வாணம்
நிச்சயிக்கப்பட்டு விட்டதால்
ஆடைகளே தலை
குனிகின்றன!.

யாரிடம்
வழக்குத்
தொடுப்பது
இளம்
பெண்களை
தழுவிச் செல்லும் தென்றல்!



**பூ.சுப்ரமணியன்**
பள்ளிக்கரணை

ஜ்வாலையின்
கைப் பிடித்துத் தான்
என் பயணம்..
போகும் வழியெல்லாம்
சுட்டெரித்துச் செல்கிறது..
நம்பிக்கை விளக்கும்
ஏற்றிக் கொண்டு..
உச்சியில் ஏற்றி வைத்துத்
திரும்பும் வரை
அணையாதிருக்கட்டும்
அந்த தீபங்கள் !

எரியாமல் உறைகிற
அடிமெழுகின் சிணுங்கலாய்
உன்னைக் காணாத நான்.

போர்வைக்குள்தான்
சுருட்டி வைத்தேன்
அந்த நெருப்பை..
வெகு நேரம் கழித்து
திரும்பி வந்து
பார்த்தபோதும்
சமர்த்தாய்
உறங்கிக்
கொண்டிருந்தது
ஓடாமல் !



**ரிஷபன்**

### பாலை

வறண்ட நிலத்தில்
வரைந்த கோடுகளில்
முதிர்ந்த முகச்
சுருக்கமாகத் தேய்ந்த
முதுமையின் சாயல்

ஆதவனின் கதிர்கள்
அந்திவானில் மறைய...
தாகம் தணியத்
தண்ணீரைத் தேடிய
குழாய்க்குள் காற்றே ...

தாங்க முடியாத
தாகத்தில் தண்ணீருக்காகத்
தவமாகக் காத்திருக்கும்
வறண்ட பாலையாகிய
நான்...

என்றோ ஒருநாள்
வான்மகளின் வருகையால்...
வசந்தமில்லாப்
பாலை
வண்ணமலர்
பூக்கும்
சோலையாவது
உறுதி



**நா.பத்மாவதி**
கொரட்டூர்



### தெளிவு பெற்றான்


முதியவர்தாம் உடல்தளர்ந்து கைநடுங்கும்
முதுமையிலும் சாலையோரம் மரத்தின் கன்றைப்
பதியவைக்கக் குழியொன்றைத் தோண்டும்போது
பார்த்தபடி வந்தவொரு இளைஞன் கேட்டான்
முதியவரே நடுகின்ற செடிவளர்ந்து
முழுமரமாய்க் கனிகொடுக்கும் காலந்தன்னில்
விதிமுடிய அனுபவிக்க இருக்க மாட்டீர்
வீணாய்ஏன் உடல்வருத்தி உழைக்கின்றீர்கள் !

பழங்களுடன் எதிர்நிற்கும் மரத்தைக்காட்டிப்
பாரதனைச் சிறுவனாய்நானிருந்தபோது
கிழவனாக இருந்தவர்தாம் நட்டு வைத்தார்
கிடைத்திட்ட பலனையவர் சுவைக்கவில்லை
பழங்களினை நான்உண்ட நன்றி காட்ட
பயன்பெறுவர் சந்ததியர் நாளை யென்றே
பழமரத்தை நடுகின்றேன் ! சுழற்சியின்றேல்
பாழ்பட்டுப் போகுமிந்த இயற்கையென்றார் !



வாழ்வதற்கு நாமிந்த சமுதாயத்தின்
வளங்களினை நாள்தோறும் சுரண்டுகின்றோம்
வாழ்வளிக்கும் சமூகத்தை வாழ வைக்க
வாய்த்திட்ட வாய்ப்பாக இந்த வாழ்வில்
வீழ்மரத்தைத் தாங்குகின்ற விழுதைப்போல
விளைகின்ற நன்மைகளைச் செய்யும்போதே
வாழ்வளிக்கும் சமுதாயம் உயருமென்றார்
வளரிளைஞன் தெளிவுபெற்றே துணையாய் நின்றான் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



### மனோன்மணீயம் பெ.சுந்தரம் பிள்ளை!


நேரிசை வெண்பா!

நாடக நூலையே
நன்கு படைத்தாரே!
ஆடகப் பொன்னாய்
அருந்தமிழில்..பாடுபட்டார்
சுந்தரம் பிள்ளையே
சோர்வின்றிப் பல்லாற்றும்
விந்தை தமிழ்வாழ்த்தே வீறு!

அறிவியல் கட்டுரை
ஆய்ந்தே கொணர்ந்தார்
செறிவாக கல்வெட்டில்
சீராய்..முறையாக
ஆய்ந்தளித்தார் அன்பாக
அன்பு பெ சுந்தரம்
ஓய்விலா நற்றமிழர் ஓர்!

**முனைவர் இராம.வேதநாயகம்.**

## இனி தக்காளி பிரியாணி செய்ய நினைத்தால் இனி இப்படி செய்து பாருங்க! இதன் ருசியே தனி தான்!



பிரியாணி என்றதுமே எல்லோருக்கும் முதலில் ஞாபகத்திற்கு வருவது அசைவ பிரியாணி. அது என்னவோ எத்தனை வகை சைவ பிரியாணிகள் இருந்தாலும், இந்த அசைவ பிரியாணி எனும் போது அதன் ருசியும் மணமும் தனி தான். சைவத்தில் அந்த பிரியாணியை செய்தாலும் அந்த ருசி இருக்காது.

இதற்கு அவர்கள் சேர்க்கும் அசைவ உணவு தான் முக்கிய காரணம். தக்காளி செய்து பிரியாணி செய்தல் அசைவம் சாப்பிடாத நாளில் இந்த தக்காளி பிரியாணி அசைவ சுவையை ஓரளவுக்கு திருப்தி அளிக்கும்.

தக்காளி சாதம் செய்வது எல்லோருக்குமே தெரிந்த விஷயம் தான் இதில் என்ன புதிதாக இருக்கிறது என்று யோசிக்கலாம். எந்த ஒரு சமையலுமே ஒவ்வொருவர் செய்வது போதும் சுவை ஒவ்வொரு விதமாக மாறிக் கொண்டே தான் இருக்கும். அந்த வகையில் இந்த சமையல் குறிப்பு பதிவில் தக்காளி சாதத்தை பிரியாணி போலவே எப்படி செய்வது என்பதை தான் தெரிந்து கொள்ளப் போகிறோம்.

**தக்காளி பிரியாணி**

பிரியாணி என்றதுமே எல்லோருக்கும் முதலில் ஞாபகத்திற்கு வருவது அசைவ பிரியாணி. அது என்னவோ எத்தனை வகை சைவ பிரியாணிகள் இருந்தாலும், இந்த அசைவ பிரியாணி எனும் போது அதன் ருசியும் மணமும் தனி தான்.

சைவத்தில் அந்த பிரியாணியைசெய்தாலும் அந்த ருசி இருக்காது. இதற்கு அவர்கள் சேர்க்கும் அசைவ உணவு தான் முக்கிய காரணம். தக்காளி செய்து பிரியாணி செய்தல்அசைவம் சாப்பிடாத நாளில் இந்த தக்காளி பிரியாணி அசைவ சுவையை ஓரளவுக்கு திருப்தி அளிக்கும். இந்த சமையல் குறிப்பு பதிவில் தக்காளி சாதத்தை பிரியாணி போலவே எப்படி செய்வது என்பதை தான் தெரிந்துகொள்ளப் போகிறோம்.

6 பழுத்த தக்காளி நறுக்கியது
1/2 கிலோ பாசுமதி அரிசி
1/4 டேபிள் ஸ்பூன் நெய்
1/4 ஸ்பூன் மஞ்சள் தூள்
1 டீஸ்பூன் மிளகாய் தூள்
1/2 டீஸ்பூன் கரம் மசாலா
2 பட்டை
2 கிராம்பு
1 ஏலக்காய்
2 அன்னாசிப்பூ
1 பிரியாணி இலை
3 பச்சை மிளகாய்
2 பெரிய வெங்காயம்
4 டீஸ்பூன் இஞ்சி பூண்டு பேஸ்ட்
கொத்தமல்லி சிறிது
நறுக்கிய புதினா சிறிது
உப்பு தேவைக்கேற்ப

முதலில் அரிசியை நீரில் ஊற வைத்து, 1 முறை மட்டும் நீரில் கழுவி தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பின்னர் ஒரு குக்கரை அடுப்பில் வைத்து, அதில் நெய் ஊற்றி காய்ந்ததும், பட்டை, கிராம்பு, ஏலக்காய்,அன்னாசிப்பூ மற்றும் கசக்கிய பிரியாணி இவை ஆகியவற்றை சேர்த்து வதக்க வேண்டும்.

பின் அதில் வெங்காயத்தை சேர்த்து நன்கு பொன்னிறமாக வதக்க வேண்டும். அத்துடன் இஞ்சி பூண்டு பேஸ்ட்,முழு பச்சை மிளகாய் சேர்த்து நன்கு வதக்கவும் அடுத்து அதில் தக்காளியை சேர்த்து வதக்கி,அதோடு சிறிது உப்பு, மஞ்சள் தூள், மிளகாய் தூள், கரம் மசாலா சேர்த்து நன்கு கிளறி விடவேண்டும்.

தக்காளியானது நன்கு மென்மையாக வதங்கியதும், தேவையான அளவு தண்ணீர் ஊற்றி, அதோடு நறுக்கிய கொத்தமல்லிமற்றும் புதினா சேர்த்து நன்கு கொதிக்க விட வேண்டும்.


பின்பு அதில் அரிசியை சேர்த்து, தேவையான அளவு உப்புதூவி, குக்கரை மூடி 2 விசில் விட்டு இறக்கினால்,தக்காளி பிரியாணி ரெடி!!!.

## கோடையில் வரும் நோய்கள்!.. பாதுகாப்பாக இருப்பது எப்படி?...

கோடைக்காலம் என சொல்லப்படும் வெயில் காலம் வந்து விட்டாலே பல நோய்கள் மனிதர்களை தாக்கும்.. எனவே கோடையில் வரும் நோய்களிலிருந்து நம்மை எப்படி பாதுகாக்க வேண்டும் என தெரிந்து கொள்வோம்;

கோடை காலங்களில் உடலில் உஷ்ணம் சேர்ந்து விடும். அதனால் நீர்ச்சத்து குறைந்துவிடும்.. எனவே அதிக தண்ணீர் குடிப்பது, இளநீர் குடிப்பது மோர் சாப்பிடுவது, எலுமிச்சை சாறு, தர்பூசணி, வெள்ளரிக்காய் ஆகியவற்றை சாப்பிடுவது உடல் சூட்டை தணிக்கும்.

வெயில் காலத்தில் குழந்தைகளை அம்மை நோய் தாக்கும்.. எனவே நம் இல்லத்தையும், சுற்றுப்புறத்தையும் சுத்தப்படுத்தி தூய்மையாக



வைத்துக் கொள்ள வேண்டும்.. அதோடு அம்மை நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களிடமிருந்து விலகியிருக்க வேண்டும்

. வெயில் காலத்தில் சிலருக்கு மஞ்சள் காமாலை நோய் வர வாய்ப்புண்டு.. எனவே அதை தவிர்ப்பதற்காக காய்ச்சிய நீரை பருகலாம். அதேபோல் நம் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்..

வெயில் காலத்தில் பலருக்கும் சரும நோய்கள் வரும். எனவே அதை தவிர்ப்பதற்காக மெல்லிய பருத்தி ஆடைகளை அணியலாம்.. அதேபோல் தினமும் இரண்டு முறை குளிர்ந்த நீரில் குளிக்கலாம்.

கோடை காலத்தில் உணவு சீக்கிரம் கெட்டுவிடும் என்பதால் சமைத்தவுடன் சாப்பிடுவது நல்லது

. வெயில் காலங்களில் கண் தொடர்பான நோய்கள் நிறைய வரும்.. எனவே குளிர்ந்த நீரில் கண்களை கழுவ வேண்டும்.. அதேபோல் வெயிலில் செல்ல நேரிடும் போது சன் கிளாஸ் அணியலாம்..

அதேபோல், மதியம் 12 மணி முதல் 3 மணி வரை வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் அந்த நேரத்தில் வெளியே செல்வதை தவிர்க்கலாம்..

GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய்
₹ 1.80
லட்சம்
800 SQFT
1. முன்பணம் ₹ 1,00,000/-
2. 50% பணம் செலுத்தினால் பத்திரப்பதிவு செய்யப்படும்.
3. மாதம் குறைந்தபட்சம் ₹.2500/- முதல் செலுத்தலாம்
4. முழு தொகையும் செலுத்திய பின்பு உரிய நபரிடம் பத்திரம் ஒப்படைக்கப்படும்.
5. பத்திரப்பதிவு
6. பட்டா COPY
FREE FREE!!!
10
கிராம் GOLD COIN சேமியுங்கள்
அரக்கோணம் பாராஞ்சி
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF (Male & Female)
MARKETING EXECUTIVE – ELECTRICAL FIELD (Male & Female)
ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

குன்னத்தோழம்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெளிமக்கு வரளன்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379

ADVERTISE WITH US
7789941009

ULTRA SEC FACILITY FORCE
YOUR SAFETY, OUR COMMITMENT
OUR SERVICES
Security Services (Trained Security Guards, Supervisors, 24x7 Coverage)
Facility Management Services (Housekeeping, Maintenance, Cleaning)
Manpower Supply (Skilled & Unskilled Stafffor Industries, Apartments, Offices
WHY CHOOSE US?
- Experienced & Professional Team
- 24/7 Reliable Support
- Affordable & Transparent Pricing
- Customized Service Plans
ULTRA SEC FACILITY FORCE
Flat No : 13A, Door No: 1, Moovarasampet Main Road, Madipakkam, Chennai-600091.
+91 93632 98980 ultrasecfacility@gmail.com
www.ultrasecfacility.com

WANTED
ஆட்கள் தேவை
சமையல்
வீட்டுவேலை
குழந்தை
நோயாளி
தங்கி
தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு 8148215778 8248610592
A trustworthy help service for Chennai families

உ
முருகன் துணை
A.S.R
ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டகளிலும்
அணுகவும்
7305025591, 9578622711

ATTENTION
ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.

SHRI RAGHAVENDRA SCAN CENTRE
We Are HIRING
PRO
PUBLIC RELATION OFFICER
DIAGNOSTIC ULTRASOUND & COLOUR DOPPLER STUDIES
TIMING : 9AM-8PM
Attractive salary package
@TONDIARPET
+91 8189997221
+91 9094337745
ADDRESS: THAI APARTMENTS 618 T.H.ROAD (NEAR) TONDIARPET METRO STATION CHENNAI-81

Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennal Real Choice Chennal Real Choice Chennal

THANIGAI
WANTED ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
☑ Flexible work ☑ No Age Limit / No Investment
☑ No Experience/No Qualification ☑ No Risk / No Target
Simple work - just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy 90879 55111

திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
- Location: (Nr Mylapore Jn)
- Direction: N/ Face
- Total Area: 2400 sft
- Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com


எலாவூர் மிக அருகில்
சுண்ணாம்பு குளம்
Sqft ₹120/_
(மினிமம் 10000sqft)
Ph.9600660997


























# ATTENTION

## ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு

10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.



























திருமுடிவாக்கம்
அருகாமையில் அமைந்துள்ள
சாரதா கம்பெனிக்கு

## ஆட்கள் தேவை

**ஆண்கள் மட்டும்**

வயது: 18 முதல் 35 வரை

**கல்வி தகுதி**
**10 முதல் any Degree**

தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற
அனைத்து வசதிகளும் உண்டு

சம்பளம் :
**18,000 முதல் 22,000 /-**
தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com








# பல்சுவை களஞ்சியம்




## நல்ல காலம்

"நல்ல காலம் பிறக்குது, ஜக்கம்மா சொல்றா.. இந்த வீட்டுக்காரங்களுக்கு கிழக்க இருந்து நல்ல சேதி வரப்போகுது" என குடுகுடுப்பையை ஒலித்துக்கொண்டு குறி சொல்வதெல்லாம் உண்மையா?

குடுகுடுப்பைக்காரர்கள் சொல்வது பலிக்குமா? அதை சுருக்கமாக பார்ப்போம். குடுகுடுப்பைக்காரர்களின் பாரம்பரியமான குலத்தொழில் இதுவாகும்.. ஒரே நேரத்தில் பல நிறங்களில் உடைகளை அணிந்திருப்பார்கள்.. முகத்தில் மஞ்சளும், நெற்றியில் மிகபெரிய சைஸ் குங்குமமும் வைத்திருப்பார்கள்.. இருக்கவே பயமாக இருக்கும்.

சிறிய உடுக்கை: குடுகுடுப்பை எனப்படும் சிறிய உடுக்கையை ஒலித்துக்கொண்டு குறி சொல்லுவார்கள்.. இவ்வாறு சொல்லி கொண்டே வரும்போது, மக்களிடமிருந்து உணவு, தானியம், பழைய துணிகள், பணம் போன்றவற்றை பெற்று வாழ்க்கை நடத்துவார்கள்..

இவர்களுக்கு சாமக்கோடங்கி என்றும் மற்றொரு பெயர் உண்டு.. தங்களது குல தொழிலை மறக்காமல் சமுதாய கட்டாய பழக்க வழக்கமாக நள்ளிரவில் குடுகுடுப்பை அடித்து ஜக்கம்மா அருள்வாக்கு குறி சொல்லி வருவது தற்போது கிராமப்புறங்களில் கூட அரிதாகிவிட்டது.

எங்களுடைய வீடு சின்ன வீடு அதை பார்த்த குடுகுடுப்புகாரர் நீங்க ரொம்ப கஷ்டப்பட்டு இருக்கீங்க வாழ்க்கையில முன்னுக்கு வரல அப்படின்னு சொன்னாரு. நீங்க எவ்வளவு உழைத்தாலும் நல்லது பொல்லது செஞ்சி செஞ்சி நீங்க இன்னும் கஷ்டப்பட்டுக்கிட்டே இருக்கீங்க என்று சொல்ல எங்க அம்மாவும் ஆமா என்று சொன்னாங்க.. இந்தக் கோடாங்கிக்கு ஒரு பரிகாரம் பண்ணுன எல்லாம் சரியா போகும் அப்படின்னு சொன்னாரு.. சரி அந்த பரிகாரம் பண்ணதுக்கு என்னிடம் பணம் இல்லையே என்று எங்க அம்மா சொன்னாங்க. பணம் எல்லாம் வேண்டாம் வீட்டில் கருப்பு பொருள் ஏதாவது இருந்தால் கொடுங்கள் என்று சொன்னார்.... அப்போது எங்கள் வீட்டில் விவசாய முடிந்து உளுந்தும் எள்ளும் இருக்கிறது இரண்டுமே கருப்பு பொருள்.. அதைத் தானமாக கொடுங்கள் என்று கேட்டார் எங்க அம்மா ஒரு அஞ்சு படி அளந்து போட்டாங்க...

சிவபெருமான்: குடுகுடுப்பைக்காரர்களின் கையில் உள்ளது, சிவபெருமானுக்குரிய உடுக்கையாகும்.. இதை எழுப்பியே வாக்கு சொல்வார்கள்.. உடுக்கையை ஒலிக்கும்போது, சிவபெருமானை மனதில் தியானித்து, அந்த நேரத்தில் மனதில் உதிக்கும் கருத்துக்களை சொல்வார்கள். ஒருசிலர் கையில் கோல் வைத்து குறி சொல்வார்கள்.. கோல் வைத்திருப்பவர்கள், முருகப்பெருமானை மனதில் தியானித்து குறி சொல்வார்கள்.



குடுகுடுப்பைக்காரர்கள் யார் என்பதற்கு ஒரு புராண கதையும் உள்ளது.. அதாவது, பூமியை படைத்த ஈசுவரன், ஒவ்வொரு மனிதனுக்கும் படியளப்பதற்காக, ஒவ்வொரு தொழிலை செய்யும்படி ஒதுக்கிவிட்டாராம்.. அந்த நேரத்தில், ஒரே ஒரு நபர் மட்டும் தூங்கிவிட்டாராம். கண்திறந்து பார்த்தபோதுதான், தான் தனித்துவிடப்பட்டது தெரிந்துள்ளது. அதனால் சிவபெருமானிடம் சென்று தனக்கு ஏதாவது தொழில் தருமாறு கேட்டிருக்கிறான்.

புராண பின்னணி:

எல்லா தொழில்களும் ஏற்கெனவே பங்கிடப்பட்டு பிரித்துக் கொடுத்தாகிவிட்டது. என்று யோசித்துள்ளார். பிறகு, தன்னுடைய கையிலிருந்த சித்துடுக்கையையும் சீங்குழலையும் தந்து, "நீ சொல்வது அஞ்சுக்கு ரெண்டு பலிக்கும். இவற்றை வைத்துப் பிழைத்துக்கொள்" என்றாராம். அப்போது முதல், குடுகுடுப்பைக்காரர்களாக இவர்கள் வாழ்ந்து வருவதாக சொல்லப்படுகிறது. குடுகுடுப்பைக்காரர்கள் சொல்லுகின்ற கடந்த கால விஷயங்கள் மிக சரியாக இருக்கும் என்றும், எதிர்காலத்தை பற்றி அவர்கள் சொல்வது பெரிதாக எதுவும் நடந்தது கிடையாதாம். ஆனால் அந்த காலத்தில் குடுகுடுப்பைகாரர்கள் நிஜமாகவே மந்திர தந்திரங்களில் தேர்ச்சி பெற்று இருந்தார்களாம்.. அதனால் அவர்கள் சொன்னது அந்த காலத்தில் பெரும்பாலும் பலித்ததால், முன்னோர்கள் இவர்களை நம்பினார்கள். ஆனால், இப்போது மந்திர பயிற்சி சிறப்பாக இருப்பதில்லை..

# மீம்ஸ்







# வைரம் பிரண்டை சாற்றில் பொடியாகும் என்று போகர் கூறினார்.

உலகிலேயே கடினமான பொருள் வைரம், அதில் உள்ள கார்பன் பிணைப்பை உடைக்கும் தன்மை இதன் சாற்றுக்கு உண்டு!

#முழங்கால் வலிக்கு ஏதாவது பண்ணுங்க என்றார்கள்......

கடந்த இருபது நாளில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை பிரண்டையை துவையல் செய்து சாப்பிட்ட பின்பு கடந்த ஒருவாரமாக வலி சுத்தமாக இல்லை என்பது மட்டுமின்றி உடல் சோர்வு அறவே இல்லாமல் இருக்கிறது என்றார்கள்....
எங்கம்மா ஏர் உழுவும் காலங்களில் கால் வலியை போக்க பிரண்டை, மல்லிதலை, தூதுவளை, கறிவேப்பிலை சேர்த்து துவையல் செய்து தந்த ஞாபகம் அதையே இங்கு செய்தோம் ......

பிரண்டையில் உள்ள மிகையான #சுண்ணாம்பு சத்து(#கால்சியம்) தான் எலும்பு மச்சையில் திரவம் அதிகமாக சுரக்க கால்சியம் தேவை அதுமட்டுமின்றி வாயில் ஆரம்பித்து ஆசனவாய் வரை உருவாகும் 300 விதமான நோய்க்கும் சிறந்த மருந்து பிரண்டை என போகர் நிகண்டுவில் குறிப்பிடபட்டுள்ளது குறிப்பாக சிறுகுடலில்



ஏற்படும் குறைபாடுகள் பிரண்டையால் உடனடியாக நிவர்த்தியாகும் இதை எனது அனுபவத்தில் உணர்ந்தேன் ......

பிரண்டை உப்பை சுமார் 300mg தேனில் அல்லது நெய்யில் தினமும் சாப்பிட்டு வர உடலில் உள்ள கழிவுகள் வெளியேற்றபட்டு உடல் குறைப்பு ஏற்படுகிறது சிறுகுடல் மற்றும் வயிற்றில் உள்ள வாயு முழுவதும் வெளியேறுவதை உடனடியாக உணரலாம்......

பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் ஏற்படும் இடுப்புவலி மற்றும் வயிற்று வலிக்கு பிரண்டை துவையல்(அ)உப்பை பயன்படுத்தினால் வலி இல்லாமல் போகும் பெண்களுக்கு ஏற்படும் கால்சியம் குறைபாட்டிற்கு இது அரு மருந்து.....

நிறைய குறைபாடுகள் பிரண்டையால் குணமாகும்போது எதற்கு கால்சியம் மாத்திரை சாப்பிட்டு சிறுநீரகத்தை பாழ் பண்ணனும் யோசிங்க.....

இதற்கு மற்றொரு பெயர் "வஜ்ஜிரவல்லி" தேகத்தை வஜ்சிரமாக்கும் என்பதனால் தானோ என்னவோ....



# விடுகதை

| | |
|---|---|
| வெயிலில் மலரும், காற்றில் உலரும். அது என்ன? | வியர்வை |
| காற்று இல்லாத கண்ணாடிக் கூண்டில் மஞ்சக் கோழி மயங்கி கிடக்குது அது என்ன? | முட்டை |
| காலையில் ஊதும் சங்கு, கறி சமைக்க உதவும் சங்கு அது என்ன? | சேவல் |
| அள்ளவும் முடியாது, கிள்ளவும் முடியாது. அது என்ன? | காற்று |
| குண்டு குள்ளனுக்கு குடுமி நிமிர்ந்தே இருக்கும் அவன் யார்? | கத்தரிக்காய் |
| அந்தரத்தில் தொங்குவது சொம்பும் தண்ணீரும் அது என்ன? | இளநீர் |

# ஜோக்ஸ்



"யாருய்யா நீ.. எப்படி என் அந்தப்புறத்தில் நுழைந்தீர்?"

"மஹாராணி என்னை தெரியவில்லையா... நான் தான் மஹாராஜா... புறமுதுகிட்டுஓடிவரும் போது தெரியாமல் பாதாள சாக்கடையில் விழுந்து விட்டேன்!"

++++++++++++++++++++++++++

"தலைவர் இதுக்கு முன்னால ஐ.டி. கம்பெனியில வேலை பாத்துருப்பாரோ!"

"ஏன் கேட்கிற?"

"நடை பயணத்துல மூணு நாள் நடந்துட்டு, ரெண்டு நாள் ஒர்க் ஃப்ரம் ஹோம்னு சொல்லிடுறாரே!"

-ப.சோமசுந்தரம்
கோவிலம்பாக்கம்
சென்னை 600129

++++++++++++++++++++++++++

" தலைவர் எதுக்குங்க யாரைப் பார்த்தாலும் குனிகிறார் ?"

"அதுவா,தனக்குப் பொன்னாடை போர்த்துவாங்கன்னு தப்பா நினைச்சிடுவார்..."

++++++++++++++++++++++++++



'தலைவர் எதுக்கு வீட்டுல சாப்பாட்டு வைத்தவுடன் சாப்பிட மாட்டேங்கிறார் ?"

"செல்பி எடுத்தா தான் சாப்பிடுவேன் என்று அடம்பிடிக்கிறார்"

++++++++++++++++++++++++++

"தலைவர் ஏன் குளிக்கப் போகும்போது சோப்பு கொண்டுப் போக மாட்டங்கிறார்?"

"அவரு வெறுங் கையாலேயே நல்லா சோப்பு போடுவார்"

++++++++++++++++++++++++++

"தலைவர் பேசினதும் நேரம் போனதே தெரியலங்க ? "

"தலைவர் இன்னும் பேசவே ஆரம்பிங்கிலைங்க"

++++++++++++++++++++++++++

"தலைவர் எதுக்கு உட்காந்த உடனே எந்திரிச்சு விட்டார் ?"

"இது வெளிநடப்பு கூட்டனு தவறா நினைச்சிட்டாருங்க"



# பன்முகம்



## AI-யுடன் குழந்தைகள் என்ன பேசுகிறார்கள்?



பெற்றோர்கள் கண்காணிக்க மெட்டா புது வசதி இதில் பெற்றோருக்கு அந்த உரையாடல் குறித்து முழு விவரம் தெரியவராது, பதிலாக அந்த உரையாடல்கள் எதைப்பற்றியோ அந்த தலைப்புகள் வரும் பிரிவுகளை மட்டுமே காட்டும்.

உதாரணமாக, பொழுதுபோக்கு, வாழ்க்கைமுறை, பயணம், உடல்நலம் போன்ற பிரிவுகள் இதில் அடங்கும்.

ஒவ்வொரு பிரிவுக்குள்ளும் உடற்பயிற்சி, ஃபேஷன் போன்ற குறிப்பிட்ட உட்பிரிவுகளையும் பார்க்க முடியும்.

தற்போது அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளில் இந்த வசதி நடைமுறைக்கு வந்துள்ளது. விரைவில் இந்தியாவிலும் அறிமுகமாக உள்ளது.

## இந்த ஆண்டு மட்டும் 96,000 பேர் பணிநீக்கம்!



ஏஐ வருகையால் தொழில்நுட்ப நிறுவனங்களில் என்ட்ரி லெவல் மற்றும் ஜெனரல் ஐடி பணிகளுக்கான தேவை குறைந்து வருகிறது.

முன்பு 250 ஊழியர்களுடன் ஈட்டிய வருவாயை, தற்போது ஏஐ உதவியுடன் வெறும் 50 ஊழியர்களைக் கொண்ட ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் ஈட்டுகின்றன.

இதற்கிடையே பெரு நிறுவனங்கள் ஏஐ உலகட்டமைப்பில் கொடிகளை கொட்டும் அதேவேளை ஏஐ பயன்பாட்டை அதிகரித்து ஆயிரக்கணக்கில் பணிநீக்கம் செய்து வருகிறது.

அந்த வரிசையில் பேஸ்புக், வாட்ஸ்அப், இன்ஸ்ட்டா ஆகியாற்றை உள்ளடக்கிய மெட்டா நிறுவனம் தனது பணியாளர்களில் 10% அதாவது சுமார் 8,000 பேரை பணிநீக்கம் செய்வதாக அறிவித்துள்ளது. மே 20 முதல் இந்த பணிநீக்கங்கள் தொடங்கும்.

மேலும், காலியாக இருந்த 6,000 பணியிடங்களை நிரப்பும் திட்டத்தையும் மெட்டா கைவிட்டுள்ளது.

அமேசான் நிறுவனம் கடந்த அக்டோபரிலிருந்து இதுவரை 30,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்துள்ளது.

இதற்கிடையே மற்றொரு தொழில்நுட்ப சாம்ராஜ்யமான மைக்கோசாப்ட் தனது 51 ஆண்டு கால வரலாற்றில் முதன்முறையாக, அமெரிக்க ஊழியர்களுக்கு விருப்ப ஓய்வு திட்டத்தை அறிவித்துள்ளது. இதில் சுமார் 8,750 ஊழியர்கள் வெளியேற வாய்ப்புள்ளது.

2026-ஆம் ஆண்டில் மட்டும் இதுவரை 92,000-க்கும் அதிகமான தொழில்நுட்ப ஊழியர்கள் வேலை இழந்துள்ளனர்.

Glassdoor அறிக்கையின்படி, தொழில்நுட்பத் துறை ஊழியர்களிடையே வேலை குறித்த தன்னம்பிக்கை மிக வேகமாகக் குறைந்து வருவது கண்டறிப்பட்டுள்ளது.

## கோடையில் சருமம் கருக்காமல் இருக்க...



கோடைகாலம் ஆரம்பித்துள்ள இவ்வேளையில் அதிக வெப்பம், புழுதி ஆகியவற்றால் சருமத்தில் கருமை, நீர்ச்சத்துக் குறைபாடு, முகப்பரு, பொலிவின்மை போன்ற பல பிரச்சனைகள் ஏற்படலாம்.

இந்நிலையில், கோடையில் சருமம் கருக்காமல் இருக்க சில ஆலோசனைகளை பார்க்கலாம்...

**கோடை காலத்தில்**

**சூரியனின் புற ஊதாக்கதிர்கள்** சருமத்தை நேரடியாகத் தாக்குகின்றன. இதனால், அயர்ச்சியான தோற்றமும் கருமையும் உண்டாகின்றன. இதைத் தடுக்க 'நான்-நானோ ஜிங்க் ஆக்சைடு' கலந்த மினரல் சன் ஸ்கிரீனை பயன்படுத்த வேண்டும்.

இந்த வகை சன் ஸ்கிரீன், சருமத்துக்குள் ஊடுருவாமல், ஒரு படலமாக மேலேயே இருந்து சூரியக் கதிர்களைப் பிரதிபலித்து வெளியே தள்ளும். வீட்டை விட்டு வெளியே கிளம்புவதற்கு 20 நிமிடங்களுக்கு முன்பாக இந்த வகை சன் ஸ்கிரீனை சருமத்தில் தடவ வேண்டும்.

**நீர்ச்சத்தை அதிகரித்தல்**

**கோடைகால வெப்பம்** காரணமாக அதிக வியர்வை வெளியேறி விரைவாகவே உடல் நீர்ச்சத்தை இழந்து விடும். இதனால் சருமம் பொலிவற்று காட்சி தரும். இதைத் தடுக்க நாளொன்றுக்கு குறைந்தது 8 முதல் 10 டம்ளர் தண்ணீர் பருக வேண்டும். அதிகம் காபி, டீ அருந்துவதை தவிர்ப்பதோடு, தர்பூசணி, வெள்ளரி, ஆரஞ்சு போன்ற நீர்ச்சத்து நிறைந்த பழங்களை அதிகமாக உட்கொள்ள வேண்டும். மேலும் சர்க்கரை அதிகம் கலந்த பானங்களைத் தவிர்ப்பது நல்லது.

**முறையான சுத்திகரிப்பு**

**கோடைகாலத்தில்** காற்றில் உள்ள மாசு மற்றும் வியர்வையின் காரணமாக சருமத் துளைகள் அடைபட்டு முகப்பருக்கள் உண்டாகின்றன. இதைத் தடுக்கவும், சருமத்தின் இயற்கையான ஈரப்பதத்தைத் தக்கவைக்கவும் மென்மையான பேஸ் வாஷ்களை பயன்படுத்தி தினமும் 2-3 முறை முகத்தைக் கழுவ வேண்டும்.



**மாய்ஸ்சரைசரை மறக்காதீர்கள்**

கோடை காலத்தில் சருமம் வறட்சி அடையாமலும், எண்ணெய்ப் பசையாக மாறாமலும் சமநிலையில் இருப்பது அவசியம். ஆகவே இக்காலத்தில், சருமத்தை ஈரப்பதமாக வைத்துக்கொள்ள பிசுபிசுப்பு இல்லாத, அடர்த்தியற்ற மாய்ஸ்சரைசர்களை தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவது சருமத்துக்கு நல்லது.

**இயற்கையான குளிர்ச்சி தரும் பொருட்கள்**

கோடை வெயிலால் தோலில் எரிச்சல் மற்றும் சிவந்த தழும்புகள் ஏற்படுவது இயற்கையே. இதைக் குறைக்க இயற்கையான குளிர்ச்சி தரும் பொருட்களான கற்றாழை, வெள்ளரிச்சாறு மற்றும் நறுமண எண்ணெய்களைப் பயன்படுத்துவது சருமத்துக்கு உடனடி ஆறுதலைத் தந்து, தோல் எரிச்சலைக் குறைத்து புத்துணர்ச்சியை வழங்கும்.

**நேரடி வெயிலைத் தவிர்த்தல்**

கோடைகாலத்தில் சருமம் கருப்பாகாமல் இருக்க கிரீம்கள் மட்டும் உதவாது. நேரடி வெயிலைத் தவிர்க்க அகலமான விளிம்புள்ள தொப்பிகள், தரமான கூலிங் கிளாஸ், ஸ்கார்ப் அல்லது குடையைப் பயன்படுத்து வதும் சருமத்துக்கு பாதுகாப்பாக அமையும். மேலும் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை தேவை யற்ற பயணங்களைத் தவிர்ப்பதும் பாதுகாப்பாகும்.

**சத்தான கோடைகால உணவு**

வைட்டமின் சி நிறைந்த எலுமிச்சை, நெல்லிக்காய் மற்றும் ஆன்டி ஆக்சிடென்டுகள் நிறைந்த கீரைகளை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். சருமம் தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்ள பருப்பு மற்றும் கொட்டைப்பருப்புகளை சாப்பிடுவது நல்லது.

## வீட்டுக்கடனில் மிச்சப்படுத்தலாம்!



இன்று பெரும்பாலானோருக்கு வீட்டுக் கனவை நனவாக்க உதவுவது, வீட்டுக் கடன்தான்.

வருவாய் ஈட்டும் பெண்களும், கணவருடன் இணைந்தும், தனித்தும் வீட்டுக் கடன் பெறுகின்றனர். அதன் மூலம் தங்கள் கனவு இல்லத்தில் குடியேறுகின்றனர்.

ஆனால், நீண்டுகொண்டே செல்லும் மாதாந்திர தவணைதான் (ஈ.எம்.ஐ.) பலரை நாளடைவில் சோர்வடையச் செய்கிறது.

ஆனால், புத்திசாலித்தனமாக திட்டமிட்டுச் செயல்பட்டால், குறிப்பிட்ட காலத்துக்கு முன்பே வீட்டுக் கடனை கட்டி முடிக்கலாம். அதன் மூலம் லட்சக்கணக்கில் பணத்தை மிச்சப்படுத்தலாம் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

உதாரணத்துக்கு, உங்கள் வீட்டுக் கடனை 20 ஆண்டுகளில் இருந்து 12 ஆண்டுகளாக குறைக்க முடியும். அதற்காக நீங்கள் முன்கூட்டியே பல லட்சங்களை மொத்தமாக செலுத்த வேண்டியதில்லை. உங்கள் மாதத் தவணையில் செய்யப் போகும் ஒரு சின்ன மாற்றம் போதும்.

இந்த எளிய முறையைப் பின்பற்றுவதன் மூலம், வட்டி என்ற பெயரில் வங்கிக்குச் செலுத்தும் பல லட்சக்கணக்கான ரூபாயை மிச்சப்படுத்த முடியும்.அது எப்படி என்று பார்க்கலாம்...

நீங்கள் செலுத்தி வரும் வீட்டுக்கடன் தவணையில் ஆண்டுக்கு ஒரு தவணை அதிகமாக செலுத்தி வந்தாலே போதும். இதுவே உங்கள் கடனுக்கான 20 ஆண்டு கால அவகாசத்தை 15 ஆண்டுகளாக குறைக்கும்.

ஏனெனில் கூடுதலாக செலுத்தும் தொகையானது நேரடியாக உங்கள் கடன் குறைய வழிவகுக்கும். ஆக இந்த ஒரு சிறிய மாற்றம், உங்களுக்கு பல மாதங்களை மிச்சப்படுத்த உதவும். வட்டித் தொகையையும் சேமிக்க வழிவகுக்கும்.

உங்களுடைய சம்பளம் அதிகரிக்க அதிகரிக்க, மெதுவாக உங்கள் மாத தவணையை அதிகரித்தாலும், அதுவும் பெரிய அளவிலான தொகையை மிச்சப்படுத்த உதவும்.

உதாரணமாக, வருடத்துக்கு 5 சதவீத தொகையை அதிகரித்தால், 20 ஆண்டு கால தவணையானது 12 ஆண்டுகளில் முடிவடையும். ரூ.50 லட்சம் கடனில் 9 சதவீத வட்டி விகிதத்தில் சுமார் ரூ.30 லட்சத்தை மிச்சப்படுத்த உதவும்.


இந்த உத்தியானது மிகவும் எளிதான ஒன்றுதான். ஆனால் பலன் மிகப்பெரியது. நீண்டகால அடிப்படையில் கடன் வாங்கும் போது வங்கிகள் அதிக லாபத்தை ஈட்டுகின்றன. பலரும் இதை அறியாமலேயே மாத மாதம் வெறும் தவணையை மட்டும் செலுத்தி, வட்டிக்கு வட்டி என செலுத்தி பெரிய அளவிலான தொகையை தங்களுக்கு அறியாமலேயே இழக்கிறார்கள்.

ஆனால், திட்டமிட்டு முன்கூட்டியே அசலை குறைப்பதன் மூலம், வட்டியும் குறையும். கடனுக்கான கால அவகாசமும் குறையும்.

எடுத்துக்காட்டாக, 20 ஆண்டுகால கடனில், முதல் சில ஆண்டுகளில் நீங்கள் செலுத்தும் தொகையானது பெரும்பகுதி வட்டிக்கே சென்றுவிடும். அசல் தொகை பெரிய அளவில் குறையாமலேயே இருக்கும்.

ஆனால் நீங்கள் திட்டமிட்டு அசலில் பணம் செலுத்தும்போது, வட்டித் தொகை குறையும். ஆக, உங்கள் வசதிக்கு ஏற்ப அவ்வப்போது கூடுதல் தொகையை செலுத்தி வந்தால், அதன் மூலம் லட்சக்கணக்கான ரூபாயை மிச்சப்படுத்தலாம்.

## எலும்பை பாதுகாக்க கடைபிடிக்க வேண்டியவை.



எலும்புகளின் தன்மையை அதன் உறுதியைப் பாதுகாக்க தினமும் உடற்பயற்சி செய்வது மிக முக்கிய தடுப்பு முறையாகும்.

வலி வந்து விடுமே என்ற பயத்தில் சிலர் நடப்பதை முற்றிலும் தவிர்ப்பார்கள். இது மிகவும் தவறானது. இது நோயின் வீரியத்தை இன்னும் அதிகப்படுத்தும். அதாவது குறைந்தது ஒரு மணி நேரம் நடைப்பயற்சி செய்வது மிக முக்கியம்.

நடைப்பயற்சி செய்வதை முறையாக செய்வது நல்லது, அதாவது சரியான காலணிகள் அணிவதால் முழங்காலில் ஏற்படும் வலி வாதம் இவற்றைத் தவிர்க்கலாம்.

மிகவும் வயது முதிர்ந்தவர்கள் குறைந்தது இரண்டு மணிநேரத்திற்கு ஒரு முறை படுக்கையில் இருந்து எழுந்து நிற்க வேண்டும்.

குறைந்தது பதினைந்து நிமிடமாவது சூரிய ஒளி உடலில் படுவது அவசியம். அதாவது இதன் மூலம் எலும்புகளுக்குத் தேவையான வைட்டமின் டி தோல் மூலம் உறிஞ்சப்படும்.

கால்சியம் அதிகம் உள்ள உணவுகளான பால், கீரை, தானியங்கள் போன்றவற்றை தினமும் உணவில் சேர்ப்பது மிக முக்கியம். இது எலும்புகளை வலுப்படுத்த உதவும். பச்சை காய்கறிகளில் கால்சியம் அதிகமாக உள்ளதால் காய்கறிகளை விரும்பி உண்ணுங்கள்.

சோயா தானியத்தில் மிக அதிகம் கால்சியம் உள்ளதால் இதை உணவில் சேர்த்துக்கொள்ள பழகுங்கள். காபி அதிகம் பருகுவதைத் தவிர்ப்பது நல்லது, இது உடலில் இருந்து கால்சியம் வெளியேறுவதை அதிகப்படுத்தும்.

மீன் உணவுகளை தினம்தோறும் சேர்த்துக் கொள்வது நல்லது. புகைபிடிப்பது, மது அருந்துவது உடலில் உள்ள கால்சியம் அளவை குறைக்க வாய்ப்புள்ளதால் முற்றிலும் தவிர்ப்பது நல்லது. பால் இரவில் அதிகம் எடுப்பதை விட மாலை அல்லது காலை வேளைகளில் எடுத்துக் கொள்வதால் தூக்கம் தடைபடுவதைத் தவிர்க்கலாம்.

கால்சியம் இப்பொழுது மாத்திரை வடிவில் கிடைக்கிறது, இதனை உங்கள் குடும்ப மருத்துவரின் ஆலோசனைப்படி எடுத்துக்கொள்வது நல்லது.

முதுமை மற்றும் ஹார்மோன் மாற்றங்கள் தவிர்க்க முடியாத ஒன்று. இதனை நாம் சரி செய்து கொள்ள இவற்றை பின்பற்றுவது மூலம் எலும்பு தேய்மானத்தால் ஏற்படும் இது போன்ற பக்கவிளைவுகளை தவிர்க்கலாம்.

## 47 ஆம் ஆண்டு ருத்ர வன்னிய நாடக விழா



திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம் பெலாசூர் கிராமத்தில் காமாட்சி அம்மன் திருவிளையாடல் எனும் ருத்ர வன்னிய நாடக விழா, வன்னியன் பிறப்பு நாடகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பொதுமக்கள், பக்தர்கள் அனைவரும் நாடகத்தை கண்டு ரசித்தனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## திருநாங்கூர் திவ்ய தேசம்



ஸ்ரீ நாராயண பெருமாள் கோவில் 4ஆம் நாள் இரவு கருட சேவை புறப்பாடு

## காசாவில் ஓயாத ஓலம்.. போர் நிறுத்தத்தை மீறி தாக்குதலை தொடரும் இஸ்ரேல் – 16 பேர் பலி

பாலஸ்தீன நாட்டின் முக்கிய நகரமான காசாவில் 3 வருட தொடர் இஸ்ரேல் தாக்குதலில் 72,500 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

இதில் பாதி பேர் பெண்கள், குழந்தைகள் என ஐநா உள்ளிட்ட அமைப்புகளின் தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு அக்டோபரில் தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டபோதும் இஸ்ரேல் தொடர்ந்து காசாவில் தாக்குதல் நடத்தி வருகிறது.

கடந்த சில மணிநேரங்களில் காசா பகுதி முழுவதும் நடந்த பல்வேறு இஸ்ரேலியத் தாக்குதல்களில், ஒரு பெண் உட்பட நான்கு பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதை சுகாதார அதிகாரிகளும் மருத்துவர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அல்-முக்ராக் கிராமத்திற்கு அருகே நடந்த வான்வழித் தாக்குதலில் ஒருவர் கொல்லப் பட்டார். காசா நகருக்கு அருகே நடந்த துப்பாக்கிச் சூடு மற்றும் பீரங்கித் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர். தெற்கு காசாவின் கான் யூனிஸ் பகுதியில், 40 வயதான



பாலஸ்தீனியப் பெண் ஒருவரை இஸ்ரேலியப் படைகள் சுட்டுக் கொன்றன.

முன்னதாக கடந்த வெள்ளிக்கிழமை, காசா முழுவதும் இஸ்ரேலியப் படைகள் நடத்திய தாக்குதல்களில் 12 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

கான் யூனிஸ் நகரில் ஒரு வாகனத்தின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், அவ்வழியே சென்றுகொண்டிருந்த மூன்று பொதுமக்கள் உட்பட குறைந்தது எட்டு பேர் கொல்லப்பட்டனர். காசா நகரில் நடைபெற்ற மற்றொரு தாக்குதலில் இரண்டு காவல்துறை அதிகாரிகள் உயிரிழந்தனர்.

வடக்கு காசாவிலுள்ள பெய்ட் லஹியா பகுதியில் ஒரு வீட்டின் மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் மேலும் இருவர் கொல்லப்பட்டனர்.




## திருமஞ்சனம்



திருப்புல்லாணி ஆண்டவன் ஆஸ்ரமம் திருமஞ்சனம்

## அர்ச்சுனன் தபசு மரம் ஏறும் வைபவம்..!



**வந்தவாசி, ஏப் 27:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த மாம்பட்டு அருள்மிகு வீரபாஞ்சாலி அம்மன் கோவிலில் நடைபெற்று வரும் அக்னி வசந்தோற்சவ விழாவில் அர்ச்சுனன் தபசு மரம் ஏறும் வைபவம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் தெருக்கூத்து கலைஞர் அர்ச்சுனன் வேடமிட்டு பாடல்களை பாடியவாறு சென்றார். இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

## மூன்றாம் நாள் காலை சூரிய பிரபை வாகனம்



ஸ்ரீ ஸ்தலசயன பெருமாள் பிரமோட்சவு மூன்றாம் நாள் காலை சூரிய பிரபை வாகனம்

## திருப்புல்லாணி இரட்டைக் கருட சேவை



திருப்புல்லாணி இரட்டைக் கருட சேவை நேற்று இரவு

## பட்டாபிஷேகம்



தடாதகைப் பிராட்டி பட்டாபிஷேகத்திற்கு தயாராக மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் சித்திரை திருவிழா-2026-26.04.2026-மாலை-7.05-07.29 மணிக்கு பட்டாபிஷேகம்

## தறுதலைகளின் வேலையா, தற்குறிகளின் வேலையா தெரியவில்லை' - கார் கண்ணாடி உடைப்பால் ஆவேசமான ஜேம்ஸ் வசந்தன்

**சென்னை, ஏப்.27:** இசையமைப்பாளர், தொலைக்காட்சி தொகுப்பாளர் என பன்முகங்களை கொண்டவர் ஜேம்ஸ் வசந்தன். இவர் சமீப நாட்களாக விஜய்யின் அரசியல் வருகை குறித்துக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகிறார்.

இந்நிலையில் நேற்று அவரது கார் கண்ணாடி உடைக்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி



யுள்ளது. தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வீடியோ ஒன்றை பதிவிட்டுள்ள ஜேம்ஸ் வசந்த், "தறுதலைகளின் வேலையா அல்லது தற்குறிகளின் வேலையா என்று தெரியவில்லை. இன்று மதியம் நான் ஒரு உணவகத்தில் சாப்பிடச் சென்றபோது." எனக் குறிப்பிட்டுள்ளார். அந்த வீடியோவில் கார் கண்ணாடி உடைந்துள்ளது காட்டப்படுகிறது. இந்நிலையில் இந்த சம்பவத்திற்கு அவர் எதிர்ப்பு தெரிவித்து வந்த கட்சித் தொண்டர்கள் காரணமாக இருக்கலாம் என பலரும் கமெண்ட் செய்துவருகின்றனர். மேலும் உங்கள் கருத்தியல் நிலைப்பாட்டில் நீங்கள் உறுதியாக இருங்கள் எனவும் குறிப்பிட்டு வருகின்றனர்.

## சீர்காழி சட்டை நாதர் திருக்கோயிலில் நகர முக்குலத்தோர்கள் நடத்தும் சகோபுர திருவிழா



**சீர்காழி , ஏப் , 27:** தருமை ஆதீனத்திற்கு சொந்தமான மயிலாடு துறை மாவட்டம் சீர்காழி ஸ்ரீசட்டைநாதர் சுவாமி தேவஸ்தானம் சட்டை நாதர் திருக்கோயில் திருமுலைப்பால் திருவிழாவை முன்னிட்டு சீர்காழி நகர முக்குலத் தோர்கள் நடத்தும் 5-ஆம் நாள் திருநாளான சகோபுர திருவிழா மிக சிறப்பாக நடைப்பெற்றது .

மூவேந்தர் முன்னேற்றக் கழக நிர்வாகி வைபவ் வாண்டையார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வடம் பிடித்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் அ.தி. மு.க. மாநில அம்மா பேரவை துணை செயலாளர் மார்கோனி, மூவேந்தர் முன்னேற்ற கழக மாவட்ட துணை செயலாளர் ஜீ.வி. குமார் , கொள்ளிடம் ஒன்றிய செயலாளர் பாரதிதாசன், மனோஜ் , பட்டவர்த்தி சரவணன், ஆதமங்கலம் செல்வா , வைத்தீஸ்வரன் கோவில் ராஜேந்திரன், எஸ். எம்..மகேஷ் , நகர செயலாளர் இளஞ்செழியன், மூமமூர்த்தி , பாலுத்தேவர். ஆச்சாள்புரம் தேவா, பேட்டரி சங்கர் , சிவா, சகோபுர கமிட்டியினர், சித. லட்சுமணன், நாகை செல்வம் மற்றும் மூவேந்தர் முன்னேற்ற கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## விஜய்யின் அரசியல் - ஒரே வார்த்தையில் பதிலளித்த நடிகர் மம்மூட்டி

தமிழ்நாட்டில் கடந்த வியாழன்கிழமை (ஏப்.26) சட்டப்பேரவை தேர்தல் நடந்து முடிந்துள்ளது. அரசியல் தலைவர்களைவிட, மக்கள் தேர்தல்



முடிவுகளுக்காக தீவிரமாக காத்துள்ளனர். காரணம், நடிகர் விஜய்யின் அரசியல் வருகை மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதா என்பதை அறிய பலரும் ஆவலாக உள்ளனர்.

இதனிடையே அவரது அரசியல் குறித்து நடிகர்கள் பலரும் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தி வருகின்றனர். சில நடிகர்கள் இதனை வரவேற்றுள்ள நிலையில், சிலர் விமர்சனங்களையும் முன் வைத்துள்ளனர். இந்நிலையில் நடிகர் மம்மூட்டியிடம் நேற்று விஜய்யின் அரசியலை எப்படி பார்க்கிறீர்கள்? என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

## போளூரில் வாசவி மாதா ஜெயந்தி விழா



**போளூர்,ஏப்.27:** போளூரில் வாசவி மாதா ஜெயந்தி விழா மிக சிறப்பாக நேற்று நடைபெற்றது.

காலையில் கோ பூஜை தொடங்கி, கலச ஸ்தாபனம், ஹோமம் போன்றன தொடர்ந்து நடைபெற்றது. வாசவி மாதாவிற்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், ஆராதனைகள் நடந்தன. இதில் ஆர்யவைஸ்ய ஆண்கள், பெண்கள் திரளாக கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.சமாஜ தலைவர் டி.தனபால் தலைமை வகித்தார். நிர்வாகிகள் ஆர்.கோவர்த்தனம்,குப்புசெட்டி,தேவேந்திரன்,துவாரகா உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டனர்.

தெலுங்கான அரசு, வாசவி மாதா ஜெயந்தி விழா, மாநில அரசு விழாவாக ஆண்டுதொறும் கொண்டாட உத்தரவு பிறப்பித்துள்ளது.

# சுற்றுலா: கேரளாவின் மினி மூணாறு: மறைந்திருக்கும் இயற்கை அதிசயம்!



வார இறுதி நாட்களில் ஆனந்தமாக செல்ல ஒரு மினி மூணாறு, கேரள மாநிலம் கொல்லம் மாவட்டத்தில் அமைந்துள்ள அம்பநாடு எஸ்டேட் (AMBANAD HILLS) ஆகும். பிரம்மாண்டமாக ஓங்கி உயர்ந்த மலைகள், புல்வெளிகள், நீரோடைகள் என கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பச்சை பசேலென கண்ணுக்கு விருந்தாக காட்சியளிக்கும். இங்கு தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்கள் நிறைந்துள்ளன. இது ஒரு மினி மூணாறு என்று அழைக்கப்படுகிறது. காரணம் இதன் இயற்கை அழகு மூணாறைப் போலவே காணப்படுவதால் மினி மூணாறு என்று அழைக்கப்படுகிறது.

அம்பநாடு எஸ்டேட்டில் ஒரு பயணம் மேற்கொள்வது என்பது ஒரு இனிமையான அனுபவமாக இருக்கும். இங்கு அதிக ஈரப்பதம் நிலவுவதால் அட்டைகள் அதிகம் காணப்படுகின்றன.

எனவே அவற்றின் மீது சிறிது கவனம் வைத்து ஜாக்கிரதையாக நடந்துகொள்வது நல்லது. இந்த எஸ்டேட் கொல்லம் மாவட்டத்தின் புனலூர் தாலுகாவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் அச்சன்கோவில் காட்டில் மறைந்திருக்கும் இயற்கை அழகாகும். இது வெளி உலகத்துக்கு அதிகம் தெரியாததால் குறைவான சுற்றுலா பயணிகளே இங்கு பார்வையிட வருகிறார்கள். எனவே அதிக நெரிசல் இல்லாமல் அழகாக அனுபவிக்க முடிகிறது.

பசுமையான மலைகள், புல்வெளிகள், நீர்வீழ்ச்சிகள், எங்கும் மேகம் சூழ்ந்த காட்சிகள் நம் மனதை மயக்குகின்றது. கொல்லம் மாவட்டத்தில் உள்ள ஒரே தேயிலை தோட்டம் இங்குள்ளது. இந்தத் தோட்டமானது திருவிதாங்கூர் ரப்பர் மற்றும் தேயிலை நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்ட இந்த தேயிலை தோட்டத்தை சுற்றிப் பார்க்கலாம். பரந்த ரப்பர் தோட்டங்களையும் காணலாம். மேலும் கேரளாவின் மிகப்பெரிய கிராம்புத் தோட்டங்களில் ஒன்று இங்கு அமைந்துள்ளது. இங்குள்ள காலநிலை மிகவும் இதமாகவும் குளிர்ச்சியாகவும் உள்ளது.

இந்த இடம் வார இறுதி பயணத்திற்கு ஏற்ற இடமாகும். 300 மீட்டர் உயர மலையின் உச்சிக்கு அருகில் அம்பநாடு எஸ்டேட்டில் ஒரு தேயிலை பதப்படுத்தும் தொழிற்சாலை உள்ளது.

இங்கு தேயிலை பதப்படுத்துதலைப் பார்த்து அறிந்து கொள்ளும் வாய்ப்பு பார்வையாளர்களுக்கு கிடைக்கிறது.

ஆங்கிலேயர்கள் நிறுவிய அம்பநாடு எஸ்டேட்டில் தேயிலையை பதப்படுத்தும் இயந்திரங்கள் பிரிட்டிஷ் வம்சாவளியைச் சேர்ந்தவை. இன்றும் இங்கு செயல்பட்டு வருகின்றது.

பிரிட்டிஷ் காலத்து தொழிற்சாலையான இதில் இன்னும் பழங்கால இயந்திரங்களை பயன்படுத்துகிறது. அம்பநாடு மலை தேயிலை தோட்டங்களாலும், காபி, கிராம்பு மற்றும் ஆரஞ்சு தோட்டங்களாலும் சூழப்பட்டுள்ளது. விடியற்காலை மற்றும் மாலை வேளைகளில் பள்ளத்தாக்குகள் மற்றும் மலைச்சரிவுகளை மூடும் மூடுபனி ஒரு அழகிய உணர்வைத் தருகிறது.

மலைச்சரிவுகளும், மூடுபனி மூடிய மலைகளும், முடிவற்ற நீலத் தொடு வானங்களும் நம்மை இயற்கையின் அழகில் மயங்க வைக்கிறது. வளைந்து நெளிந்து செல்லும் சாலைகள் மற்றும் எளிதில் அணுகக்கூடிய தன்மை ஆகியவை உள்ளூர் வாசிகளையும், இயற்கை ஆர்வலர்களையும் ஈர்க்கிறது. இங்கு மலையேற்றம், உள்ளூர் உணவுகளை ருசிப்பது, எஸ்டேட் பங்களாவில் தங்குவது என இயற்கை அழகை ரசித்து அனுபவித்துவிட்டு வரலாம்.

அம்பநாடு எஸ்டேட் வாரத்தின் அனைத்து நாட்களிலும் திறந்திருக்கும். பார்வையிட சிறந்த நேரம் அக்டோபர் முதல் மார்ச் வரை. நுழைவு கட்டணம் பெரியவர்களுக்கு நூறு ரூபாய் கட்டணமும், குழந்தைகளுக்கு இருபது ரூபாயும் வசூலிக்கப்படுகிறது.

அம்பநாடு மலைகள் கழுதுருட்டியிலிருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஆரியங்காவு பஞ்சாயத்தில் உள்ளது.

அருகில் உள்ள விமான நிலையம் திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையம். ரயில் நிலையம் செங்கோட்டை 29 கி.மீ.

## வேலைவாய்ப்பு கார்னர்

### சுங்கவரித் துறையில் வேலை வேண்டுமா?

மத்திய அரசின் கீழ் செயல்பட்டு வரும் சுங்கவரி ஆணையர் அலுவலகத்தில் நிரப்பப்பட உள்ள குரூப் 'சி' பணியிடங்களுக்கு பத்தாம் வகுப்பு, ஐடிஐ முடித்தவர்களிடம் இருந்து ஏப்.30 ஆம் தேதிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வயதுவரம்பு: 25-க்குள் இருக்க வேண்டும். சம்பளம்: மாதம் ரூ. 19,900 - 63,200

தகுதி: பத்தாம் வகுப்பு தேர்ச்சியுடன் Mechanic, Diesel, Fitter, Tumer, Welder, Electrician, Instrumentation, Carpentary டிரேடில் ஐடிஐ தேர்ச்சியுடன் 2 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 18 முதல் 25 வயதிற்குள் இருக்க வேண்டும். சம்பளம்: மாதம் ரூ.18,000 - 56,900

தகுதி: பத்தாம் வகுப்பு தேர்ச்சியுடன் 3 ஆண்டு பணி அனுபவமும், Sea going mechanized vessel-இல் இரண்டு ஆண்டுகள் பணி அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு: 18 முதல் 25-க்குள் இருக்க வேண்டும். சம்பளம்: மாதம் ரூ.18,000 -56,900

வயதுவரம்பு சலுகை: உச்ச வயது வரம்பில் எஸ்சி, எஸ்டி பிரிவினர்களுக்கு 5 ஆண்டுகளும், ஓபிசி பிரிவினருக்கு 3 ஆண்டுகளும் சலுகை வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் முறை: எழுத்துத்தேர்வு, உடற்திறன் தேர்வு மற்றும் நீச்சல் திறன் மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பிக்கும் முறை: https://chennaicustoms.gov.in என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து, அதைப் பூர்த்தி செய்து, அதனுடன் தேவையான அனைத்து சான்றிதழ்களின் நகல்களையும் இணைத்து அதனுடன் சமீபத்தில் எடுக்கப்பட்ட 4 புகைப்படம் மற்றும் இரண்டு சுய முகவரியிட்ட தபால் கவர் இணைத்து விரைவுத் தபால் மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பிக்கும் பணியின் பெயரை தபால் கவரின் மேல் பெரிய எழுத்தில் குறிப்பிட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய அஞ்சல் முகவரி:

The Additional Commis-sioner of Customs (Establis-hment), Office of the Commis-sioner of Customs (General), 2nd Floor, Krishna Block, Rajaji Salai, Chennai - 600 001.

இ-மெயில்: cuschn-estt@gov.in

விண்ணப்பங்கள் வந்து சேர கடைசி நாள்: 30.4.2026

## ரூ.20 கோடியில் நவீன வழிகாட்டி பலகைகள்: சென்னை மாநகராட்சி திட்டம்

**சென்னை, ஏப். 27:**

சென்னையின் 300 முக்கிய சாலைகளில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் நவீன வழிகாட்டி பலகை அமைக்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட சாலைகளில் போக்குவரத்தை சீரமைக்க, விபத்தை தடுக்கும் வகையில் வழிகாட்டி பலகைகள் அமைக்கப்படுகிறது.

பள்ளி, விபத்து பகுதி, வேகத்தடை உள்ளிட்டவை குறித்து படம் மூலம் எச்சரிக்கும் வகையிலும், எழுத்துக்களை விட எளிதில் புரியக்கூடிய வகையில் படங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ் தெரியாதவர்கள், வெளிமாநிலத்தவர்கள் கூட எளிதாக சாலைகளை அறிந்துகொள்ளும் வகையில் வழிகாட்டி பலகைகள் அமைக்கப்படுகிறது. இரவு நேரங்களில் ஓட்டுநர்களுக்கு தெளிவாகத் தெரியும் வகையில் பலகைகளை அமைக்க சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## கோடநாடு வழக்கு ஜூன் 19-ம் தேதிக்கு தள்ளிவைப்பு

**ஊட்டி, ஏப்.27:**

கோடநாடு வழக்கு விசாரணை ஜூன் 19-க்கு தள்ளி வைத்து நீதிபதி உத்தரவிட்டார். நீலகிரி மாவட்டம் கோடநாடு எஸ்டேட்டில் 2017- ஏப்ரலில் காவலாளி கொலை செய்யப்பட்டு, பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

இதுதொடர்பாக 10 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கை சிபிசிஐடி விசாரித்து வருகிறது. இந்த வழக்கு உதகை நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அரசு தரப்பில், செல்போன் உரையாடல் மற்றும் தகவல் பரிமாற்றங்கள் குறித்து குஜராத்தில் உள்ள பிஎஸ்என்எல் அலுவலகத்தில் இருந்து அறிக்கை கேட்கப்பட்டுள்ளதாகவும் அந்த தகவல்கள் இன்னும் கிடைக்காததால், விசாரணைக்கு கால அவகாசம் கோரப்பட்டது. ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் அவகாசம் கொடுக்க கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இருதரப்பு வாதங்களை கேட்ட நீதிபதி எம்.செந்தில்குமார் வழக்கு விசாரணையை ஜூன் 19-க்கு தள்ளிவைத்தார்.

## ஜூன் 1-ந்தேதி மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களை வழங்க பள்ளிக்கல்வித்துறை நடவடிக்கை

**சென்னை, ஏப்.27:**

தமிழகத்தில் 1-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரையிலான பள்ளி மாணவர்களுக்கு 4 கோடியே 10 லட்சம் புத்தகங்கள் வழங்க திட்டமிடப்பட்டது. தற்போது வரை 3 கோடியே 50 லட்சத்து 51 ஆயிரத்து 40 பாடப்புத்தகங்கள் பள்ளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, புத்தகங்களை அச்சிடுவதற்கு கொடுக்கப்பட்ட ஆர்டரில் 88.06 சதவீத பாடப்புத்தகங்கள் பள்ளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுவிட்டதாகவும், மீதமுள்ள புத்தகங்கள் விரைவில் விநியோகம் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பள்ளி மாணவர்களுக்கு தற்போது கோடை விடுமுறை விடப்பட்டுள்ள நிலையில், ஜூன் 1-ந்தேதி புதிய கல்வி ஆண்டு தொடங்குகிறது. அப்போது பள்ளிகள் திறந்ததும் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களை வழங்க பள்ளிக்கல்வித்துறை தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

## தேர்தல் நேரத்தில் தாராளம்: கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.16,100 கோடி பயிர் கடன்

**சென்னை, ஏப்.27:**

தமிழக அரசின் கூட்டுறவு துறையின் கட்டுப்பாட்டில், மாநில மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.




விவசாயிகள் நலன்களுக்காக செயல்படும் இந்த வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு பயிர் கடன், நகைக் கடன் வழங்கப்படுகின்றன.

இதேபோல், சுயஉதவிக் குழுக்களுக்கும் தொழில் தொடங்க கடன்கள் வழங்கப்படுகின்றன.

கடந்த 2024-25-ம் ஆண்டில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் 17 லட்சத்து 37 ஆயிரம் விவசாயிகளுக்கு ரூ.15 ஆயிரத்து 500 கோடி கடன் வழங்கப்பட்டது.

தற்போது, சட்டசபை தேர்தல் வந்ததால் கடன் வழங்குவதில் தாராளம் காட்டப்பட்டுள்ளது. அதாவது, 2025-26-ம் ஆண்டில் 18 லட்சத்து 55 ஆயிரம் விவசாயிகளுக்கு ரூ.16 ஆயிரத்து 100 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூ.600 கோடி அதிகம் ஆகும்.

இதேபோல், மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு 2024-25-ம் ஆண்டில் ரூ.4 ஆயிரத்து 60 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

இந்த கடன் அளவு 2025-26-ம் ஆண்டில் ரூ.5 ஆயிரத்து 600 கோடியாக அதிகரித்துள்ளது. அதாவது, கடந்த ஆண்டைவிட ரூ.1,540 கோடி கூடுதலாக கடன் வழங்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு பிறகு ஆட்சி அமைப்பவர்கள் கூட்டுறவு வங்கிக் கடன்களை தள்ளுபடி செய்வார்கள் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் மற்றும் சுயஉதவிக்குழுவினர் பலர் கடன் வாங்கியிருப்பதாக கூறப்படுகிறது.

## கொடைக்கானலுக்கு படையெடுக்கும் சுற்றுலா பயணிகள்: மலைச்சாலையில் போக்குவரத்து நெரிசல்

**கொடைக்கானல், ஏப்.27:**

தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்டங்களில் வெப்பத்தின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமாக உள்ளது.



இந்நிலையில் பள்ளி, கல்லூரி தொடர் விடுமுறை அளிக்கப்பட்டு உள்ளது. மேலும் வெப்பத்தை சமாளிப்பதற்காக கொடைக்கானல் மலைப்பகுதிகளில் மாலை முதல் அதிகாலை வரை நிலவும் இதமான பருவநிலையை அனுபவிப்ப தற்காக, சுற்றுலா ப்ப யணிகள் வருகையானது நேற்று காலை முதல் அதிகரித்துள்ளது.

இதனால், கொடைக்கானல் செல்லும் மலைப்பாதையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

மாலைச்சாலையில் வாகனங்கள் அணிவகுத்து நிற்பதால், சுற்றுலா பயணிகள் கடும் அவதிக்கு உள்ளாகினர். போக்குவரத்து நெரிசலை சீர் செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுற்றுலா பயணிகள் மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## செல்வமகள் சேமிப்பு திட்டத்தில் பல லட்சம் மோசடி? அதிகாரிகள் விசாரணை

**கன்னியாகுமரி, ஏப்.27:**

பெண் குழந்தைகளின் எதிர்கால நலனுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் 'செல்வமகள் சேமிப்பு திட்டத்தின்' கீழ் ஏராளமான பொதுமக்கள் நாகர்கோவில் தலைமை தபால் நிலையத்தில் கணக்கு தொடங்கி பணம் செலுத்தி வருகின்றனர். இந்த நிலையில், கடந்த சில நாட்களாக வாடிக்கையாளர்கள் செலுத்திய பணம் அவர்களது கணக்கில் முறையாக வரவு வைக்கப்படவில்லை எனப் புகார் எழுந்தது.

தங்களது கணக்கு புத்தகத்தைச் சரிபார்க்க வந்த சில வாடிக்கையாளர்கள், தாங்கள் செலுத்திய தொகைக்கும் தபால் நிலைய கணினிப் பதிவேட்டில் உள்ள தொகைக்கும் வித்தியாசம் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். தபால் நிலைய ஊழியர்கள் சிலர், வாடிக்கையாளர்களிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு, கணக்கில் ஏற்றாமல் முறைகேடு செய்ததாகக் கூறப்படுகிறது.

இந்த விவகாரம் குறித்து பாதிக்கப்பட்டவர்கள் புகார் அளித்ததைத் தொடர்ந்து, தபால் துறை கண்காணிப்பாளர் தலைமையிலான அதிகாரிகள் குழு நாகர்கோவில் தலைமை தபால் நிலையத்தில் முகாமிட்டுள்ளது. கடந்த சில மாதங்களில் செல்வமகள் திட்டத்தின் கீழ் டெபாசிட் செய்யப்பட்ட அனைத்து ரசீதுகளும், கணினிப் பதிவுகளுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு வருகின்றன.

சந்தேகத்திற்குரிய பிரிவுகளில் பணியாற்றிய ஊழியர்களிடம் அதிகாரிகள் ரகசிய விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் பல லட்சம் ரூபாய் வரை மோசடி நடந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. முழுமையான தணிக்கைக்குப் பின்னரே சரியான தொகை எவ்வளவு என்பது தெரியவரும்.

தபால் நிலையத்தில் பாதுகாப்பாக இருக்கும் என நம்பி சேமித்த பணத்தில் கைவரிசை காட்டப்பட்டிருப்பது அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தபால் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## திருவண்ணாமலை: செங்கற்களை அடுக்கி வைத்து வழிபாடு செய்யும் ஆந்திர பக்தர்கள்

**திருவண்ணாமலை, ஏப்.27:**

திருவண்ணாமலையில் உலகப்புகழ்பெற்ற இந்து மத வழிபாட்டு தலமான அண்ணாமலையார் கோவில் உள்ளது. அண்ணாமலையார் கோவிலுக்கு தினமும் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து வழிபாடு நடத்துகின்றனர்.

இதனிடையே, அண்ணாமலையார் கோவிலுக்கு வரும் ஆந்திர மாநில பக்தர்களின் எண்ணிக்கை கடந்த சில மாதங்களாக தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்நிலையில், அண்ணாமலையார் கோவிலில் சமீப நாட்களாக செங்கற்களை அடுக்கிவைத்து வழிபாடு செய்யும் பழக்கம் அதிகரித்து வருகிறது. ஆந்திராவில் இருந்து வரும் பக்தர்கள் கோவில் வளாகத்தில் செங்கற்களை அடுக்கி வைத்து வழிபாடு செய்து வருகின்றனர். சொந்த வீடு கட்ட வேண்டி செங்கல் அடுக்கி வைத்து ஆந்திர பக்தர்கள் வழிபாடு செய்து வருகின்றனர். அண்ணாமலையார் கோவில் நிர்வாகத்தினர், பணியாளர்கள் செங்கற்களை அகற்றி வருகின்றனர்.

# கோவை, ஈரோடு, சேலம், தருமபுரியில் ஏப்.30, மே 1-ல் கனமழைக்கு வாய்ப்பு



**சென்னை, ஏப்.27:**
தமிழகத்தில் கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி உள்ளிட்ட மாவட்டங்களில் ஏப்.30, மே 1 தேதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வடக்கு உள் கர்நாடகா முதல் குமரிக்கடல் வரை தெற்கு உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில், ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் நாளை (ஏப்.26) ஓரிரு இடங்களிலும், 27-ம் தேதி மேற்கூறிய இடங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இதர தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 28, 29 தேதிகளில் நீலகிரி, கோவை, திருப்பூர் மற்றும் தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

30-ம் தேதி கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர் மாவட்டங்களில், மே 1-ம் தேதி மேற்கூறிய மாவட்டங்கள் மற்றும் நாமக்கல் மாவட்டத்திலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமானது முதல் கன மழையும், இதர தமிழக பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் நாளை முதல் 29-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். கடலோர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### சூர்யவன்ஷி சதம் வீண்: ராஜஸ்தானை வீழ்த்தி ஹைதராபாத் த்ரில் வெற்றி

**ஜெய்ப்பூர், ஏப்.27:**
ஐபிஎல் 2026 தொடரில் இன்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில், சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியைத் வீழ்த்தியது. சவாய் மான்சிங் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில், முதலில் பேட்டிங் செய்த ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு, இளம் வீரர் வைபவ் சூர்யவன்ஷி மிரட்டலான தொடக்கத்தைத் தந்தார். சன்ரைசர்ஸ் பந்துவீச்சை விளாசிய அவர், வெறும் 36 பந்துகளில் சதம் எடுத்து ஐபிஎல் வரலாற்றில் புதிய மைல்கல்லை எட்டினார். மொத்தம் 37 பந்துகளைச் சந்தித்த அவர், 12 சிக்ஸர்கள் மற்றும் 5 பவுண்டரிகளுடன் 103 ரன்கள் குவித்தார். இவரது அதிரடியால் ராஜஸ்தான் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 228 ரன்கள் என்ற இலக்கை எட்டியது.

229 ரன்கள் என்ற இலக்கை நோக்கி ஆடிய ஹைதராபாத் அணிக்கு இஷான் கிஷன் மற்றும் அபிஷேக் சர்மா ஜோடி வலுவான அடித்தளம் அமைத்தது. இஷான் கிஷன் 31 பந்துகளில் 74 ரன்களும், அபிஷேக் சர்மா 29 பந்துகளில் 57 ரன்களும் விளாசினர். நடுவரிசையில் ஹென்றிச் கிளாசென் (29) மற்றும் நிதிஷ் குமார் ரெட்டி (36) ஆகியோர் அதிரடி காட்ட, ஐதராபாத் அணியின் ரன் வேகம் குறையாமல் இருந்தது. இறுதியில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 18.3 ஓவர்களிலேயே 5 விக்கெட் இழப்பிற்கு 229 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. ராஜஸ்தான் தரப்பில் ஜோப்ரா ஆர்ச்சர் மற்றும் பிரிஜேஷ் சர்மா தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். சூர்யவன்ஷியின் சதம் ஒருபுறம் கொண்டாடப்பட்டாலும், ஹைதராபாத் அணியின் கூட்டு முயற்சி அவர்களுக்கு வெற்றியைத் தேடித்தந்தது.

### ஐபிஎல் வரலாற்றில்... - கே.எல்.ராகுல் புதிய சாதனை

ஐபிஎல் 2026 தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில், டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியின் நட்சத்திர வீரர் கேஎல் ராகுல் ஆட்டமிழக்காமல் 152 ரன்கள் குவித்து புதிய உலக சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் ஐபிஎல் வரலாற்றில் 150 ரன்கள் என்ற மைல்கல்லை எட்டிய முதல் இந்திய வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

அருண் ஜேட்லி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில், ஆரம்பம் முதலே பஞ்சாப் பந்துவீச்சை சிதறடித்த ராகுல், வெறும் 67 பந்துகளில் 152 ரன்கள் குவித்தார். இதில் 16 பவுண்டரிகள் மற்றும் 9 சிக்ஸர்கள் அடங்கும். 226 என்ற இமாலய ஸ்டிரைக் ரேட்டில் விளையாடிய அவர், தனது ஐபிஎல் பயணத்தின் அதிவேக சதத்தை (47 பந்துகளில்) இந்தப் போட்டியில் பதிவு செய்தார். ஐபிஎல் வரலாற்றில் இதுவரை கிறிஸ் கெய்ல் (175) மற்றும் பிரண்டன் மெக்கல்லம் (158) ஆகிய இரண்டு வெளிநாட்டு வீரர்கள் மட்டுமே 150 ரன்களைக் கடந்திருந்தனர். தற்போது அந்த வரிசையில் இணைந்துள்ள மூன்றாவது வீரர் மற்றும் முதல் இந்தியர் என்ற சாதனையை ராகுல் நிகழ்த்தியுள்ளார். இதற்கு முன் இந்திய வீரர்களில் அபிஷேக் சர்மா (141) மற்றும் ரிஷப் பன்ட் (128) ஆகியோரின் சாதனைகளை ராகுல் முறியடித்துள்ளார். ராகுலுடன் இணைந்து அபாரமாக ஆடிய நிதிஷ் ராணா 91 ரன்கள் குவித்தார். இவர்களின் 220 ரன்கள் பார்ட்னர்ஷிப் உதவியுடன் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி 20 ஓவர்களில் 264 என்ற மெகா இலக்கை எட்டியது. எனினும் டெல்லிக்கு எதிராக ஆடிய பஞ்சாப் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# சபரிமலை கோவில் அருகே ஹெலிகாப்டர் பறந்த விவகாரம்; விமானி மீது போலீசார் வழக்கு

**புதுடெல்லி, ஏப்.27:**
சபரிமலை அய்யப்பன் கோவிலுக்கு நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்து தரிசனம் பெற்றுச் செல்கின்றனர். இந்தக் கோவிலின் அருகே டிரோன்கள், ஹெலிகாப்டர்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதி அதி பாதுகாப்பு மிகுந்த இடமாகும்.

இந்த சூழலில் நேற்று முன்தினம் மதியம் சபரிமலை கோவிலின் அருகே ஹெலிகாப்டர் தாழ்வாக பறந்து பரபரப்பை ஏற்படுத்தியது. 4 முறை கோவிலை வட்டமிட்டு பறந்த இந்த ஹெலிகாப்டர் கடலோர காவல்படைக்கு சொந்தமானது என தெரியவந்தது.

இது தொடர்பாக உரிய விசாரணை நடத்த வேண்டும் என்று சபரிமலை சிறப்பு ஆணையர் கேரள ஐகோர்ட்டில் அறிக்கை தாக்கல் செய்தார். அதன் அடிப்படையில் உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய சபரிமலை பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளரான கூடுதல் போலீஸ் டி.ஜி.பி. ஸ்ரீஜித்துக்கு ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

இதற்கிடையில் காலநிலை மோசமாக இருந்ததால் ஹெலிகாப்டர் திசைமாறி சபரிமலை கோவில் அருகே சென்றதாக கடலோர காவல்படை தெரிவித்தது. இது தொடர்பாக பம்பை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இந்த சூழலில் ஐகோர்ட்டு உத்தரவுப்படி விசாரணை நடத்திய கூடுதல் டி.ஜி.பி. ஸ்ரீஜித், சபரிமலை சன்னிதானம் கோவிலின் மீது அனுமதியின்றி கடலோர காவல்படை ஹெலிகாப்டர் பறந்தது பெரும் தவறு என அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வானிலை காரணமாக ஹெலிகாப்டர் தாழ்வாக பறந்தது என்ற கடலோர காவல்படையின் விளக்கம் திருப்திகரமாக இல்லை என்றும், இது ஒரு ஆபத்தான செயல் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது அறிக்கை சபரிமலை சிறப்பு ஆணையரிடம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த சூழலில் பொதுப் பாதுகாப்பை பாதிக்கும் வகையில் ஹெலிகாப்டரை இயக்கியதாக விமானி மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# கைதிகளை அழைத்துச் செல்லும் போலீஸ் வாகனங்களில் சிசிடிவி கேமராக்கள்



**சென்னை, ஏப்.27:**
சென்னையில் கொலை, கொள்ளை, வழிப்பறி உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்கள், நீதிமன்ற உத்தரவுப் படி புழல், சைதாப்பேட்டை உள்ளிட்ட பல்வேறு சிறைகளில் அடைக்கப்படுகின்றனர்.

மேலும், அவர்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றங்களில் நடைபெறும்போது, காவல் வாகனங்களில் அழைத்துச் செல்லப்பட்டு ஆஜர்படுத்தப்படுகின்றனர். பின்னர், அதே வாகனத்தில் அழைத்து வந்து மீண்டும் சிறையில் அடைக்கப்படுகின்றனர். பல நேரங்களில் வெளி மாவட்ட நீதிமன்றங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

சில நேரங்களில், பயங்கர ரவுடிகள் மற்றும் கொடூர குற்றவாளிகள் வாகனங்களில் நீதிமன்றத்துக்கு செல்லும் போது அல்லது திரும்பி வரும் போது உடன்வரும் போலீசாருடன் வீண் தகராறில் ஈடுபடுகின்றனர்.

சிலசமயம் போலீசார் தாக்கப்படுகின்றனர். ஆனால், இதன் உண்மைத் தன்மை வெளிவருவது இல்லை. யார் மீது தவறு? தாக்குதல் நடந்ததற்கு என்ன காரணம் என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

மேலும், நீதிமன்றத்தில் விசாரணை முடிந்து வாகனத்தில் சிறைக்கு அழைத்துச் செல்லும்போது கைதிகளின் உறவினர்கள் கஞ்சா பொட்டலங்களை காவல் வாகனங்களில் வீசும் சம்பவங்களும் நடைபெறுகின்றன.

இத்தகைய பிரச்சினைகளைத் தடுக்க போலீசார் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆனால், எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை.

இதையடுத்து, சிறைத்துறை அதிகாரிகள் மற்றும் சென்னை போலீஸ் அதிகாரிகள் ஒருங்கிணைந்து ஆலோசனை நடத்தியதில், கைதிகளை அழைத்துச் செல்லும் காவல் வாகனங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, முதல் கட்டமாக சென்னையில் சிறைக் கைதிகளை அழைத்துச் செல்லும் 50-க்கும் மேற்பட்ட காவல் வாகனங்களில் நவீன சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

# தமிழகத்தில் அடுத்த மாதம் முதல் மின் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு: மத்திய மின்துறை எச்சரிக்கை




**சென்னை, ஏப்.27:**
தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய தென் மாநிலங்களுக்கு மின் தேவை எவ்வளவு என்ற விவரங்களை மத்திய மின்துறை வெளியிட்டுள்ளது. அதாவது, கடந்த (2025) ஆண்டு மார்ச் மாதத்துடன் இந்த ஆண்டு மார்ச் மாதத்தை ஒப்பிட்டு இந்த மின் தேவை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தென் மாநிலங்களின் தினசரி மின் தேவை 69 ஆயிரத்து 934 மெகாவாட்டில் இருந்து 73 ஆயிரத்து 805 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. குறிப்பாக, தமிழகத்தின் மின் தேவை 19 ஆயிரத்து 679 மெகாவாட்டில் இருந்து 19 ஆயிரத்து 822 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது. அதாவது, தென் மாநிலங்களிலேயே மின் தேவையில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. தமிழத்தின் மின் தேவை தினமும் சராசரியாக 16 ஆயிரம் மெகாவாட்டாக உள்ளது. இது கோடை காலத்தில் மேலும் அதிகரித்துள்ளது. கடந்த 21-ந் தேதி நிலவரப்படி, தமிழகத்தின் மின் தேவை புதிய உச்சம் தொட்டு 21 ஆயிரத்து 60 மெகாவாட்டாக இருந்தது. இந்த நிலையில், தமிழகத்தில் அடுத்த மாதம் (மே) முதல் மாலையில் மின் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளதாக, தமிழக மின் வாரியத்தை மத்திய மின்துறை எச்சரித்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு மின் வாரிய அதிகாரி ஒருவர் கூறும்போது, "மின் தேவை எவ்வளவு இருக்கும், எவ்வளவு மின்சாரம் கிடைக்கும், பற்றாக்குறை எவ்வளவு ஏற்படும் என்பதை முன்கூட்டியே மதிப்பீடு செய்து, பற்றாக்குறையை சமாளிக்க, மின் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

## க்ரைம் கார்னர்

### போதைப்பொருள் கடத்தல்: பாகிஸ்தானியர்கள் 6 பேருக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை

**காந்திநகர் ஏப்.27:**
குஜராத் கடல் பகுதியில் சுமார் 385 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்களைக் கடத்தி வந்த 6 பாகிஸ்தானியர்களுக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து குஜராத் சிறப்பு நீதிமன்றம் அதிரடி உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2021-ஆம் ஆண்டு, குஜராத் பயங்கரவாத எதிர்ப்புப் படை (ATS) மற்றும் இந்தியக் கடலோரக் காவல் படை ஆகியவை இணைந்து நடுக்கடலில் ரகசியத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டன. அப்போது சந்தேகத்திற்கு இடமான முறையில் வந்த பாகிஸ்தான் படகை வழிமறித்துச் சோதனையிட்டதில், சுமார் 76.936 கிலோ ஹெராயின் போதைப்பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் சர்வதேச சந்தை மதிப்பு 385 கோடி ரூபாய் ஆகும்.

இந்தக் கடத்தல் தொடர்பாக படகில் இருந்த 6 பாகிஸ்தான் நாட்டினரைக் காவல்துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர். இது தொடர்பான வழக்கு குஜராத் மாநிலம் புஜ் நகரில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்நிலையில், நேற்று இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, குற்றம் சாட்டப்பட்ட 6 பாகிஸ்தானியர்களுக்கும் தலா 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு அளித்துள்ளார்.

### போலீஸ் இன்ஸ்பெக்டரை இரும்பு கம்பியால் தாக்கிய வாலிபர் கைது

**தஞ்சாவூர்,ஏப்.27:**
தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி மையத்தில் நேற்று முன்தினம் போலீஸ்காரர் ஒருவர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தார். அவரிடம் வாலிபர்கள் சிலர் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் கீதா மங்கேசை தகாத வார்த்தைகளால் திட்டி தகராறு செய்ததாக தெரிகிறது. இதுகுறித்து தகவலறிந்த திருவோணம் போலீஸ் இன்ஸ்பெக்டர் முத்து அங்கே விரைந்து சென்றார். அப்போது வாக்குச்சாவடி மையத்தில் தகராறில் ஈடுபட்டுக்கொண்டிருந்த செல்வேஷ் (வயது 30), போலீஸ் இன்ஸ்பெக்டர் முத்துவை இரும்புக் கம்பியால் தாக்கியதாக கூறப்படுகிறது. இதையடுத்து அவரை போலீசார் கைது செய்தனர்

### நெல்லையில் கொலை வழக்கு குற்றவாளி குண்டர் சட்டத்தில் கைது

**நெல்லை, ஏப்.27:**
திருநெல்வேலி மாநகரம், பேட்டை, பாண்டியாபுரம் தெற்கு, சுந்தர விநாயகர் கோவில் தெருவைச் சேர்ந்த வெள்ளபாண்டி மகன் மணி (வயது 38) என்பவர், நெல்லை மாநகர பகுதியில் கொலை வழக்கில் சம்மந்தப்பட்டு பொது ஒழுங்கு பராமரிப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் செயலில் ஈடுபட்டு வந்தார். அதைத் தொடர்ந்து பேட்டை காவல் நிலைய இன்ஸ்பெக்டரின் பரிந்துரையின் பேரில் திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனரின் உத்தரவுப்படி இன்று மணி என்பவர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டார்.

### கூத்தாண்டவர் கோவிலில் 23 சவரன் நகை திருட்டு போலீஸ் தீவிர விசாரணை

**கள்ளக்குறிச்சி, ஏப்.27:**
கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே உள்ள புகழ்பெற்ற கூவாகம் கூத்தாண்டவர் கோயிலில், மூலவர் சிலைக்கு அணிவிக்கப்பட்டிருந்த 23 சவரன் தங்க நகை திருடப்பட்டுள்ளது. சுவாமி கும்பிடுவது போல் கோவிலுக்குள் சென்று யாரேனும் நகையை திருடியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் போலீசார் விசாரணை நடத்திவருகின்றனர். வருகின்ற செவ்வாய்க்கிழமை அன்று உலகப் புகழ்பெற்ற கூவாகம் திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருநங்கைகள் தாலி கட்டும் திருவிழா நடைபெற உள்ள நிலையில், இச்சம்பவம் கோயிலுக்கு வந்த பக்தர்களிடையே அதிர்ச்சி ஏற்படுத்தியுள்ளது.

## வணிகச் செய்திகள்

### தமிழகத்தில் மயோனைஸ் மீதான தடை மேலும் ஓராண்டுக்கு நீட்டிப்பு

**சென்னை, ஏப்.27:**
பச்சை முட்டையிலிருந்து தயாரிக்கப்படும் மயோனைஸுக்கு விதிக்கப்பட்ட தடையை, மேலும் ஓராண்டு காலத்துக்கு நீட்டித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசின் உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் ஆர்.லால்வேனா வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பச்சை முட்டையிலிருந்து தயாரிக்கப்படும் மயோனைஸ் எளிதில் பாக்டீரியாத் தொற்றுக்கு உள்ளாகக் கூடிய அதிக ஆபத்துள்ளதால், கடந்தாண்டு ஏப்ரல் மாதம் அதற்கு தமிழக அரசு ஓராண்டு தடை விதித்தது.

முறையற்ற தயாரிப்பு மற்றும் சேமிப்பு முறைகளால் பச்சை முட்டையிலிருந்து தயாரிக்கப்படும் மயோனைஸில், சால்மோனெல்லா டைபிமிரியம், சால்மோனெல்லா என்டிரிடிடிஸ், எஸ்கெரிச்சியா கோலி மற்றும் லிஸ்டீரியா மோனோசைட்டோஜென்ஸ் போன்ற தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்கள் உருவாக வாய்ப்புள்ளது.

இதனால் தமிழகம் முழுவதும் உள்ள உணவகங்கள், கேட்டரிங் சேவைகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் உட்பட அனைத்து உணவு நிறுவனங்களும் பச்சை முட்டை அடிப்படையிலான மயோனைஸ் பயன்படுத்த இந்த தடை விதிக்கப்பட்டது. இந்நிலையில், இந்த தடையை மேலும் ஓராண்டு காலத்துக்கு நீட்டித்து தமிழக அரசு தற்போது உத்தரவிட்டுள்ளது.

# 7 எம்.பிக்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்: மாநிலங்களவை தலைவருக்கு ஆம் ஆத்மி கடிதம்

புதுடெல்லி, ஏப்.27:

ஆம் ஆத்மி கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கும், அந்தக் கட்சியின் மேல்சபை துணைத் தலைவர் ராகவ் சத்தாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு நிலவி வந்தது. இதனால் ஆம் ஆத்மி மேல்சபை எம்.பி.க்கள் குழு துணைத் தலைவர் பதவியில் இருந்து ராகவ் சத்தா சமீபத்தில் நீக்கப்பட்டார்.




இதைத் தொடர்ந்து கட்சி தலைமையின் மீது அவர் தொடர்ந்து குற்றச்சாட்டுகளை சுமத்தி வந்தார். இந்த நிலையில் ராகவ் சத்தா, சந்தீப் பாடக், அசோக் மித்தல், சுவாதி மாலிவால், ஹர்பஜன் சிங், ராஜேந்திர குப்தா, விக்ரம் ஷைனி ஆகிய 7 மேல்சபை எம்.பி.க்கள் ஆம் ஆத்மி கட்சியில் இருந்து திடீரென விலகினர். அவர்கள் பா.ஜ.க.வில் இணைகிறார்கள்.

மேல்சபையில் ஆம் ஆத்மி கட்சிக்கு 10 எம்.பி.க்கள் உள்ளனர். அதில் 3-ல் இரண்டு பங்கு எம்.பி.க்கள் கட்சியில் இருந்து விலகுவது தொடர்பான கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர். கட்சியில் இருந்து விலகுவது தொடர்பான ஆவணத்தை மேல்சபை தலைவரிடம் அவர்கள் அளித்துள்ளனர். இந்த தகவலை ராகவ் சத்தா தெரிவித்தார்.7 மேல்சபை எம்.பி.க்களும் பா.ஜ.க.வில் இணைவதற்கான கடிதம் மேல்சபை தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனிடம் அளிக்கப்பட்டது.

இதனிடையே, ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர் சஞ்சய் சிங் மாநிலங்களவை தலைவருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில், கட்சியை விட்டு வெளியேறிய 7 எம்.பி.க்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்.

கட்சித் தாவல் தடுப்பு சட்டம் தெளிவாகக் கூறுவது என்னவெனில், மாநிலங்களவை மற்றும் மக்களவையில் ஏற்பட முடியாது. எனவே, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருந்தாலும் கூட சட்ட ரீதியான அங்கீகாரம் எதுவும் கிடைக்காது" என்று தெரிவித்துள்ளார்.

## தெலுங்கானாவில் புதிய கட்சியை தொடங்கினார் கவிதா

ஐதராபாத், ஏப்.27:

தெலுங்கானா மாநில முன்னாள் முதல்-மந்திரியும், பாரத ராஷ்டிர சமிதி(பி.ஆர்.எஸ்.) கட்சி தலைவருமான சந்திரசேகர ராவின் மகள் கவிதா. இவர் முன்னாள் எம்.பி. ஆவார். காலேஸ்வரம் நீர்ப்பாசன திட்டத்தில், தனது தந்தையின் நற்பெயரை கெடுத்ததாக தனது உறவினர்கள் ஹரிஷ் ராவ், சந்தோஷ் குமார் ஆகியோர் மீது கவிதா குற்றம் சாட்டியதையடுத்து அவர் பாரத ராஷ்டிர சமிதியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார்.

பின்னர், தனது எம்.எல்.சி. பதவியை ராஜினாமா செய்த கவிதா, 'தெலுங்கானா ஜக்ருதி' என்ற கலாசார அமைப்பை தொடங்கி, பொதுப்பிரச்சினைகளில் கவனம் செலுத்தி வருகிறார். இதற்கிடையில் தெலுங்கானா ஜக்ருதியை அரசியல் கட்சியாக மாற்றுவது குறித்து முன்னாள் தேர்தல் வியூக நிபுணர் பிரசாந்த் கிஷோருடன் கவிதா ஆலோசனை நடத்தியதாக தகவல்கள் வெளியாகின.

சமீபத்தில், தெலுங்கானா வின் பிரச்சினைகளை மையமாக கொண்டு இயங்கும் வகையில் இரு அரசியல் கட்சியை தொடங்கப்போவதாக கவிதா அறிவித்தர். இதன்படி, வரும் ஏப்ரல் 25-ந்தேதி காலை 10 மணிக்கு ஐதராபாத் அருகே முனீர்பாத் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சியில் தனது புதிய கட்சியின் அதிகாரப்பூர்வ பெயர் மற்றும் கொடியை அறிமுகம் செய்ய உள்ளதாக கவிதா தெரிவித்துள்ளார். இந்த நிலையில், ஐதராபாத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் "தெலுங்கானா ராஷ்ட்ர சேனா" (TRS) என்ற பெயரில் புதிய கட்சியை கவிதா இன்று தொடங்கினார். சகோதரர் கே.டி.ராமாராவ் ஆதரவாளர்களுக்கு சவால் விடுக்கும் வகையில் புதிய கட்சியை கவிதா தொடங்கி உள்ளார்.

## விஜயவாடா: வெயிலின் தாக்கத்தை சமாளிக்க நூதன முயற்சியில் இறங்கிய மாநகராட்சி



அமராவதி, ஏப்.27:

ஆந்திராவில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பகல் நேரங்களில் மக்கள் வெளியே நடமாட முடியாத அளவுக்கு வெப்பம் வாட்டி வருகிறது. வெப்பத்தில் இருந்து தங்களை தற்காத்துக்கொள்ள மக்கள் இளநீர், குளிர்பான கடைகளை நாடி வருகின்றனர்.

இந்த நிலையில் ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்ததை தொடர்ந்து, வெப்பத்தின் கொடுமையை சமாளிக்கவும், சாலைகளின் வெப்பத்தை குறைக்கவும் ஆண்டி-ஸ்மோக் கன் மூலம் தண்ணீர் தெளிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விஜயவாடா மாநகராட்சி, கடும் கோடை வெயிலில் இருந்து பொதுமக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தண்ணீர் தெளிக்கபட்டது இதனால் மக்கள் சாலையில் சிரமமின்றி சென்றனர். சாலைகள் மற்றும் காற்றில் உள்ள வெப்பத்தை குறைத்து, வெப்பத்தின் தாக்கத்திலிருந்து நிவாரணம் அளிப்பதே இதன் நோக்கமாக கருதபடுகிறது.

## "ஆம் ஆத்மி சரியான திசையில் சென்றிருந்தால்..." 7 எம்பிக்கள் விலகல் பற்றி ஹசாரே கருத்து

புதுடெல்லி, ஏப்.27:

ஆம் ஆத்மி கட்சி சரியான திசையில் சென்றிருந்தால் ராகவ் சத்தா உள்ளிட்ட 7 எம்பிக்கள் கட்சியை விட்டு விலகி இருக்க மாட்டார்கள் என்று சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே தெரிவித்துள்ளார்.



மகாராஷ்டிராவின் அஹில்யா நகர் மாவட்டத்தில் செய்தியாளர்களிடம் பேசிய சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே, "ஜனநாயகத்தில் அரசியல் முடிவுகளை எடுக்கும் உரிமை ஒவ்வொரு நபருக்கும் உண்டு. அவர்கள் ஏன் கட்சியை விட்டு வெளியேற வேண்டும் என்று முடிவெடுக்கிறார்கள் என்பது குறித்து கட்சித் தலைமை (அரவிந்த் கேஜ்ரிவால்) ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

ஜனநாயகத்தில் கருத்து தெரிவிக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு. அவர்கள் ஏதோ சிரமத்தை எதிர்கொண்டிருக்க வேண்டும். அதனால்தான் அவர்கள் வெளியேறி இருக்கிறார்கள்.

கட்சித் தலைமையின் தவறுதான் இதற்குக் காரணம். கட்சி சரியான திசையில் சென்றிருந்தால் அவர்கள் கட்சியை விட்டு விலகியிருக்க மாட்டார்கள். கட்சியை விட்டு விலகும் அவர்களின் முடிவுக்குப் பின்னால் உள்ளார்ந்த காரணங்கள் இருக்கும்.

அந்தக் காரணங்களை பரந்த ஜனநாயக சூழலின் பின்னணியில் பார்க்க வேண்டும். எங்கிருந்து வெளியேற வேண்டும், எங்கே செல்ல வேண்டும் என்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட முடிவு" என தெரிவித்தார்.

## வீட்டு வேலை செய்வதாக கூறி நுழைந்த பெண்... முதியவருக்கு மயக்க மருந்து கொடுத்து கொலை

காந்திநகர், ஏப்.27:

குஜராத் மாநிலம் அகமதாபாத் பகுதியில் உள்ள தரியாபூர் பகுதியில் 81 வயதான அப்துல்பாய் இஸ்மாயில் என்பவர் தனது மனைவியுடன் வசித்துவந்தார். இந்நிலையில், சம்பவத்தன்று அப்துல்பாய் வீட்டிற்கு வந்த லதாபென்(வயது 55) என்ற பெண், தனக்கு வேலை வேண்டும் எனவும், சமையல் மற்றும் வீட்டு வேலைகளை செய்து கொடுப்பதாகவும் கூறியுள்ளார்.



அந்த பெண்ணை நம்பி அப்துல்பாய் அவரை வீட்டிற்குள் நுழையவிட்டுள்ளார். வீட்டிற்குள் நுழைந்த லதாபென், வீட்டு வேலைகளை செய்வதுபோல் நடித்துள்ளார். சிறிது நேரம் கழித்து, வீட்டில் இருந்த முதியவர்கள் இருவருக்கும் அவர் லஸ்ஸி போட்டுக் கொடுத்துள்ளார். அதில் மயக்க மருந்தை லதாபென் கலந்துள்ளார். அந்த லஸ்ஸியை குடித்த அப்துல்பாயும், அவரது மனைவியும் சிறிது நேரத்தில் மயக்கமடைந்தனர். இதையடுத்து வீட்டில் இருந்த பணம், நகைகள் உள்ளிட்டவற்றை திருடிக்கொண்டு லதாபென் அங்கிருந்து தப்பியோடினார். மயக்கமடைந்து கிடந்த முதியவர்கள் இருவரையும் அக்கம்பக்கத்தினர் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். முதியவர் அப்துல்பாய்க்கு ஏற்கனவே பல்வேறு உடல்நல பிரச்சினைகள் இருந்து வந்த நிலையில், மயக்க மருந்தை அளவுக்கு அதிகமாக உட்கொண்டதால், அவர் சிகிச்சை பலனளிக்காமல் பரிதாபமாக உயிரிழந்தார். அவரது மனைவி மருத்துவ மனைவியில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

இதனிடையே, இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், சி.சி.டி.வி. காட்சிகளை வைத்து குற்றவாளி லதாபென்னை தேடிப்பிடித்து அதிரடியாக கைது செய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அவர் மீது ஏற்கனவே திருட்டு, சட்டவிரோத சூதாட்டம் உள்ளிட்ட பல்வேறு குற்றங்கள் தொடர்பான வழக்குகள் பதிவாகி இருந்தது தெரியவந்தது. மேலும், தனியாக வசித்து வரும் முதியவர்களை குறிவைத்து பணம், நகை உள்ளிட்டவற்றை திருடுவதை அவர் வாடிக்கையாக கொண்டுள்ளார் என போலீசார் தெரிவித்தனர். லதாபென் மீது கொலை வழக்கு பதிவு செய்த போலீசார், அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## திருப்பதி ஏழுமலையானுக்கு 753 கிராம் எடையில் தங்க ஆபரணங்கள் காணிக்கை

திருப்பதி, ஏப்.27:

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருசை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை மற்றும் விசேஷ தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். ஒருநாள் உண்டியல் காணிக்கை மட்டும் ரூ.3 முதல் 4 கோடி பக்தர்கள் வழங்குவர்.

இந்த நிலையில், பெங்களூரைச் சேர்ந்த பக்தர் எம். மகாதேவம்மா என்பவர் திருப்பதி ஏழுமலையானுக்கு 753 கிராம் எடையில் ரூ.94 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பிலான 7 தங்க ஆபரணங்களை காணிக்கையாக வழங்கினார்.

கோவிலில் உள்ள ரெங்கநாயக்கர் மண்டபத்தில் அந்தத் தங்க ஆபரணங் களை கோவில் செயல் அலுவலர் முத்தாடா. ரவிச்சந்திரா. கூடுதல் அதிகாரி வெங்கையா சவுத்ரி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

## கேரளாவில் கடும் வெப்பம்: ஊரடங்கு போன்ற முன்னெச்சரிக்கையை கடைபிடிக்க அறிவுறுத்தல்

திருவனந்தபுரம், ஏப்.27:

நாட்டின் பல்வேறு பகுதிகளில் தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. தமிழகத்தின் அண்டை மாநிலமான கேரளத்தில் கடந்த சில தினங்களாக கடுமையான வெப்பம் நிலவி வரும் நிலையில், வெப்பநிலை மேலும் உயரக்கூடும் என பேரிடர் மேலாண்மை ஆணயம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் 38 முதல் 40 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் உயரக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இயல்பை விட அதிக வெப்பநிலை நீடிப்பதால் பகல் நேரங்களில் மக்கள் ஊரடங்கு போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைபிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்தியாவசிய தேவைகளை தவிர்த்து, பிற காரணங்களுக்காக பொதுமக்கள் வெளியே செல்வதை முடிந்தவரை தவிர்க்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதே போல், காலை 11 மணி முதல் 3 மணி வரை பொதுமக்கள் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும் என சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.

## இந்திய வானிலை மைய இணையத்தில் முதன்மை மொழியாக இந்தி மாற்றம்




புதுடெல்லி, ஏப்.27:

தமிழகத்தில் இந்தி திணிப்பு குறித்து அவ்வப்போது எதிர்கட்சிகள் சார்பில் குரல்கள் எழுப்பப்பட்டு வரும் நிலையில், மத்திய அரசின் திட்டங்கள், மற்றும் வலைதளங்களில் இந்தி மொழியில் மாற்றம் செய்யப்படுவது தொடர்ந்து வருகிறது. அந்த வகையில் தற்போது இந்திய வானிலை ஆய்வு மையத்தின் முதன்மை மொழி இந்திக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த வரிசையில் தற்போது இந்திய வானிலை ஆய்வு மையத்தின் முதன்மை மொழி இந்திக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது,

இந்த இணையதளத்தின் முதன்மை மொழியாக ஆங்கிலம் இருந்த நிலையில், தற்போது இந்திக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது, முதலில் இணையதளத்தின் உள்ளே செல்லும்போது. இந்தியில் இருக்கும். அதன்பிறகு தேவைப்பட்டால் ஆங்கிலத்தில் மாற்றிக்கொள்ளும் வசதி உள்ளது. வானிலை மையத்தின் முதன்மை மொழி இந்திக்கு மாற்றப்பட்டு உள்ள இந்த திடீர் நிகழ்வு தென் மாநிலங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## கோடை வெப்பத்தை தணிக்க போக்குவரத்து காவலர்களுக்கு குளிரூட்டும் ஜாக்கெட் - குஜராத்தில் புதிய முயற்சி




காந்திநகர், ஏப்.27:

நாட்டின் பல்வேறு பகுதிகளில் தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில், நாள் முழுவதும் வெயிலில் நின்று பணியாற்றும் போக்குவரத்து காவல்துறையினரை வெயிலின் தாக்கத்தில் இருந்து காப்பதற்காக குஜராத்தில் புதிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, பணியில் இருக்கும்போது, கடுமையான கோடை வெப்பத்தைச் சமாளிக்க போக்குவரத்து காவலர்களுக்கு உதவும் வகையில், அகமதாபாத் போக்குவரத்து காவல்துறை உயர் தொழில்நுட்ப குளிரூட்டும் ஜாக்கெட்டுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் பேட்டரியால் இயங்கும் மின்விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த ஜாக்கெட்டுகள் மிகவும் பயனுள்ளதாகவும், உடல் வெப்பநிலையைக் குறைத்து, வெப்பத்தால் ஏற்படும் உடல் சோர்வைப் போக்க உதவுவதாகவும் போக்குவரத்து காவலர்கள் தெரிவிக்கின்றனர்.

# ஈரான் போர்: பெட்ரோல் விலை கடுமையாக உயரும்: ராகுல் காந்தி

புதுடெல்லி, ஏப்.27:

ஈரான் போரால் எண்ணெய் மற்றும் பெட்ரோலின் விலை கடுமையாக உயரும் என ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.





மேற்கு வங்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தலை இரண்டு கட்டங்களாக நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்ட நிலையில், முதல்கட்ட வாக்குப்பதிவு ஏப்ரல் 23 அன்று நடைபெற்றது.

இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு வரும் ஏப்ரல் 29 அன்று நடைபெற உள்ளது. கடைசி கட்ட தேர்தல் பிரசாரம் வரும் ஏப்ரல் 27 அன்று மாலை 6 மணியுடன் நிறைவு பெற உள்ளது.

இந்த நிலையில், மேற்கு வங்கம், தெற்கு 24 பர்கானாஸில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல் காந்தி பேசியதாவது:

"பாஜகவும், பிரதமர் மோடியும் சேர்ந்து ஜனநாயகத்தையும், அரசியலமைப்பையும் தாக்குகின்றனர். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) மூலம் அவர்கள் வாக்குகளைத் திருட முயற்சிக்கின்றனர். இதை அவர்கள் நாடு முழுவதும் செய்கின்றனர். மகாராஷ்டிரம், ஹரியாணா மற்றும் மத்தியப் பிரதேசத்தில் ஏற்கெனவே, இதுபோன்ற வழிகளில் அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர். அதேபோல, மேற்கு வங்கத்திலும் வெற்றி பெற முயற்சிக்கின்றனர்.

நாட்டின் விவசாயிகள் விற்கப்பட்டுவிட்டனர். சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் விற்கப்பட்டுவிட்டன. நம்முடைய தரவுகள் விற்கப்பட்டுவிட்டன. நாட்டின் ஒட்டுமொத்த எரிசக்தி பாதுகாப்பும் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

உங்களுக்குத் தெரியுமா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அமரிக்காவைக் கலந்தாலோசிக்காமல் இந்தியா வேறு யாரிடமும் எண்ணெய் வாங்க முடியாது.

ஈரான், ரஷியா, சௌதி அரேபியா மற்றும் வெனிசுவேலா போன்ற எந்த நாடுகளிடமிருந்து இந்தியா எண்ணெய் வாங்க வேண்டுமென்றாலும் முதலில் அமெரிக்காவிடம் அனுமதி வாங்க வேண்டும். ஈரானில் போர் நடைபெற்று வருகிறது.

வரும் மாதங்களில் எண்ணெய் மற்றும் பெட்ரோல் விலை கடுமையாக உயரும் என்பதை நீங்கள் காண்பீர்கள்" என்று பேசினார்.

# இந்திய சந்தையில் தடம் பதிக்கும் நியூசிலாந்து - பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸ்ன் பெருமிதம்




**வெல்லிங்டன், ஏப்.27:**

இந்தியாவிற்கு வருகை தந்த நியூசிலாந்தின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு துறை மந்திரி டாட் மெக்லேவை இந்திய வர்த்தகத்துறை மந்திரி பியூஷ் கோயல் வரவேற்றார். இரு தலைவர்களின் முன்னிலையிலும், இந்தியா மற்றும் நியூசிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நாளை கையெழுத்தாக உள்ளது. இது தொடர்பாக நியூசிலாந்து நாட்டின் பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸ்ன் ஒரு வீடியோவில் கூறியதாவது:-

இந்தியாவுடன் ஒரு முக்கியமான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறோம். இந்த ஒப்பந்தம் மூலம் நம் நாட்டின் ஏற்றுமதியாளர்களுக்காக ஒரு பெரிய சந்தை திறக்கப்படும். இது போன்ற ஒப்பந்தம் ஒரு தலைமுறையில் ஒரு முறை மட்டுமே நடக்கும். இதனால் நமது ஏற்றுமதியாளர்கள் 1.4 பில்லியன் கோடி மக்களையும் அவர்களின் பொருளாதாரத்தை அணுகவும் இது ஒரு அரிய வாய்ப்பு. இது உலகத்தின் மூன்றாவது பெரிய ஒப்பந்தம் ஆகும். இது நம் நாட்டின் ஏற்றுமதியாளர்களை மற்ற போட்டியாளர்களுக்கு சரிசமமாக அல்லது அதற்கும் மேல் சிறந்த வழியை அமைத்து கொடுக்கிறது.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# இங்கிலாந்து: போலீஸ் நிலையம் அருகே கார் குண்டு வெடிப்பு

**லண்டன், ஏப்.27:**

இங்கிலாந்து நாட்டின் தெற்கு அயர்லாந்து மாகாணம் டன்முரி நகரில் போலீஸ் நிலையம் உள்ளது. இந்த போலீஸ் நிலையம் அருகே இன்று நிறுத்தப்பட்டிருந்த கார் திடீரென வெடித்து சிதறியது.

உடனடியாக விரைந்து சென்ற போலீசார், பாதுகாப்புப்படையினர் குண்டு வெடிப்பு நடைபெற்ற பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

பின்னர் விசாரணையை தொடங்கிய போலீசார், கார் குண்டு வெடிப்பு தாக்குதல் நடத்தியது யார்? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் இது பயங்கரவாத தாக்குதல் என்று தெரியவந்துள்ளது. அதேவேளை, கார் குண்டு வெடிப்பு தாக்குதலில் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று தகவல் வெளியாகியுள்ளது.

# ஐக்கிய அரபு அமீரக அதிபருடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் சந்திப்பு




**அபுதாபி, ஏப். 27:**

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் அரசு முறை பயணமாக ஐக்கிய அரபு அமீரகம் சென்றுள்ளார். அவர் நேற்று ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் நயத் அல் நயானை சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது இரு நாட்டு உறவு, மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் பதற்றம், இரு நாட்டு பாதுகாப்பு உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து அஜித் தோவலும், ஷேக் முகமது பின் நயத்தும் ஆலோசனை நடத்தினர். முன்னதாக அஜித் தோவல் கடந்த 20ம் தேதி சவுதி அரேபியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# "அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பேச்சுவார்த்தை நடத்த முடியாது" - ஈரான் அதிபர்

**தெஹ்ரான், ஏப்.27:**



அழுத்தம், அச்சுறுத்தல்கள் மற்றும் தடைகளுக்கு மத்தியில் ஈரான் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாது என்று அந்நாட்டின் அதிபர் மசூத் பெசஷ்கியான் தெரிவித்துள்ளார்.

மெஹர் செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்புடனான தனது தொலைபேசி உரையாடலின் போது, பேச்சுவார்த்தைகள் மற்றும் போர்நிறுத்தக் காலம் ஆகிய இரண்டின் போதும் அமெரிக்காவின் தொடர்ச்சியான மீறல்களையும், அச்சுறுத்தும் நடவடிக்கைகளையும் ஈரான் அதிபர் பெசஷ்கியான் விமர்சித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள கடல்சார் கட்டுப்பாடுகள் போர் நிறுத்தப் புரிந்துணர்வுகளின் தெளிவான விதிமீறல் என்றும், அவை ஐக்கிய நாடுகள் சாசனத்திற்கு முரணானவை என்றும் ஈரான் அதிபர் கூறினார். இத்தகைய அச்சுறுத்தும் நடவடிக்கைகள் என்பது அமெரிக்காவின் ராஜதந்திர செயல்முறைகள் குறித்த சந்தேகங்களை அதிகரித்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை பேணுவதில் ஈரானின் உறுதியை வலியுறுத்திய பெசஷ்கியான், அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே மீண்டும் ஒரு போர் ஏற்பட்டால், அது பிராந்திய மற்றும் உலகளாவிய ஸ்திரத்தன்மை மீது பெரும் விளைவுகளை உருவாக்கும் என எச்சரித்தார்.

நல்லுறவு மற்றும் பரஸ்பர மரியாதையின் அடிப்படையில், பாரசீக வளைகுடாவின் தெற்குக் கரையோர நாடுகள் உட்பட அனைத்து அண்டை நாடுகளுடனும் உறவுகளைக் கட்டியெழுப்பவும், வலுப்படுத்தவும் ஈரான் உறுதியுடன் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். வெளி தலையீடுகள் இன்றி, பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்த நாடுகள் கூட்டாகச் செயல்படும் என்றும் மசூத் பெசஷ்கியான் நம்பிக்கை தெரிவித்தார்.

# வடகொரியாவில் இருந்து தப்பிக்க மீனவர்கள் போல் உளவு பார்த்து 10 ஆண்டு திட்டமிட்டு 2 மணி நேரத்தில் தப்பிய குடும்பம்

**சியோல், ஏப்.27:**

வடகொரியாவைச் சேர்ந்த 9 பேர் கொண்ட ஒரு குடும்பம் 10 ஆண்டுகள் திட்டமிட்டு, 2 மணி நேரத்தில் தப்பி தென் கொரியா சென்றுள்ளது.

வட கொரியாவில் அதிபர் கிம் ஜாங் உன் தலைமையில் அடக்குமுறை கம்யூனிச ஆட்சி நடைபெறுகிறது. இங்குள்ள மக்களுக்கு போதிய சுதந்திரம் இல்லை. அங்கு வறுமை, பஞ்சம் நிலவுகிறது. அரசியல் ஒடுக்குமுறை மற்றும் அடிப்படை மனித உரிமைகள் இல்லாமல் இருப்பதால் இங்குள்ள மக்கள் தென் கொரியாவுக்கு தப்பிச் செல்ல விரும்புகின்றனர்.

வட கொரியாவைச் சேர்ந்த 10 பேர் கொண்ட குடும்பம் ஒன்று, அங்கு வாழ பிடிக்காமல் தென் கொரியாவுக்கு தப்பிச் செல்ல கடந்த 10 ஆண்டுகளாக திட்டமிட்டது. கடல் வழியாக தப்பிச் செல்வதுதான் ஒரே வழி. இதனால் மீனவர்கள் போல் தப்பிச் செல்ல கிம் இல்-ஹியோக் என்பவரின் தந்தை யோசனை கூறினார். இதனால் அவரது குடும்பம் கடற்கரை நகரில் குடியேறியது. அங்கு கிம் இல்-ஹியோக், அவரது சகோதரர் கிம் யி-ஹியோக் ஆகியோர் படகு ஒன்றை வாங்கி மீன்பிடித் தொழிலை கற்றனர். அடிக்கடி கடலுக்கு சென்று அங்கு கடற்படையின் ரோந்து பணி விவரங்களை உளவு பார்த்தனர்.

இவர்களின் திட்டம் நிறைவேறுவதற்குள் கிம் சகோதரர்களின் தந்தை இறந்து விட்டார். கடந்த 2023-ம் ஆண்டு மே 6-ம் தேதி மஞ்சள் கடலில் லேசான புயல் உருவாகியது. அந்த நேரத்தில் ரோந்து பணி தீவிரமாக இருக்காது. மேலும், கடல் தெளிவு இல்லாமல் மங்கலாக இருப்பதால் ரேடார் கண்காணிப்பில் இருந்தும் எளிதாக தப்பிக்கலாம். கிம் சகோதரர்களின் குடும்பம் இரவு ரோந்து போலீஸாருக்கு லஞ்சம் கொடுத்து தங்கள் பயணத்தை தொடங்கினர்.

கிம் இல்-ஹியோக்கின் 5 மாதக் கர்ப்பிணி மனைவி உட்பட அந்தக் குழுவிலிருந்த பெண்கள் மற்றும் 2 குழந்தைகள் முதலில் கண்ணிவெடிகள் நிறைந்த பகுதியை நடை பயணமாக கடந்து சென்று படகில் ஏறினர். குழந்தைகளை சணல் சாக்குகளுக்குள் மறைத்து வைத்தனர். மீன்பிடி படகு மஞ்சள் கடலில் மிகவும் மெதுவாக பயணித்தது. அப்போதுதான் ரேடார் கண்காணிப்பில் கடலில் ஏதோ ஒரு பொருள் மிதப்பது போல் தெரியும். 2 மணி நேரத்துக்குள் அவர்கள் வடகொரிய கடல் எல்லையை கடந்து தென்கொரிய கடல் பகுதிக்குள் நுழைந்தனர். தென் கொரியாவின் யியோன் பியோங் தீவை நெருங்கியதும், அவர்களை அந்நாட்டு கடற்படையினர் மீட்டனர். தென்கொரியாவில் அந்த குடும்பம் மகிழ்ச்சியாக வாழத் தொடங்கியது. நான்கு மாதங்களுக்குப் பிறகு, சியோலில் கிம் இல்-ஹியோக்கின் மனைவிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால், சில மாதங்களுக்குப் பிறகு, கிம் இல்-ஹியோக்கின் இளைய சகோதரர் கிம் யி-ஹியோக், ஸ்கூபா டைவிங் விபத்தில் இறந்தார். கிம் இல்-ஹியோக் தற்போது தென் கொரியாவில் சமையல் கலைஞராகப் பயிற்சி பெற்று வருகிறார். கடந்த மார்ச் மாதம் இவருக்கு 2-வது பெண் குழந்தை பிறந்தது. இவரது குடும்பம் தற்போது தென்கொரியாவில் சற்று நிம்மதியான வாழ்க்கை வாழ்கிறது.

# பாகிஸ்தான் பிரதமருடன் ஈரான் அமைச்சர் சந்திப்பு

**இஸ்லாமாபாத், ஏப்.27:**



அமெரிக்கா - ஈரான் பிரதிநிதிகள் இடையே கடந்த 11, 12-ம் தேதிகளில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. எனினும் அமைதி முயற்சிக்காக காலவரையின்றி போர் நிறுத்தம் அமல் செய்யப்படுவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்து உள்ளார்.


இந்த சூழலில் ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தலைமையிலான குழு நேற்று முன்தினம் இஸ்லாமாபாத் சென்றது. அங்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீபை ஈரான் அமைச்சர் அராக்சி நேற்று சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின்போது பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் முகமது இஷாக் தார், ராணுவ தளபதி அசிம் முனீர் ஆகியோரும் உடன் இருந்தனர்.

இதுகுறித்து ஈரான் அரசு வட்டாரங்கள் கூறும்போது, "அமெரிக்காவுடன் நேரடி பேச்சுவார்த்தையில் பங்கேற்க மாட்டோம். எங்களது கோரிக்கைகள், நிபந்தனைகளை பாகிஸ்தான் தரப்பிடம் கூறியுள்ளோம். அவர்கள் அமெரிக்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமுக தீர்வை காண முயற்சி செய்வார்கள்" என்று தெரிவித்தன.

இதனிடையே அமெரிக்க அரசின் சிறப்பு தூதர்கள் ஸ்டீவ் விட்காப், ஜெராட் குஷ்னர் ஆகியோர் விமானத்தில் இஸ்லாமாபாத் புறப்பட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, மஸ்கட் மற்றும் ரஷ்யாவில் சுற்றுப் பயணம் செய்து அந்த நாடுகளின் தலைவர்களுடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளார். அவரது ரஷ்ய பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

# இலங்கையில் 22 புத்த பிட்சுகளிடம் ரூ.100 கோடி மதிப்பு போதைப்பொருள் பறிமுதல்



**கொழும்பு, ஏப்.27:**

தாய்லாந்தின் தலைநகர் பாங்காங்கில் இருந்து இலங்கை பண்டார நாயக்கா விமான நிலையம் திரும்பிய 22 புத்த பிட்சுகளிடம் 110 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதன்படி அவர்களிடம் இருந்து ரூ.110 கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் கொண்டு வந்த சூட்கேசின் அடிப்பகுதியில் மறைத்து ஒவ்வொரு புத்த பிட்சுவும் 5 கிலோவுக்கும் அதிகமான அளவில் போதைப் பொருட்கள் வைத்திருந்ததாக கூறப்படுகிறது. உளவுத் தகவலின் அடிப்படையில், போதைப்பொருள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் நேற்று இரவு நடத்திய சோதனையின்போது இது கண்டுபிடிக்கப்பட்டது.

பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வரலாற்றில் இதுவே மிகப்பெரிய போதைப்பொருள் பறிமுதல் சம்பவம் என்றும், அங்கு துறவிகள் பெருமளவு போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டதாக பதிவுசெய்யப்பட்ட முதல் வழக்கு இது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த, பல்வேறு கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி பயிலும் இளம் புத்த துறவிகள் என கூறப்படும் சந்தேக நபர்கள், மேலதிக நடவடிக்கைகளுக்காக கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

# சீனாவின் முக்கிய நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதார தடை

**வாஷிங்டன், ஏப்.27:**

சீனாவின் எண்ணெய் ஆலைகள் மற்றும் கப்பல் நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. ஈரானை பொருளாதார ரீதியில் முடக்கி, அணுசக்தி ஒப்பந்தத்தை ஏற்க வைக்க அமெரிக்கா முயற்சித்து வருகிறது. ஈரானின் முக்கிய வருவாய் ஆதாரமான கச்சா எண்ணெய் ஏற்றுமதியை தடுக்கும் வகையில் அமெரிக்கா செயல்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, ஈரானின் துறைமுகங்களுக்கு அணுகலை கட்டுப்படுத்தும் விதமாக ஹோர்முஸ் நீரிணையை அமெரிக்க கடற்படை கண்காணித்து வருகிறது. இந்த நிலையில், ஈரான் எண்ணெயை கடத்தும் பணியில் ஈடுபட்டுள்ள சீனாவைச் சேர்ந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, 40 கப்பல் நிறுவனங்கள் மற்றும் டேங்கர்கள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. தடை விதிக்கப்பட்டுள்ள டாலியன் துறைமுக நகரில் அமைந்துள்ள ஹெங்லி பெட்ரோகெமிக்கல் நிறுவனத்தின் ஆலை, 2023ஆம் ஆண்டு முதல் ஈரானின் கச்சா எண்ணெயை வாங்கி வருகிறது. இதன் மூலம் ஈரான் ராணுவத்திற்கு நூற்றுக்கணக்கான மில்லியன் டாலர் வருவாய் கிடைத்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஹெங்லி பெட்ரோகெமிக்கல் ஆலை ஒரு நாளுக்கு சுமார் 4 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெயை சுத்திகரிக்கும் திறன் கொண்டது.

# உக்ரைனில் ரஷியா வான்வழி தாக்குதல்

உக்ரைன் மீது சுமார் 660-க்கும் மேற்பட்ட ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை ஏவி, ரஷியா சனிக்கிழமை அதிகாலை நடத்திய வான்வழி தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர்; 30-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ரஷியா சனிக்கிழமைக்கு முந்தைய ஒரே இரவில் 619 ட்ரோன்கள், 47 ஏவுகணைகளைப் பயன்படுத்தி, தாக்குதலை நடத்தின. இதில் 580 ட்ரோன்களும், 30 ஏவுகணைகளும் சுட்டு வீழ்த்தப்பட்டதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது.

எஞ்சிய ரஷிய ட்ரோன்கள், ஏவுகணைகள் தாக்கியதில், தென்கிழக்கு உக்ரைனின் டினிப்ரோ நகரில் உள்ள பல அடுக்குமாடி குடியிருப்புகள் சரிந்து விழுந்தன. இடிபாடுகளுக்கு இடையே சிக்கி உயிரிழந்த 4 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. மீட்புப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே, அதே இடத்தில் மீண்டும் பகல் நேரத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதில் மேலும் ஒருவர் உயிரிழந்தார். ரஷியாவின் இத்தகைய தொடர் தாக்குதல்களால் கரும்புகை மண்டலமாக காட்சியளித்த டினிப்ரோவில் காற்றின் தரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

# அமெரிக்க அதிபர் பங்கேற்ற விருந்தில் துப்பாக்கிச்சூடு: பத்திரமாக வெளியேறிய ட்ரம்ப்!

**வாஷிங்டன், ஏப்.27:**

வெள்ளை மாளிகை பத்திரிகையாளர்களின் விருந்து விழாவில் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. இந்நிலையில், இதில் பங்கேற்ற அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக அதிகாரிகள் புடைசூழ பத்திரமாக வெளியேற்றப்பட்டார்.

இந்த விருந்து விழா வாஷிங்டனில் உள்ள ஹில்டன் நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்றது. இதில் அதிபர் ட்ரம்ப், அவரது மனைவி மெலினா ட்ரம்ப், துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் உள்ளிட்ட முக்கிய அமெரிக்க தலைவர்கள் பலர் பங்கேற்றனர். இதில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த பாதுகாப்பு அதிகாரியை நோக்கி தனியொரு நபர் துப்பாக்கிச்சூடு நடத்தி உள்ளார். இதையடுத்து பாதுகாப்பு கருதி அதிபர் ட்ரம்ப் மற்றும் முக்கிய தலைவர்களை பாதுகாப்பு படையினர் பத்திரமாக அந்த விருந்து விழாவில் இருந்து வெளியேற செய்து, அழைத்து சென்றனர்.

என்ன நடந்தது? - வாஷிங்டனில் உள்ள ஹில்டன் நட்சத்திர ஹோட்டலில் வெள்ளை மாளிகை பத்திரிகையாளர்களுக்கான ஆண்டு விருந்து நடைபெற்றது. இதில் ட்ரம்ப் பங்கேற்றார். அப்போது ஆயுதங்களுடன் வந்த நபர் ஒருவர் பாதுகாப்பு கட்டமைப்பை கடந்து செல்ல முயன்றுள்ளார். அப்போதுதான் தன் வசம் இருந்த ஷாட்-கன் துப்பாக்கியால் பாதுகாப்பு பணியில் இருந்து அதிகாரி மீது சுட்டுள்ளார். அந்த சப்தம் கேட்டு விருந்து கூடத்தில் இருந்தவர்கள் மேசைக்கு கீழே தஞ்சம் அடைந்தனர். தொடர்ந்து பாதுகாப்பு அதிகாரிகள் புடைசூழ அந்த விருந்தில் பங்கேற்ற ட்ரம்ப் வெளியேறினார்.

தாக்குதல் நடத்திய நபர் யார்? -இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் உலக அளவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில், இந்த தாக்குதலை நடத்தியது யார் என்ற விவரம் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக ட்ரம்ப் தனது சமூக வலைதள பதிவில் கூறியுள்ளதாவது:

துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். நிலைமையை சீராக்கும் வகையில் களத்தில் துறை சார்ந்த அதிகாரிகள் பணியாற்றி வருகின்றனர். பாதுகாப்பு அதிகாரிகளின் பணி அற்புதமானது. துணை அதிபர் உள்ளிட்ட அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர்.

ஆயுதங்களுடன் ஒரு நபர் பாதுகாப்பு அதிகாரிகள் இருந்த பகுதிக்குள் நுழைய முயன்றுள்ளார். அப்போது அவரை அதிகாரிகள் தடுத்து நிறுத்தி உள்ளனர். இதில் ஒரு அதிகாரி மீது துப்பாக்கி குண்டு பாய்ந்தது. இருப்பினும் அவரது கவச உடை தாக்குதலில் இருந்து அவரை காத்துள்ளது. இந்த தாக்குதலுக்கான காரணம் என்ன என்பது விசாரணையில் தான் தெரியவரும் என தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலை நடத்தியது 31 வயதான கோல் தாமஸ் ஆலன் என தெரியவந்துள்ளது. அவர் கலிபோர்னியாவை சேர்ந்தவர் என்பது உறுதியாகி உள்ளது. அவரது புகைப்படமும் இப்போது வெளியாகி உள்ளது. தாக்குதல் சம்பவத்தின் வீடியோ காட்சியை ட்ரம்ப் தனது ட்ரூத் சோஷியல் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

கடந்த 2024-ல் ட்ரம்ப்பை கொல்வதற்கான முயற்சி இரண்டு முறை நடைபெற்றது. இதில் பென்சில்வேனியாவில் நடைபெற்ற தாக்குதலில் அவர் காயமடைந்தார். தற்போது தாக்குதல் நடந்த ஹில்டன் ஹோட்டலுக்கு வெளியே கடந்த 1981-ல் முன்னாள் அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. அதில் அவர் காயமடைந்தார்.

# “ரவுடிகளை; பாலியல் குற்றவாளிகளை வேட்டையாடி பிடிக்கும்” பிரதமர் மோடி உறுதி



# இந்தியா - நியூசிலாந்து இடையே இன்று தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்து - பியூஷ் கோயல்

# ஜூன் 1-ந்தேதி மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களை வழங்க நடவடிக்கை

# தமிழகத்தில் ஏப்.30 முதல் 3 நாட்களுக்கு கனமழை!

# குளிரூட்டும் ஜாக்கெட் குஜராத்தில் புதிய முயற்சி


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 27.04.2026 திங்கட்கிழமை இலவச இ-பேப்பர்